


# வாழ்க்கையின் சுவடுகள்

## வல்வையூரான் சிறுகதைகள்

வ. ஆ. தங்கவேலாயுதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் சுவடுகள்

## வல்வையூரான் சிறுகதைகள்

வ. ஆ. தங்கவேலாயுதம்

வெளியீடு
**தமிழினி பதிப்பகம்**
பிள்ளையார் வளவு, முதலாம் பிரிவு
மல்லாவி, யோகபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. இந் நூலின் உள்ளடக்க மானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்

இலங்கை தேசிய நூலக வெளியீட்டில் உள்ள பட்டியல் தரவு

தங்கவேலாயுதம். வ. ஆ

வாழ்க்கையின் சுவடுகள் - வ. ஆ. தங்கவேலாயுதம்

யோகபுரம். ஆசிரியர், 2005

ப. 96 : ச.மீ 21

ISBN 955-99504-0-1 விலை : ரூபா 150.00

i. 894.8113 டிடிசி 22 ii. தலைப்பு

1. தமிழ் இலக்கியம்

| | | |
|---|---|---|
| Title | : | **VAZKAIYIN SUVADUGAL** |
| Subject | : | Short Stories - Collection of Short Stories - |
| Author | : | V.A. Thangavelautham<br>Pillaiyar Valavu, Unit - 1,<br>Mallavi, Yogapuram. |
| Publisher | : | Author |
| Cover | : | Gnanaguru |
| Copyright | : | Author |
| First Edition | : | December 2005 |
| ISBN | : | 955-99504-0-1 |
| Price | : | 150.00 |
| Pages | : | XII + 96 |
| Printers | : | Techno print, Colombo.<br>Tel : 0777-301920 |


# ஒரு பரிமாணம் - ஒரு பரிணாமம்

ஒரு எழுத்தாளனுக்குரிய தகுதி அவரின் எழுத்தின் கனதியிலும், எடுத்தாளும் விசயங்களின் விசாலத்திலுமே தங்கியிருக்கிறது. ஒரு கலைஞனின் படைப்பில் காணப்படும் உருவமும் உள்ளடக்கமுமே அக் கலைஞனது முகத்திற்கும் முகவரிக்கும் கட்டியம் கூறுகின்றது. இப்படி ஒவ்வொரு சிருஷ்டிகர்த்தாவினதும் ஆற்றல் வேர்களே அவர்களை சமூகத்திற்கு அடையாளப்படுத்துவதோடு அவர்களின் காலப்பதிவுக்கும் காரணமாகின்றது.

அந்த வகையில் "வாழ்க்கையின் சுவடுகள்" எனும் நூலின் ஆசிரியரான ஆறுமுகம் தங்கவேலாயுதம் அவர்களை இந் நூலை மட்டும் கருத்திற்கொண்டு அவரை ஒரு எழுத்தாளராகவோ சிறுகதை ஆசிரியராகவோ மட்டும் வகுத்துக்கொள்ள முடியாது. ஏனெனில் அவருக்குப் பல்வேறு முகங்கள் உண்டு. அந்தப் பல்வேறு முகங்களிலும் பன்முகத் திறமைகள் உண்டு. அந்தப் பன்முகத்திறமைகளில் பரிமாணமும் உண்டு. பரிணாமமும் உண்டு. பல்வேறு துறைகளிலும் சுழியோடிக் கொண்டிருக்கும் இவரை விழிமேய்ச்சல் செய்பவர் எவரும் ஒப்புக் கொள்வர்.

அரச அஞ்சல் திணைக்களத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிக்கொண்டு கலைத்துறையில் குறிப்பாக நாடகத்துறையில் 60-70 களில் தடம் பதித்தார். பின்னாளில் தான் ஒரு படைப்பாளியாக அவதாரம் எடுக்க இருப்பதை "பிரசவம்" என்கின்ற பெரும் சுமையோடு பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கின்ற பெண்ணின் பாத்திரத்தில் வ.ஆ.த. முதன் முதலாக "சங்கிலியன்" நாடகத்தில் தோன்றி சூசகமாகச் சொல்லி வைத்தார்.

அதன் பின் "பறவைகள்", "டயல் எம் போர் மேர்டர்" கலைப்படைப்புக்கள் உருவாவதற்கு பின்னணியில் உறுதுணையாக இருந்ததோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லதோர் வீணை"யின் மூலம் தரமான தயாரிப்பாளராகவும் பரிமளித்-தார். தலை நகரில் இருந்து தொழிலின் நிமித்தம் கிழக்கு நோக்கி அவர் பயணப்பட்ட போதும் அவரது கலை வேட்கை மட்டக்களப்பு கலை வட்டத்துடன் இணைந்து தன் கலைத்துறைப் பங்களிப்பை முன்னெடுத்துச் செல்லத்தவறவில்லை.

எண்பதுகளில் காலஞ்சென்ற எஸ்.எஸ். கணேச பிள்ளையின் "அசட்டு மாப்பிள்ளை", "சண்டியன் சின்னத்தம்பி" ஆகிய நகைச்சுவை நாடகங்-களின் மூலம் மேலும் சில அசத்தல்கள் அப்போதும் அவர் தாகம் தீர்ந்த-தாக இல்லை. தமிழகத்து மண்ணைத் தரிசிக்கிறார். ஆனால் அந்தத் தரிசனத்தின்போது அவருள் ஒரு மாற்றம் இழையோடியது. அதற்குக் காரணம் ஈழத்தமிழ்ச் சமுதாயத்தின் இன்றைய அவலங்களுக்குப் பெரும் காரணமாயிருக்கும் இனப்பிரச்சனையின் தோற்றுவாய். அதன் காரணமாக தமிழகத்திலும் பாண்டிச்சேரியிலும் இவர் பிரசவித்த படைப்புக்களில் அடக்குமுறைக்கு எதிரான கருத்துக்களே மேலோங்கி இருந்தது. தரமான நடிகர்கள் வரிசையில் கணிக்கப்படும் நாசர் கூட இவரது நாடகத்தில் நடித்தமை குறிப்பிடத்தக்கது.

சமூகக் கடப்பாடு இல்லாத எவரையும் எழுத்தாளனாகவோ கவிஞ-னாகவோ, கலைஞனாகவோ கணிக்க முடியாது. அதன் காரணமாக கடந்த காலங்களில் இவரது வானொலி, மேடை, தொலைக்காட்சி ஆக்கங்கள் அனைத்தும் தமிழ் மண்ணின் அவலங்களைத் தொட்டுக் காட்டுவதாகவும் சுட்டிக்காட்டுவதாகவுமே அமைந்தன. அவைகளை இந்நூலில் உள்ள கதைகளைச் சுவைக்கும் சுவைஞர்கள் எளிதில் புரிந்து கொள்வர்.

பெயருக்கு முன்னால் தன் ஊர்களைச் சேர்த்துக் கொள்பவர்கள் எல்லாம் தன் ஊருக்குப்பேர் சேர்த்துக் கொள்ளாவிடினும் தன் பெயருக்குப் பேர் சேர்த்துக்கொள்கின்றார்கள். இன்னும் சிலர் தன் ஊருக்கும் பெயருக்கும் பேர் சேர்த்துக் கொள்ளாதது மட்டுமன்றி, தன் சமூகத்திற்கும் பிரயோசனமற்றவர்களாக வலம் வருகின்றனர். அந்த வகையில் வ.ஆ. தங்கவேலாயுதம் அவர்கள் தன் பெயருக்கு முன்னால் ஊரைச் சேர்த்துக் கொள்ளாமல் வடமராட்சி என்னும் இராஜபேட்டையின் கிரீடத்தில் மேலும் முத்துக்களைப் பதிப்பது போல் "வல்வையூரான்" என்ற புனை பெயரில் இருந்து கொண்டு ஊடகத்துறையிலும் ஊர்வலம் நடத்துகின்றார்.



ஒரு காலத்தில் தொழிற்சங்கவாதியாக இருந்து வர்க்க ரீதியான சிந்தனையுடன் செயற்பட்ட இவர், இலங்கை கலைக்கழகத்தின் தேசிய நாடக சபையில் ஓர் உறுப்பினராக தற்போது பணியாற்றுகிறார் என்றால் அவரது செயற்பாடுகளின் ஆழ அகலங்களை அலசிப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை எனலாம்.

வ. ஆ. த. வின் "வாழ்க்கையின் சுவடுகள்" எனும் நூல் அவரது பன்முக ஆற்றல்களின் வெளிப்பாடுகளில் ஒன்று. மீண்டும் சொல்கிறேன் இது இவரது வளர்ச்சியின் பரிமாணம் - பரிணாமம்.

**வாழ்த்துக்களுடன்**

**கலைஞானி கலைச் செல்வன்**

**தலைவர்**

**தமிழ் நாடக விழாக்குழு**

***26 — 02 — 2005***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பல்கலைக்கழக தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர்

திரு. கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் வழங்கிய

## அணிந்துரை

நண்பர் தங்க வேலாயுதத்தை எனது "புகுந்த வீடு" வழியாக எனக்குத் தெரியும். வல்வெட்டித்துறை எனும் பட்டின நகரத்துடன் பொதுவாகச் சார்த்திப் பேசப்படுவதான செயற்பாடுகளிலே ஈடுபடாது ஆனால் அந்த ஊரவர்களுக்குரிய ஒரு அடிப்படைக் குணத்தை - புதிய அனுபவங்களுக்கு முன்னின்று முகம் கொடுத்தலை இயல்புநிலையாக ஆக்கிக் கொள்ளும் பண்பினை இவரும் தன் வாழ்க்கையின் போக்காகக் கடைப்பிடிப்பவர்.

நண்பர் தங்கவேலாயுதத்தின் வாழ்க்கை பன்முக அனுபவங்களை பல தளங்களில் வைத்துப் பார்த்துள்ள ஒன்று. உண்மையில் இங்கு தரப்பட்டுள்ள சிறுகதைகள் எல்லாமே தங்கவேலாயுதத்தின் வாழ்க்கையின் சுவடுப்பதிவுகள்தான். நிஜங்களைப் புனைகதைகளாக்குகிறார்.

தங்கவேலாயுதத்தின் சிறுகதைகளை வாசிக்கும் பொழுது அவரது வாழ்க்கை அனுபவங்களின் முத்திரையே வலுவுடன் விழுந்துள்ளது. இந்தக் கதைகளினூடே ஒரு "மானுடத்தேடல்" மிகுந்த வலுவுடன் வெளிவருகின்றது. நண்பர் தங்கவேலாயுதம் வாழ்க்கையை மானுட நிலைகள் வெளிப்படுவதற்கான சூழமைவாகவே காண்கின்றார்.

நண்பர் தங்கவேலாயுதத்தின் பிரதான கலையார்வத்துறை நாடகம் தான். எனவே அவரது புனைகதைகள் எழுத்துச் சிலுசிலுப்புகள் அற்ற வாழ்க்கையின் "நாடகத்துவ" கணங்களையும் சம்பவங்களையும் காட்டி நிற்கின்றன. அந்த வகையில் இந்தக் கதைகளினூடே ஒரு நாடகத்தன்மை அதாவது பாத்திரங்களின் அசைவியக்கத்தில் ஏற்படும்



அதிர்வுகள் துல்லியமாகத் தெரிகின்றன. நண்பர் தங்கவேலாயுதம் அவர்களின் "வாழ்க்கையின் சுவடுகள்" அவரது ஆளுமையின் ஆழ அகலத்தையும், மனித சிரத்தையையும், தேடலையும் நன்கு வெளிக் கொணர்கின்றன. திரு. தங்கவேலாயுதத்தின் அரங்க சாதனைகளுக்கான தளமாக அவரது "வாழ்க்கையின் சுவடுகள்" காட்டும் இந்த அனுபவங்கள் அமையும் என்றே கருதுகின்றேன்.

ஒரு நாடகக்காரனின் இலக்கியப் படைப்பிலும் அந்த மானுடத் தேடலே மேலோங்கி நிற்கின்றது. திரு. தங்க வேலாயுதத்திற்கு என் வாழ்த்துக்கள்.!

**கா. சிவத்தம்பி**
**நடராஜகோட்டம்**
**வல்வெட்டித்துறை**
***25 — 02 — 2005.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

அன்றைய கால கட்டத்தில் எழுதத் துடித்துக் கொண்டிருந்த என்போன்ற பலருக்கு "தினபதியின் தினமொரு சிறுகதைத்திட்டம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. அந்தச் சீரிய திட்டத்தின் மூலம் எழுத்துலகில் அடியெடுத்து வைத்தவர்களில் நானும் ஒருவன்.

29-12-67 இல் எனது முதல் கதை "அனுபவம் புதுமை" என்று பெயரில் "தினபதி" தினமொரு சிறுகதைத்திட்டத்தின் மூலம் பிரசுரமாகியது அதனைத் தொடர்ந்து பல கதைகள் தினபதி, ராதா பத்திரிகைகளில் பிரசுரமாகின.

தினபதி - சிந்தாமணி பத்திரிகைகள் திருவள்ளுவர் ஆண்டை முன்னிட்டு திருக்குறள் ஆதாரக் கதைப் போட்டிகளை நடத்தின. 1969 இல் நடாத்தப்பட்ட முதல் இரு போட்டிகளிலும் பரிசுக்குரிய கதைகளாக "ஏழையின் கருணை", "கவரிமான்" ஆகியன தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுப்பணத்தையும் பெற்றுத் தந்தது.

நான் இளைஞனாக இருந்த காலத்தில் என்னோடு ஊறிப் போய் விட்டிருந்த முற்போக்குக் கருத்துக்கள், கொள்கைகளே என் படைப்புக்களாக வெளிவந்தன. நான் பார்த்துப் பேசிப் பழகியவர்களே என் கதை மாந்தர்களாயினர். ஒரு சில கதைகளில் என் வாழ்க்கையின் அனுபவங்கள் கூடப் பின்னிப் பிணைந்திருக்கும்.

"வாழ்க்கையின் சுவடுகள்" சிறுகதைத் தொகுப்பில் தினபதி, சிந்தாமணி, ராதா, ஈழநாதம் ஆகிய பத்திரிகைகளிலும், சுடர், அஞ்சலி, ரோஜாப்பூ, வெளிச்சம் சஞ்சிகைகளிலும் வெளியாகிய ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன.



93 இல் எனது சிறுகதைத் தொகுப்பினைக் கொண்டுவர எண்ணினேன். "எதனாலோ" அது தடைப்பட்டுப்போயிற்று. அப்பொழுது எனது சிறுகதைத் தொகுப்பு வெளியாகி இருந்தால் எனது கன்னிப் படைப்பு உட்பட ஆரம்பகாலப் படைப்புக்கள் அதில் சேர்க்கப்படாமல் போயிருக்கும். காரணம் அந்தக் கதைப் பிரதிகள் அப்போது என்னிடம் கைவசம் இருக்கவில்லை. யுத்தத்தின் காரணமாக என்னிடமிருந்த எனது ஆக்கங்கள் தீயோடு சங்கமமாகி விட்டன. 20 வருடங்கட்குமேலாக "நாடோடி"யாக அலைந்து திரிந்து விட்டு மீண்டும் கொழும்பிற்கு வந்து விட்ட பின்பே தேசிய சுவடிகள் திணைக்களத்தில் எனது பழைய சில பிரதிகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பார்கள். எனக்கும் இது பொன் குஞ்சுதான்.

எனது அறுபதாவது வயதில் எனது முதல் தொகுதி ஒன்றினை இப்பொழுதாவது கொண்டுவர முடிந்ததில் எனக்கு மகிழ்ச்சியே இந்நேரத்தில் தினபதி பத்திரிகையின் மூலம் தினமொரு சிறுகதைத் திட்டத்தினை உருவாக்கி நூற்றுக்கணக்கானவர்களை எழுத்தாளர்களாக உருவாக்கி விட்ட, அறிமுகம் செய்த அமரர் எஸ்.டி. சிவநாயகம் ஐயா அவர்களுக்கும், எனது படைப்புக்களை அறிமுகம் செய்து அன்றிலிருந்து இன்றுவரை எனக்கு அறிவுரைகள் ஆலோசனைகள் வழங்கி வருகின்ற எனது எழுத்துலக ஆசான் இணுவையூர் திரு.கே.எஸ். ஆனந்தன் அவர்களுக்கும்; எனது ஆக்கங்களைப் பிரசுரித்த பத்திரிகைகள், சஞ்சிகைகளின் ஆசிரியப் பெருந்தகைகட்கும் என் நன்றிகள்.

எனது "வாழ்க்கையின் சுவடுகள்" சிறுகதைத் தொகுப்பிற்கு அணிந்துரை வழங்கிய என்றும் என் பெருமதிப்பிற்குரிய யாழ் பல்கலைக் கழக தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர் திரு. கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கட்கும் என்றென்றும் என் நன்றிகள்.

மற்றும் என்னை அறிமுகம் செய்து வைத்துள்ள கலாபூஷணம் கலைச் செல்வன் அவர்கட்கும் மிகுந்த நன்றியைத் தெரிவிக்கும் கடப்பாடு எனக்குண்டு. எழுபதுகளில் கொழும்பு நாடக உலகில் தடம்பதித்த நான், ஏறக்குறைய 30 வருடங்கட்கு மேலாக தலை நகரின் தொடர்புகள் எதுவுமின்றி இருந்து மீண்டும் 2002 இல் இங்கு கால் பதித்தபோது என்னை அன்போடு அரவணைத்து நாடக உலகில் காலூன்றி நிற்கக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்துத்தந்த அந்தச் செயற்பாட்டினை என் வாழ்நாளின் என்றுமே மறக்க முடியாது. ஆகவே அவருக்கு மீண்டும் என் நன்றிகள்.

கணனியில் அச்சுக்கோர்ப்புச் செய்து தந்த செல்வி. பொன்னையா யோகராணி, மற்றும் அச்சுப்பதிப்புச்செய்து தந்த ரெக்னோ அச்சகத்தின் திரு. கேசவன் அவர்களுக்கும் என் நன்றிகள்.

இந் நூலை அங்கீகரித்து நூலாக்க உதவிய தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் அனுசரணைக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.


வ.ஆ. தங்கவேலாயுதம்

*பிள்ளையார் வளவு, 1ஆம் பிரிவு*

*மல்லாவி, யோகபுரம்*


## உள்ளே...


| | |
|---|---|
| அனுபவம் புதுமை! | 01 |
| புத்துலகம் | 05 |
| இன்பம் எங்கே? | 11 |
| இதுதான் வாழ்வு | 15 |
| வாழ்க்கை என்பது...? | 20 |
| அன்புத் தெய்வம் | 24 |
| ஏழையின் கருணை | 29 |
| கவரிமான் | 36 |
| அவள் வெளிச்சத்துக்கு வருகிறாள்! | 42 |
| பிள்ளை மனம்! | 46 |
| பெத்த மனம் பித்து! | 52 |
| பெண் எனும் தெய்வம் ! | 58 |
| உலகம் வெளிக்குது ! | 62 |
| ஊனங்கள் உடலிற்தான் ! | 66 |
| ஐம்பதிலும் ஆசை வரும் | 74 |
| சிங்கள நண்பனுக்கு ஒரு கடிதம்... | 79 |
| கொட்டியா | 86 |
| நான் வன்னியை விட்டிட்டு வரமாட்டன் ! | 89 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம் புதுமை!

அவமான உணர்வு அவனை அணு அணு-வாக அரித்துக் கொண்டிருந்தது. போதாக்குறைக்கு கடையில் நிரம்பி வழிந்த பெண்கள் கூட்டத்தின் பார்வை, நாறல் பழத்தை மொய்க்கும் ஈக்கும்பல் போல அவனைச் சல்லடை போட்டுத் துளைத்தது. சட்டைப் பைக்கட்டில் வைத்த கை வைத்தபடியே வளையல் கடையை விட்டு வெளியேறினான் ராஜன்.

அவன் மனதில் கட்டி எழுப்பியிருந்த கற்பனைக் கோட்டைகள் எல்லாம் தகர்ந்து-போன நிலையில் வெறுங்கையோடு அறைக்குத் திரும்பியிருந்தான்.

மருதானையில் உள்ள ஒரு வீட்டில் மூன்று நண்பர்களோடு சேர்ந்து ஒரு அறை-யில் வசித்து வந்தான் ராஜன். உத்தி-யோகத்திற்காக பிறந்த ஊரை விட்டு பலநூறு மைல்களுக்கப்பால் வாழும் ஜீவாத்துமாக்களுள் அவனும் ஒருவனாகத்-தான் இருந்தான். அந்த வாழ்வு வந்தே ஒரு மாதம் தான் முடிவு பெற்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குள் அவனுக்குக் கிடைத்த அனுபவம் சொல்ல முடியாத அளவு வேதனை தருவதாயிருந்தது.

கட்டிலில் படுத்தவாறே கண்களை மூடிக்கொண்டான். தன்னுடைய முதல் மாதச் சம்பளத்தை எதிர்பார்த்திருக்கும் அன்னையின் முகமும், அவனது அருமைத் தங்கைகளின் முகங்களும் அவன் மனக் கண்களில் தோன்றின. அவன் எண்ண அலைகள் கடந்த கால நினைவுகளை நோக்கிப் பின்னிழுத்துச் சென்றன.

"அம்மா என்னைப் படிக்கவைக்க எவ்வளவு பாடுபட்டாய். படித்துவிட்டு உழைப்பில்லாமல் வாழ்ந்து, நீ கஷ்டப்பட்டு உழைக்கும் உழைப்பில் வாழ இனியும் நான் விரும்பவில்லை. நான் கடலுக்குப் போகின்றேன்" எனக் கிளம்பினான் ராஜன்.

"வேண்டாண்டா ராஜா. உங்கப்பாவை உயிரோடு கடலுக்குக் கொடுத்த பாவியடா நான். நீயுமா கடலுக்குப் போறன் என்கிறாய். உங்கப்பா சொன்னாப்போல ஒரு உத்தியோகத்திலை சேர்ந்து விட வேண்டும் எண்டுதானடா நான் சன்னதியானை தினமும் வேண்டுகிறன்" என்று கண்ணீர் சிந்தினாள் அவனைப் பெற்ற அன்னை.

அவள் கண்ணீரைக் கண்டபோதே தந்தையின் கொடிய மறைவு அவன் நினைவில் நிழலாடியது. கொட்டும் மழை பெய்து ஓய்ந்த மறுநாள் கடலில் போன அவன் தந்தை மீண்டும் திரும்பவேயில்லை. கடற்கரையில் வாழ்ந்த பல குடும்பங்கள் கண்ணீர் சிந்திய அந்தச் சோக நாள் மூன்று வருடங்கட்கு முன்பு நடந்தது. அன்று அவன் தாயும் தங்கைமாரும் அடைந்த வேதனையை ஆற்ற முடியாது தத்தளித்தவன் இன்று தானே கடலுக்குப்போக நினைத்தபோது பெற்றவள் தடுத்து நிறுத்துவதில் நியாயம் இருப்பதாகவே தோன்றிற்று. அவன் முடிவை மாற்றிக் கொண்டானாயினும் தாயின் அவல வாழ்வுக்கு விடிவு காணவேண்டும் எனத் தவித்தான்.

தினசரி காலையில் எழுந்ததும் வல்வெட்டித்துறைக் கடற்கரைக்குச் செல்வதும், அங்கே வரும் கடல் படுதிரவியமாம் மீனை வாங்கிவந்து சந்தையில் விற்பதும் பின்னர் வீடு வருவதும் அவன் தாயின் அன்றாட வாழ்வாகி விட்டதைக் காண அவன் உள்ளம் வேதனையால் வெந்து கருகியது.

வருடத்தில் நான்கு, ஐந்து அரசாங்கப் பரீட்சைகள் நடைபெறுகின்றன. அத்தனைக்கும் பணம் கட்ட வசதி அவனிடம் இல்லை. பெற்றவள் எங்கோ கூப்பனை அடகுவைத்து பெற்ற இருபத்தைந்து



ரூபாவை பரீட்சைப் பணமாகக்கட்டி எழுதுவினைஞர் பரீட்சை எழுதியிருந்தான். அதன் முடிவு தெரிந்தபாடாய் இல்லை. நாட்களை வருடங்களாகக் கழித்துக் கொண்டு வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான் ராஜன்.

குருடனுக்கு பார்வை வந்ததுபோல, கடவுள் இரங்கினதால் அவனுக்கு எழுதுவினைஞர் பரீட்சையில் சித்தி கிடைத்து விட்டது. நேர்முகப் பரீட்சையிலும் தேறி விட்டான். பெற்றவள் வயிற்றில் பால் வார்த்தது போன்று ஆனந்தக் கண்ணீர். மல்க மகனை கொழும்புக்கு வழி அனுப்பிவைத்தாள்.

❑ ❑ ❑ ❑ ❑

"உத்தியோகம் - உத்தியோகம்" என்று கனவு காணும் இளைஞர்கள் உத்தியோகத்துக்கு வந்த பின்பு தான் அவர்களது அவல வாழ்வின் நிலைமையைப் புரிந்து கொள்ள முடியும் என்பதை சில நாட்களுக்குள்ளே உணர்ந்து கொண்டான் ராஜன்.

அலுவலகத்தில் சம்பளப் பணம் பெற்றுக்கொண்டதும் குறைந்த நேர லீவு பெற்றுக்கொண்டு அறைக்கு விரைந்தான். அறை வாடகையையும் சாப்பாட்டுக் கட்டணத்தையும் செலுத்திவிட்டு தாய்க்கும், தங்கைமாருக்கும் தனது முதல் சம்பளத்தில் சில பொருட்கள் வாங்க எண்ணிக் கடைத் தெருவை அடைந்தான்.

அங்கே ஒரு மரத்தடியில் நிறைந்த சனக்கூட்டம். ஒருவன் ஏதோ வித்தை காட்டிக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்துவிட்டு கடைக்குச் சென்றான். தங்கைமார் நளினாவும் சுமதியும் முத்துவளையல்கள் கேட்ட ஞாபகம் வரவே, செட்டியார்தெருவில் உள்ள ஒருவளையல் கடைக்கு சென்றான். அங்கே பெண்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

ஆண் மகன், அதுவும் ஒரு வாலிபன் வளையல்கள் வாங்குவதைப் பற்றி பெண்மணிகளிடையே ஏதோ குசுகுசுப்பேச்சுக்கள் அடிபட்டன. அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. வளையல்களை வாங்கிக்கொண்டு பைக்கட்டில் கையை வைத்துப் பணத்தைத் தேடினான்.

பணம்?...

பணம், மரத்தடியில் கூட்டத்தில் உள்ள யாரோ ஒருவனிடம் பதுங்கிவிட்டது. அவனது நினைவுச் சுழல்கள் சிதறிவிட்டன. உணர்வுகள் மரத்துப்போயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரத்தின் பின் சுய உணர்வு வரவே, தன் நிலையை உணர்ந்து கொண்டான் ராஜன். அன்றைய அனுபவம் அவன் வாழ்க்கை அகராதியில் மனப்பாறையில் செதுக்கப்பட வேண்டிய புதுமையான நிகழ்ச்சிதான்.

அறையை நோக்கிவந்த ராஜனை வரவேற்றது ஒரு கடிதம். அதைப் பிரித்துப் படித்தான். அவனது தங்கைகளான நளினாவும், சுமதியும் தான் கதை எழுதியிருந்தார்கள். அந்தக் கடிதத்தில் வளையல்களைப் பற்றி ஞாபகமூட்டவும் அவர்கள் தவறவில்லை.

"அனுபவம்புதுமை" என்று அவன் வாய் முணுமுணுத்தது. மனம் அழுதது.

"கெட்டும் பட்டணம் போ" என்று சொல்வார்கள். ஆனால் பட்டணங்களில் இருப்பவர்கள் எல்லாருமே கெட்டவர்களாகத்தான் இருப்பார்கள் போலிருக்கிறது" - இப்படி எண்ணித் தன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான் ராஜன்.

தன்னைப் போல் ஏமாறுகிறவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இருக்கத்தானே செய்வார்கள்? - இப்படியும் அவன் மனம் எண்ணிப் பார்க்கத்தான் செய்தது.

தன் குடும்பத்தின் கஷ்டநிலையைப் போக்குவதற்கு,கை நிறையச் சம்பாதிக்கலாம் என்றுதான் அவன் கொழும்புக்கு வந்தான். ஆனால் அவனால் கை நிறையச் சம்பாதிக்க முடியாமல் போனாலும் சம்பாதித்த சிறு தொகையைக்கூட அவனால் பாதுகாக்க முடியவில்லையே!

இது புது அனுபவம் தான். இருந்தாலும் இனி கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டு தன் மனதைத் தேற்றினான். அவன் நெஞ்சிலிருந்து நீண்ட ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

❑ ❑ ❑ ❑ ❑

**தினபதி**
29 - 12 - 67





# புத்துலகம்

**இன்மொழி:**

கௌரவமான ஒரு குடும்பத்தில் பெற்றோரின் அரவணைப்பிலே துன்பமென்றால் என்னவென்று தெரியாது வளர்ந்த நான், கள்ளமில்லா இளஞ்சிட்டாகப் பறந்து திரிந்தேன்.

நான் வளர்ந்து பெரியவளானேன். படிப்பும் வளர்ந்தது. கல்லூரி வாழ்வு முடிந்து சர்வகலாசாலையில் காலடி எடுத்து வைத்தேன். எதிர்காலத்தில் வைத்திய மேதைகளாக, பொறியியல் நிபுணர்களாக, சட்டவல்லுனர்களாக, லேடி டாக்டர்களாக மிளிரப்போகும் மாணவ மாணவிகளின் கும்பலில் நானும் ஒருத்தி.

சாதுக்களாக இருந்த மாணவிகளெல்லாம் தங்களுக்குப் பிடித்தமானவர்களுடன் கைகோர்த்துக் கொண்டு திரிவதை அறவே வெறுத்தவள் நான். ஆனாலும் நானும் ஒரு பெண் பேதை தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் பகுதியில் படித்தவர்களில் எழிலனும் ஒருவர். குடும்ப நிலையை மறந்து, தம்மைப் பெரிதாக எண்ணித்திரியும் சர்வகலாசாலை மாணவர்கள் மத்தியில் அவர் ஒரு எழிலுருவமாகவே திகழ்ந்தார். இவரே என் வாழ்க்கைத் துணைவராகக் கிடைத்து விட்டால்... என எண்ணி-னேன்.

அந்த எண்ணத்திற்கு அடிகோலுவதைப் போல எங்கள் இருவர்க்-கிடையில் ஒரு நெருங்கிய சந்திப்பு நிகழ்ந்தது. ஆரம்பத்தில் கண்-களின் மூலம் எங்கள் வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்ட நாம், நாட்கள் செல்ல செல்ல நெருங்கிப் பழகத் தொடங்கினோம். எனக்குப் பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களை அவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். காலிமுகக்கடற்கரைக்கும், விகாரமகாதேவிப் பூங்கா-விற்கும். அடிக்கடி சென்று, தனிமையில் இருந்து எதிர்காலம் பற்றிய திட்டங்கள் தீட்டுவோம்.

எங்கள் இருவரின் பழக்கத்தினால் தவறுகள் செய்து விடுவோமோ என அஞ்சினேன். அப்போதெல்லாம் "மனதில் களங்கம் இல்லையெனில் நெருங்கிய பழக்கத்தினால் தவறுகள் விளைவதில்லை" என அவர் அடிக்கடி கூறும் வார்த்தைகள் தான் ஆறுதல் அளிக்கும். காலங்கள் மாறின.

அன்று அவரின் பிறந்ததினம். எப்பொழுதுமே கலகலப்பாக இருக்கும் அவர் அன்று மிகவும் சந்தோஷத்தில் மூழ்கி இருந்தார் என்றுதான் சொல்லவேண்டும். ஓர் ஆங்கிலப்படத்திற்குப் போவதற்கு வருமாறு அழைத்தார். அவரின் ஆசையை ஏன் கெடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு செல்ல உடன்பட்டேன்.

படம் ஆரம்பமாகியது. அதில் வந்த காட்சிகள் அவரை மாத்திர-மல்ல, என்னையும் நிலைதடுமாறச் செய்தது. அவரது கைகள் என் கைகளைப் பற்றிக் கொண்டன. கட்டுப்படுத்த முடியாத ஓர் உணர்ச்சித் தவிப்பு. உணர்ச்சிகளுக்குத் தூபமிடும் காட்சிகளைக் கண்டதும் எங்கள் உணர்வுகள் கட்டுப்பாட்டை மீறி நிலை தடுமாறின. கொந்தளிக்-கும் இரு உள்ளமும் உடலும் ஒன்றில் ஒன்று தாபத்தைத் தணிக்கத் துணிந்து தியேட்டரை விட்டு வெளியேறினோம்.

தவறு நேர்ந்து விட்டதை எண்ணிக் கலங்கினேன். ஆனாலும் என்னைத் திருமணம் செய்யப்போகிறவர் தானே என எண்ணி என்னை நானே தேற்றிக் கொண்டேன்.



இருவருடைய படிப்பும் விரைவில் முடிந்துவிடும் இனிமேல் நாம் இன்பமாக வாழலாம் என எண்ணினேன். ஆரம்பத்தில் பயந்து கொண்டிருந்த நாங்கள் சிறிது நாட்கள் செல்ல பயம் தெளிந்து கொண்டோம். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இன்பம் அனுபவித்-தோம்.

"ஆண்கள் செய்யும் தவறுகள் வெளியில் தெரிவதில்லை ஆனால் பெண்கள் செய்யும் தவறுகள் வெளிவரத்தான் செய்கின்றது" என்னும் வாக்கு என்னைப் பொறுத்தவரையிலும் உண்மையாகியது.

சில நாட்களில் என் நிலையை உணர்ந்து கொண்டேன். அவரிடமும் விடயத்தைக் கூறினேன். அச்சங்கொண்ட அவர் கருச்சிதைவு மாத்-திரைகள் பல வாங்கித்தந்தார். வீட்டாருக்கு என் நிலை தெரிந்துவிடக்-கூடாது என்ற எண்ணத்தினால் அவற்றை உட்கொண்டேன்.

பட்டப்படிப்பும் ஓரிரு மாதங்களில் முடிந்தது. அவருக்குத் திருமணம் பேசுவதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் அவர் என்னைக் கைவிடமாட்-டார் என்றே நம்பினேன். ஒரு நாள் அவரிடமே இது பற்றிக் கேட்டேன். சிறிது தடுமாறினார். "இன்மொழி நாமிருவரும் இணைந்து வாழ முடியாது. பெற்றோர்கள் வேறெங்கோ சம்மதம் தெரிவித்து விட்டார்கள். சீதனக்காசைப் பெற்றுத்தான் என்னைப் படிப்பித்தார்களாம்? நான் என்ன செய்ய முடியும்? அவர்கள் சொல்லைத் தட்ட என்னால் முடியாது" என்றார்.

அத்தான் நாங்களிருவரும் உழைத்து அந்தக் கடனைச் செலுத்து-வோம். இந்த அபலையைக் கைவிட்டு விடாதீர்கள்" எனக் கதறினேன். மன்றாடினேன். பலனில்லை.

"என் வயிற்றில் ஏற்பட்ட கர்ப்பத்திற்கு..." என இழுத்தேன்.

"அதற்கு நான்தான் காரணம் என உன்னால் நிரூபிக்க முடியுமா?" என எளிதாக வினாவினார்.

என் நெஞ்சத்தில் சம்மட்டி கொண்டு தாக்குவது போலிருந்தது. இதுவரை காலமும் யாரை என் தெய்வமென, இதயமெனும் பெட்டகத்-திலே பாதுகாத்து வைத்தேனோ அவரே இப்படிக் கூறியபோது, இனி-மேலும் வாழத்தான் வேண்டுமா?' என எண்ணினேன். ஊரவர்களின் ஏச்-சும், பேச்சும், ஏளன வார்த்தைகளும் எப்படிப்பட்டவை என்பது எனக்கு தெரியும். நான் எனது பெற்றோர்களுக்கு அவமானத்தைத் தேடித்தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பவில்லை. படித்தவளாய் இருந்தும் பண்பிழந்த நான் உலகில் உயிர் வாழ விரும்பவில்லை.

"ஆண்டவனால் படைக்கப்பட்ட எம்மை, நாமே அழித்துக் கொள்வதற்கு எமக்கு உரிமை இல்லை" என பல்கலைக்கழக மண்டபக் கூட்டமொன்றில் முழங்கிய நானே தற்கொலை செய்து கொள்ளத் துணிந்தேன்.

எனது எண்ணத்தை செயலாக்க முயன்றேன். பக்கத்தே இருந்த பாழடைந்த கிணறு என்னை "வா....வா..." என்று தன் கரங்களை நீட்டி அழைத்தது. என்னை வளர்த்து ஆளாக்கிய தெய்வங்களை மீண்டும் மீண்டும் பிரியப்போகும் ஏக்கத்தோடு பார்த்தேன். அந்தி மயங்கும் வேளை எனக்கு அனுகூலமாய் இருந்தது. என்னுள் பெரியதோர் போராட்டமே நிகழ்ந்தது. இறுதியில் இனிமேல் வாழ முடியாது என்ற எண்ணமே மேலோங்கியது. அக்கம் பக்கம் பார்த்து விட்டு கிணற்றினுள் குதித்தேன்.

தற்கொலை செய்து கொள்வது இலேசு என்று எண்ணி விடுகிறார்கள். அந்தக் கடைசி நிமிடத்தில் நான் பட்டபாடு. தண்ணீரில் விழுந்த பின்பு யாருமே காப்பாற்ற மாட்டார்களா? என்ற எண்ணமே ஏற்பட்டது. நீந்தத் தெரியாத நான் தண்ணீரினுள் தத்தளித்தபடி மேலும் கீழும் போய் வந்தேன். நினைவு தடுமாறிக் கொண்டே வந்தது. ....பிறகு.......

**தேவன்:** மயக்கும் மாலைப்பொழுது. உலகத்தவர்க்கு உயிர்கொடுக்கும் நெற்கதிர்களையும் அவை அசைந்தாடும் அழகையும் பார்த்து ரசித்துக்கொண்டு வயல் வெளியில் நின்றேன். இன்மொழி அவ்வழியே சென்றாள். அவளைக் காதலியாக அடைவதற்கு எழிலன் கொடுத்து வைத்தவன் என எனக்குள் எண்ணிக்கொண்டேன். ஒரு பெருமூச்சு என் உள்ளத்தில் எழுந்து நின்றது.

உலகத்தையே மறந்து விட்டவள் போன்று சென்று கொண்டிருந்த அவள் பாழுங்கிணற்றண்டை சென்றாள். என்னைப் போல் இயற்கை எழில் பருக வந்திருக்கலாமென எண்ணிக் கொண்டேன். தொலை தூரம் பார்வையை ஓடவிட்ட நான் திடுக்கிட்டுத் திரும்பினேன். தொபீரென்ற சப்தம். அவளைக் காணவில்லை. கிணற்றில் இருந்து தண்ணீர்த் துளிகள் வெளியே தெறித்தன. ஓடிச் சென்றேன். இன்மொழி தண்ணீரில் தத்தளிப்பதைக் கண்டேன். எதையுமே யோசிக்காது கிணற்றினுள் குதித்தேன்.



அவள் கைகளைப் பிடித்து மேலே தூக்கினேன். பயத்தினாற்போலும் என்னையே மூழ்கடிக்கும் அளவிற்குத் திமிறினாள். ஒருவாறு சமாளித்து அவள் கூந்தலைக் கையில் பிடித்து மெதுவாக அவளை மேலே தூக்கினேன். அவர் மூர்ச்சையாகி விட்டாள். அவளைத் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு நான் மேலேறினேன். படிக்கட்டுக்கள் வசதியாக அமைக்கப்பட்டிருந்ததால் எனக்குப் பேருதவியாக இருந்தது.

கஷ்டத்தின் மத்தியில் மேலேறி வந்த நான் உடனடியாக அவளுக்கு முதற்சிகிச்சையை மேற்கொண்டேன். நான் சாரணனாக இருந்ததன் பயனை அப்போதுதான் உணர்ந்து கொண்டேன். செயற்கைச் சுவாசம் அளித்ததன் மூலம் அவளுக்குப் பிரக்ஞை திரும்பியது. சிறிது சிறிதாக அறிவும் வந்தது. பக்கத்தில் யாருமே இல்லாதது ஆறுதலாக இருந்தது. மெதுவாகக் கண்களைத் திறந்தாள்.

சிறிது நேரத்தின் பின் ஓரளவு பழைய நிலைக்கு வந்து விட்ட அவள் விம்மி அழுதாள். தன்னை ஏன் காப்பாற்றினீர்கள் எனக் கதறினாள். தனக்கு ஏற்பட்ட இழிநிலையை எடுத்துக் கூறிய அவள் தன்னால் இனிமேலும் இவ்வுலகில் வாழ முடியாது எடுத்தியம்பினாள்.

பெண்களைக் காதல் என்ற போர்வையில் ஏமாற்றி அவர்களின் வாழ்வை வீணடிக்கும் வீணர்களின் செயலை எண்ணும்போது ஆண் வர்க்கத்தின் மீதே எனக்கு ஆத்திரம் ஏற்பட்டது.

தங்கள் அறியாமையினால் தவறுகள் செய்யும் பெண்கள் மீது இரக்கம் காட்டும் நல்லவர்களில் நானும் ஒருவன். எப்படியும் இன்மொழியை வாழவைக்க வேண்டுமென எண்ணினேன்.

"இன்மொழி உனக்கு விருப்பமானால் உன்னை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன்" என்றேன்.

சிறிது நேரம் வரை இருவரும் எதுவுமே பேசவில்லை. தான் சாதியில் குறைந்தவள் என்றாள். "செத்துக்கொண்டிருக்கும்" சாதியைப் பற்றி எனக்குக் கவலை இல்லை" என்றேன்.

"நான் குற்றமுள்ளவள். எனக்காக உங்கள் வாழ்வைப் பாழாக்காதீர்கள்" என்றாள்.

"குற்றமில்லாத மனிதர்கள் தாம் இந்த உலகத்தில் சந்தோஷமாக வாழவேண்டும் என்றால், இப்போது ஏழடுக்கு மாளிகையில் வாழும் பலரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோசத்தை எங்கே கொண்டு போய்க் கொட்டுவது"? என்ற ஓர் எழுத்தாளரின் வார்த்தைகள் எனக்கு நினைவில் வந்தது.

"தாம் செய்தது குற்றமென்று எப்பொழுது நினைக்கிறார்களோ, அப்பொழுதே அவர்களின் குற்றங்கள் மன்னிக்கப்பட்டு விடும்" என்ற வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டவன் நான்.

தான் செய்து விட்ட தவறினால் இனிமேல் வாழ்வது கூடாது என்று கிணற்றில் விழுந்து உயிர்விடத் துணிந்தபோதே இன்மொழியின் குற்றங்கள் நீங்கி விட்டன. பள்ளிப்பருவத்தில் தெரியாமல் செய்த தவறுக்காக வாழ்வை முடித்துக் கொள்வதென்றால் பெண் இனமே இல்லாது போய்விடும்.

"இன்மொழியின் வாழ்க்கை, பெண்குலத்திற்கு குறிப்பாக மாணவிகளுக்கு ஒரு பாடமாக அமையும்" என நினைத்துக் கொண்டேன்.

"உன் உள்ளம் இன்று மாசு நீங்கி மறுவற்று இருக்கின்றது. நீ என்னைப் பொறுத்தவரையில் குற்றமற்றவள்தான்" என்று கூறி அவளை என் இரு கைகளையும் நீட்டி அழைத்தேன். ஓடிவந்து மார்பில் சாய்ந்து கொண்டாள். நான் புத்துலகம் நோக்கிச் செல்வதாக உணர்ந்தேன்.

❑ ❑ ❑ ❑ ❑

தினபதி
31-07-68



# இன்பம் எங்கே?

**டாக்டர்:** கறுவாக்காட்டுப் பகுதியில் நான் நடத்திவரும் வைத்தியசாலைக்கு பகல் வேளைகளில் நோயாளிகள் வருவது மிகவும் குறைவு. ஊரடங்கிய வேளையில் இரவு நேரத்திலே தான் என்னைத் தேடி வருவார்கள். வியப்பாகவே இருக்கலாம். மேகரோக வைத்திய நிபுணனான என்னிடம் வருவதை மற்றவர்கள் கண்டு கொண்டால் தங்கள் மானம் காற்றில் போய்விடும் என்ற காரணத்தினால் பதுங்கிப் பதுங்கி இரவில் வருவார்கள். பெண்களும் ஆண்களும் ஏன் கல்லூரி மாணவ மாணவிகளும் கூட என்னை நாடி வரும்போது நான் மிகவும் வேதனைப்படுவேன். நோயாளிகள் அதிகமாக வரும்போது என்னைப் போன்ற டாக்டர்களுக்கு பணம் குவியும் தான். ஆனால் பயங்கரமான இந்தப் படுகுழியிலே இவ்வளவு பேர்களும் விழுந்து விடுகின்றார்களே என்று எண்ணும்போது...

அன்றொரு நாள் இரவுவேளை. அழைப்பு மணி ஒலிகேட்டு எழுந்து சென்றேன். ஒருவன் மிகவும் கேவலமான நிலையில் நின்று கொண்டிருந்தான். அவன் உடல் பூராவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகிப்போய் துர்நீர் வடிந்து கொண்டிருந்தது. மரணத்தின் வேதனையால் வாடிக்கொண்டிருந்த அவனை ஆறுதலாக அமரச் செய்து முதல் உதவி-களைச் செய்தேன். அவனைப் பார்த்தவுடனேயே நோய் முற்றிவிட்டது என்பதை உணர்ந்து கொண்ட நான் அவனைப் பரிசோதனை செய்தேன், எத்தனையே பேரை மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றிய எனக்கு அவன் நிலை சந்தேகத்தையே ஏற்படுத்தியது. ஒரு சில நாட்களுக்கே அவன் உயிர்வாழ முடியுமென்பதை சந்தேகமறப் புரிந்து கொண்டேன். நோயாளி-களுக்குத் தைரியம் சொல்வது எங்களின் கடமைகளில் முதன்மையானது. பயப்படத்தேவையில்லையெனவும், ஆரம்பத்திலிருந்து நடந்தவைகளை என்னிடம் ஒளிக்காமல் கூறுமாறும் கேட்டுக் கொண்டதன் காரணமாக ஒருவிதமான சலிப்போடு கூற ஆரம்பித்தான்.

**ராஜன்:** டாக்டர் என்து வேதனை நிறைந்த வெட்கப்பட வேண்டி-யவற்றைச் சிறிது ஆறுதலாகக் கேளுங்கள். நல்லதொரு குடும்பத்தில் தோன்றிய நான் தாயாகிய தெய்வத்தைப் பிறந்த வீட்டிலேயே பறிகொடுத்த-பாவி. ஆனால் தாய்க்குத் தாயாகவும், தந்தைக்குத் தந்தையாகவும் கவலையின் நிழலே என் மீது படியாதவாறு பாதுகாத்து வளர்த்தார் என் தந்தை. மறுமணம் செய்து கொண்டால், சிற்றன்னை என்னைக் கொடுமைப்படுத்திவிடக்கூடும் என்ற காரணத்தினால் அதைப்பற்றி எண்ணிக்கூடப் பார்க்கவில்லையாம் அவர். செல்லப்பிள்ளையாகவே என்னைப் பேணி வளர்த்தார். கல்வி கற்கவேண்டிய பராயமும் வந்தது. பற்றி வாழ்க்கையில் கள்ளமில்லா உள்ளத்தோடு நல்லபடியாக வளர்ந்து வந்தேன். எண்ணங்களும் வளர்ந்தன. கெட்ட நண்பர்களின் சேர்க்கை-யால் ஏற்பட்ட விளைவே அது.

கல்லூரி வாழ்வு எனது வாலிபப் பருவத்துடனேயே சேர்ந்து கொண்டது. பிள்ளை வீட்டில் இருந்தால் படிப்பிற்கு இடையூறு நேருமேயென்ற காரணத்தினால் ஹாஸ்டலில் சேர்க்கப்பட்டேன் ஆரம்பத்தில் சிறிது கடினமாக இருந்த அந்த வாழ்க்கை பழகப் பழக ஒருவித இன்பத்தை ஊட்டுவதாகவே தோன்றியது. சுவரேறிக்குதித்து வார்டனுக்குத் தெரியாமல் இரண்டாவது காட்சிக்குச் செல்லும் நான் புகை பிடிக்கவும், மது அருந்தவும் பழகிக்கொண்டேன். இன்பத்தின் எல்லைவரை சென்றுவிட-வேண்டும், உலகில் உள்ள எல்லா இன்பங்களையும் அனுபவித்து விடவேண்டும் என்று அப்பொழுதே தீர்மானம் செய்து கொண்டேன். கல்லூரி வாழ்வு இவ்வாறு இன்பமாகக் கழிந்தது.



உத்தியோகம் செய்து தான் வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற நியதி எனக்கில்லை. ஆனால் உத்தியோகம் பார்ப்பது மதிப்பு என்ற காரணத்-தினால் உத்தியோகம் ஒன்றில் சேர்ந்து கொண்டேன்.

கொழும்பில் கேட்பார் யாருமில்லாத தனிமையான வாழ்க்கை. நண்பர்கள் சிலரோடு சேர்ந்து நாகரிகம் என்றெண்ணி குடிப்பதை வழக்கமாக்கிக் கொண்டேன். ஒரு நேரக் கஞ்சிக்கே வழியில்லாது பரதவிப்போர் பலர். குடியிருக்கக் குடிசையின்றி தெருவீதிகளில் வாழ்க்கை நடத்துவோர் ஏராளமானோர் - ஆனால் எனது வாழ்வோ பெரிய பெரிய ஹோட்டல்களிலும் விடுதிச் சாலைகளிலுமே கழிந்தது. அப்போது ஏழ்மையில் உழலும் வறியவர்கள் படும் கஷ்டம் எனக்குப் புரிய நியாயமில்லை. ஹோட்டல்களுக்கும் விடுதிச் சாலைகளுக்கும் விஜயம் செய்த எனது வாழ்வு குட்டிச் சுவராவதற்குக் கேட்கவும் வேண்டுமா?

எத்தனை நாளைக்குத்தான் நான் நல்லவனாக நாடகமாட முடியும்? எனது திருவிளையாடல்களை அப்பாவும் சிறிது சிறிதாகப் புரிந்து கொண்டார். காலாகாலத்திலே ஒரு கலியாணத்தைச் செய்து வைத்தால் பிள்ளை திருந்தி விடுவான் என எண்ணினார் போலும். திருமணமும் சிறப்பாக நடந்தேறியது.

இன்மொழி, அவள் தான் எனக்கு வாழ்க்கைப்பட்டவள். அவள் பேசுவதே இனிமையாகத்தான். ஆனால் அவை எனக்கு வேப்பங்காயாகக் கசந்தது. என்றோ ருசி கண்ட நான் வீட்டிற்கு வந்த திருமகளை விடுத்து தெருவில் திரியும் தேவடியாள்களை நாடிச்சென்றேன். கள்ளம் கபடமில்லாத எத்தனையோ ஏழைப் பெண்கள் என்னால் கெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். பின்னால் அவர்கள் வாழ்வு? அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. பணம் இருக்கிறதே என்ற திமிரினால் மனம் போன போக்கெல்லாம் வாழ்ந்தேன்.

நிறையக் குடித்துவிட்டு ஆடி அசைந்து வீடு வந்து சேரும் என்னை அணைத்தபடி அழைத்துச் சென்று படுக்கையில்படுக்க வைப்பாள். காரணமின்றி எரிந்து விழும் என்னிடமிருந்து அவள் பெற்ற பரிசுகள் எண்ணிலடங்கா. தேவையான போதெல்லாம் அடியும் உதையும் தான். எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்வாள்.

அவளுடைய அத்தான் முறையான ஒருத்தனோடு அவள் கதைத்-ததைக் கண்ட நான் அவள் மீது பொல்லாத களங்கத்தைச் சுமத்தினேன். வேதனையால் மனம் நொந்து விம்மி விம்மி அழுது கொண்டிருந்த அவள் இறுதியில் தானாகவே தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டாள். சனியன் தொலைந்தது என்றெண்ணிச் சந்தோசப்பட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பல பெண்களோடு தொடர்பு கொள்ளலாம். ஆனால் அவள் உறவினன் ஒருவனோடு கதைக்கவும் கூடாதா? ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதியா?

நான் அடையத்துடித்த இன்பத்தின் எல்லைக்கு அரசாங்க உத்தியோகம் பெரிய தடைக்கல்லாக விளங்கியது. தேனை உண்டு கழிப்பதற்கு மலருக்கு மலர் தாவும் வண்டுபோல நானும் புதுப்புது மலரைத்தேடி ஓடுவதற்காக உத்தியோகத்தை உதறித் தள்ளினேன்.

எனது இன்ப வாழ்விற்கு பணம் அதிகம் தேவைப்படவே குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க எண்ணி கள்ளக்கடத்தல் தொழிலில் ஈடுபட்டேன். சூதாட்டம் போன்ற இத்தொழிலில் அடுத்தடுத்து லாபம் அடைந்தேன். பணம் தேவைக்கதிகமாகவே குவிந்தது. சொர்க்கமே நரகமாகுமென்று நான் அப்போது அறியவில்லை.

திசை திரும்பியதன் காரணமாக கடத்தல் தொழிலில் தோல்விக்கு மேல் தோல்வி ஏற்பட்டு சாமான்கள் மீண்டும் மீண்டும் பிடிபட்டன குபேர வாழ்வு வாழ்ந்த நான் குடிசை வாழ்வுக்கும் வழியற்றவனானேன்.

இதுவரை காலமும் புத்தும் புதுமலர்களையே கசக்கி மணந்த நான் வாடிய மலர்களைம் முகரவேண்டி ஏற்பட்டது. வாழ வேறு வழியின்றி எப்படியாவது வாழ்வோம் என எண்ணி வாழும் விலைமாதரைக்கூட நாடவேண்டி நேரிட்டது. அங்குதான் உண்மையான இன்பத்தைக் கண்டு கொண்டேன். இளம் சமுதாயத்தை விழுங்கி ஏப்பம் விடத்துடிக்கும் பயங்கரமான மேகநோய் அங்குதான் உற்பத்தியாகின்றது. சிறிது விலை கொடுத்து நானும் அந்தச் சொர்க்கத்தைப் பெற்றுக் கொண்டேன். இன்பத்தின் எல்லைவரை சென்றுவிட வேண்டுமென்று விரும்பிய என்னை அது இவ்வளவு தூரத்திற்குக் கொண்டு வந்துவிட்டது.

**டாக்டர்:** கூறிக்கொண்டே வந்தவன் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு கதறினான். நர்ஸ் கொண்டு வந்த 'பென்சிலின்' நிரம்பிய ஊசியை அவன் உடலினுள் செலுத்தினேன்.

அவன் நர்ஸைப் பார்த்த பார்வை....சாகும்போது கூடவா இந்தக் கேவலமான எண்ணம். சே...! சிறிது நேரம் துடி துடித்துக் கொண்டேயிருந்தான். சில நிமிடங்களில் அவன் கதையே முடிந்து விட்டது.

❑ ❑ ❑ ❑ ❑

**தினபதி**
**28-08-1968**



# இதுதான் வாழ்வு

அடுப்பில் திணிக்கப்பட்டு இருந்த தேங்காய் மட்டை எரியாமல் புகைந்து கொண்டிருந்தது அதைவிட வேகமாகப் புகைந்தது அவளின் மனம். பொழுது சாயமுன் வீடு வந்து சேரும் அவளின் கணவனை இன்னும் காணவில்லை.

சாணையில் வளர்த்தியிருந்த பச்சைக் குழந்தை 'குவா குவா' என்று கத்தி தானாகவே ஓய்ந்து கொண்டிருந்தது. பணக்கார வீடுகளில் நாய்க்குக் கொடுக்கப்படும் உணவுதானும் தன் குழந்தைகட்குத் தன்னால் கொடுக்க முடியவில்லையே என்பதை எண்ணும்போது, அவள் விழிகளில் நீர் கோடிட்டது.

கடந்த சில வருடங்களுக்கிடையில் அவள் அனுபவித்த துன்பங்களை வேறு யாரும் அனுபவித்திருக்கவே முடியாது. செல்வச் சிறப்போடு சிங்காரமாக வாழ வேண்டியவள் வறுமையிற் கிடந்து உழல வேண்டி ஏற்பட்டு விட்டது. இது அவள் தலை விதிதானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சில வருடங்களுக்கு இடையில் உலகப் பள்ளியில் அவள் படித்த பாடங்கள் கணக்கிலடங்கா பலர் பாடுபட்டு உழைக்க ஒரு சிலர் அவற்றை உண்டு கழித்துப் பகட்டுடன் வாழ்வதையும், குடிக்கக் கூழ்தானும் இல்லாமல் பலர் வாடும்போது சிலர் கொள்ளை லாபம் அடிப்பதையும் காணும்போது இந்த உலகம் அழிந்து போகாதா என்ற எண்ணமும் சிற்சில சமயங்களில் அவளுக்குத் தோன்றியதுண்டு தெருவில் விளையாடிக்கொண்டிருந்த அவள் செல்வங்களில் ஒன்று அம்மா என அலறிக் கொண்டு வந்து அவள் மடி மீது விழுந்து புரண்டது. பணக்கார வீட்டுப் பிள்ளை ஒன்று தனது திமிரைக் காட்டியதனால் ஏற்பட்ட வினையே அது அவளால் பணக்கார வீட்டுப் பிள்ளையை ஏதும் செய்ய இயலாதாகையால் அழுது கொணடிருந்த தன் பிள்ளையின் முதுகில் சாத்தினாள் விமரிசையாக அது மேலும் வீரிட்டலறியது.

"அம்மா இந்தக் கிழிஞ்ச சட்டையோடை ஸ்கூலுக்குப் போக ஏலாதம்மா, எல்லாப் பிள்ளைகளும் என்னைப் பார்த்துச் சிரிக்குதுகள் அப்பாவிடம் சொல்லி நல்ல ஒரு சட்டை வாங்கிக் கொடுங்கம்மா" இன்றோரு நாளையோ என பருவத்தை எட்டிக் கொண்டிருக்கும் மூத்த பெண் தனது குறையை அம்மாவிடம் சொல்லியபோது அவளது ஆத்திரம் பன்மடங்காகியது.

"சீ! நாங்கள் படுறபாட்டுக்கை, உனக்கொரு புதுச்சட்டை கேட்குதோ? ஆம்பிளைப் பிள்ளையள் தான் அப்படி என்றால் இந்தப் பெட்டையுமல்லோ எந்தை உசிரை வாங்குறாள். நீ ஸ்கூலுக்குப் போய் ஒண்டும் கிழிக்கப்போகிறதில்லை நீ இனி படிக்கப்போக வேண்டாம்" அவளது ஏழ்மை நிலை அவளை எரிந்து விழ வைத்தது.

"உலகே மாயம். வாழ்வே மாயம்" பழைய பாடல் ஒன்றை முணுமுணுத்தபடி அந்தச் சிறிய அறையினுள் நுழைந்தான் ராஜன் ஆம்! அது தான் அவர்கள் வீடு, நடுத்தர வகுப்பினரே கொழும்பில் வீட்டுக்கு கஷ்டப்படும்போது இவர்களுக்கு அதைவிடப் பெரிய வீடு எங்கே கிடைக்கப் போகிறது.

"என்னடி இதுகள் ஒப்பாரி வைக்குதுகள்" அவள் வாயைக்கிளறுவதன் மூலம் ஓர் இன்பம் காணலாமென அவன் நினைப்பு. கையில் வைத்திருந்த பத்திரிகையையில் பார்வையை ஓட விட்ட அவன், பென்சிலை எடுத்து எதையோ எழுதிக்கொண்டாள்.



லைலா மார்கிரட், போஸ்ட் மார்க், வீக் என்ட் என குதிரைகளின் பெயரை எழுதிக்கொண்டு ஸ்போர்ட்டிங் கார்ட்டை மடித்து பாக்கெட்டில் வைத்துக் கொண்டான்.

"அடியே, பெட்டியிலிருந்து காசு எடுத்தனியோ?" காலையில் போகும்போது பெட்டியில் வைத்துச் சென்ற இரண்டு ரூபாயைக் காணவில்லை என்ற ஆத்திரம் அவனுக்கு ஆறு மணிக்கு முன்பு குதிரைகளின் மீது பணத்தைக் கட்டி விடவேண்டும் என்ற தவிப்பும் வேறு"

"அதை எடுத்துத்தான் அரிசி வாங்கி வைச்சிருக்கு. இரவைக்குத் தன்னும் பெடியளுக்கு ஒண்டும் குடுக்க வேண்டாமே, நாங்கள் செய்த பாவத்திற்குப் பிள்ளைகளும் பட்டினியாலை சாகுதுகள்" அவள் சொல்லிவாய் மூட முன்னம் விழுந்தது ஒரு அடி

ஏதோ சொல்ல வாயெடுத்தாள். கணவன் மேல் இருந்த பக்தி பயமாக மாறி தொண்டை அடைத்துக் கொண்டது. அவன் வெறி மயக்கத்தோடு வெளியேறினான்.

பசி மயக்கத்தினால் குழந்தைகள் சுருண்டு கிடப்பதைக் கண்டபோது பெற்ற வயிறு பற்றி எரிந்தது. அரிசியைக் களைந்து உலையில் இட்டுவிட்டு பசி மயக்கத்தோடு அவளும் சாய்ந்து கொண்டாள்.

"அவர்கள் கொழும்பிற்கு வந்த புதிதில் அயலவர்கள் நல்லவிதமாக வந்து போயினர். அவள் எதிர்பார்க்காமலே உதவிகளை வலிந்து வலிந்து செய்தனர். ஆனால் இன்று...!

பணம் இருக்கும் வரையிற் தான் பிறர் உதவிக்கு வருவார்கள். பணம் இல்லாதபோது! பசி மயக்கம் ஒரு புறம் கன்னத்தில் விழுந்த அடியின் மத்தியிலும் பழைய நினைவுகள் அவள் நெஞ்சப் பாறையில் வந்து மோதின.

வல்வையில் உள்ள பிரபல செல்வந்தர் ஒருவரின் மகளே செந்திரு. கல்லூரி வாழ்வின் மனதுக்குப் பிடித்த ஒருவனைக் காதலனாக வரித்தும் கொண்டாள். சாதாரண மீனவக் குடும்பத்திற் தோன்றிய ராஜன் அவள் மனதில் இடம் பெற்றது ஆச்சரியம் தான்.

காதல் என்றால் காததூரம் ஓடிய அவள், ராஜனோடு தனி இடங்களில் நின்று பேசுமளவிற்கு தனது காதலை வளர்த்துக் கொண்டாள். அவர்கள் இருவரினதும் காதற் பயிரை மாய்க்க எண்ணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடர்கள் சிலர் செந்திருவின் தகப்பனார் காதில் இதைப் போட்டபோது அவர்கள் வீட்டில் ஒரு பூகம்பமே ஏற்பட்டது அதன் பலன்...?

செந்திருவின் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதுடன் அவளுக்குத் திருமணம் செய்து வைக்கவும் முடிவு செய்தார் தகப்பனார்.

"நான் எந்தை மகளுக்கு ஒரு என்ஜினியரைத் திட்டம் போட்டு வைத்திருக்கிறன். எங்கையோ கிடந்த பிச்சைக்காரப் பயல் காதல் செய்யிறானாம் காதல்" அவரது மனதில் எழுந்த ஆத்திரம் வார்த்தை-யாக வெளிவந்தது. "ஏதாவது எந்தை மானத்திற்குப் பிழை வர்ற அள-விற்கு நடந்தியளெண்டால் உங்கள் இரண்டுபேரையும் துலைச்சுப்-போடுவன். மகளிடம் இதைச் சொல்லி வைக்கவும் தவறவில்லை அவர்.

வானம்பாடிகள் இரண்டும் வெலவெலத்துப் போயின. ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தோ வேறு யாரையும் திருமணஞ் செய்து வாழ்வு நடத்த முடியாத அளவிற்கு நெஞ்சங்கள் இரண்டும் பிணைந்திருந்தன.

தாங்கள் இருவரும் உடனடியாக ஊரை விட்டு எங்காவது ஓடிப்-போகலாம் எனத் திட்டம் தந்தாள் செந்திரு. ஆரம்பத்தில் ராஜன் அதற்கு உடன்படவேயில்லை. "அத்தான் உங்களை மறந்து என்னால் உயிர் வாழ முடியாது. நாம் இங்கிருந்தால் எனது திருமணம் நிச்சயமாக நடந்தேதீரும். எனது திட்டத்திற்கு நீங்கள் உடன்படாவிடில் வல்-வெட்டித்துறைக் கடலில் என் உயிரற்ற உடலைத்தான் காண்பீர்கள்." அவள் கண்ணீரைக் கண்டபோது சம்மதிப்பதைத் தவிர வேறு வழி தோன்றவில்லை அவனுக்கு.

இரவோடிரவாக பறவைகள் இரண்டும் பறந்து விட்டதை அறிந்ததும் தகப்பனார், ஆத்திரமும் அவமானமும் ஒன்றுசேர காரில் அவர்களைத் தேடாத இடமேயில்லை. தன் மகளை இறந்து போன ஒருத்தியாகக் கருதினார்.

காலம் புகட்டிய அறிவும், மகளின் பிரிவுத் துயரும் அவர்கள் இருவரையும் தேடவைத்தது. பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் குவிந்தன - பலன்...!

பத்திரிகையில் வந்த விளம்பரத்தைக் கண்டபோது, "திரும்பி விடுவோமா" என கணவனைக் கேட்டாள். அவன் கூறிய வார்த்தைகள் மீண்டும் என்றுமே அதைப் பற்றிச் சிந்தியாதவாறு தடை போட்டன.



"நீ போவதானால் போகலாம். ஆனால் நானும் அங்கு வருமோ னென்று எதிர்பார்க்க வேண்டாம். உங்களுடைய பணத்தை நான் எதிர்பார்க்கவில்லை சில வேளைகளில் உன்னை விவாகரத்துச் செய்து கொள்ள வேண்டியும் ஏற்படலாம்." இடியேறு கேட்ட நாகம் போலானாள் செந்திரு. திருமணமாகி விட்டால் இன்ப துன்பம் எது வந்தாலும் கணவனின் பாதங்களை சொர்க்கமென நினைப்பவள் அவள். அன்றிலிருந்து தனக்கு உறவினர்கள் உண்டென்பதையே மறந்து விட்டாள்.

ஆரம்பத்தில் சிறிது சந்தோஷமாகக் கழிந்த வாழ்க்கை நாளடைவில்.... "காசு சேர்க்க வேண்டும். தன் மனைவியைக் கஷ்டப்படுத்தாமல் பார்க்க வேண்டும்" என்ற ஆவல் சூதாட்டங்களில் ஈடுபடுமளவிற்கு ராஜனைத்தூண்டி விட்டது. வேலை இல்லாத அவனால் வேறென்ன செய்ய முடியும்.

பிள்ளைகளின் சங்கீதத்தினால் அவள் இவ்வுலகத்தை வந்தடைந்-தாள். சமைத்து வைத்திருந்த சம்பலோடு பிள்ளைகளுக்கு சோற்றைப் பரிமாறினாள்.

பசியோடு தூங்கிய அவளின் உடலின் மேல் ஏதோ ஓர் இன்ப உணர்வு மறுபுறம் திரும்பியபோது, சிரித்தபடி ராஜன் பக்கத்தில் படுத்திருப்பதைக் கண்டு ஓர் புன்னகையை சிந்தினாள்.

அவர்கள் இருவரினதும் இன்பத்திற்குக் குறுக்கே நிற்க விரும்பாத போத்தல் விளக்கு தானாகவே அணைந்து கொண்டது.

❑ ❑ ❑ ❑ ❑

ராதா
22-03-1969



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை என்பது...?

ஒரு மாத கால இடைவெளிக்குப் பின், ஆத்திரம் அறிவை மறைத்ததனால் இல்லாளை மறந்து - மழலைச் செல்வத்தைப் பிரிந்து சென்ற ராஜன், மனம் தெளிந்தவனாய், வாழ்வின் உண்மையை உணர்ந்து கொண்ட பின், தானாகவே திரும்பி வந்து நின்றான்.

சுமதியைப் பிரிந்து அவன் வாழ்ந்த ஒரு மாத கால வாழ்க்கையில், அவன் படித்துக் கொண்ட பாடங்கள் கணக்கிலடங்கா.

சிரிப்பும் கும்மாளமுமாய், என்றும் கலகலப்பாய் இருக்கும் வீடு களையிழந்து காணப்பட்டது. ராஜனது கண்கள் அவனையறியாமலே யாரையோ தேடின.

தானாகவே திரும்பி வந்தது தனது ஆண்மைக்கு அழகாகுமா? என்ற கேள்வியும் அவனது நெஞ்சத்தின் அடித்தளத்தில் எழாமலில்லை.

நாளைக்கு ஊரிலுள்ளவர் கேவலமாகப் பேசுவார்களே, உறவினர்கள் எள்ளி



நகையாடுவார்களே என்ற எண்ணங்கள் பேசாமல் வந்த வழியே திரும்பி விடுவோமா என அவனைச் சிந்திக்க வைத்தது சே....! என்ன மடமை....?

அழகிய பூங்கொடி ஒன்று வாடிக் கிடப்பதைப் போல கணவன் பிரிவினால் நாடோறும் மெலிந்ததனால் வாட்டமுற்றுக் கிடந்தாள் சுமதி. அவள் கிடந்த கோலம் அவனைக் கலங்க வைத்தது.

"கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்ற கொள்கைக்கமைய வாழ்பவள் தான் சுமதி. தேவையற்ற ஆடம்பரத்தையோ அலங்கோல அழகு சாதனங்களையோ விரும்புபவளல்ல சுமதி.

"அத்தான் என்னை அடியுங்கோ உதையுங்கோ ஆனால்... என்னைப் பிரிந்து போகாதீங்க அத்தான்" என்று கால்களில் விழுந்து கதறினாள், மன்றாடினாள் - பலனில்லை.

"நாங்கள் சொன்னபடி சீதனத்தின் மிச்சக் காசையும் தரமுடியாமல் இருக்கு. இன்னும் கொஞ்ச நாளையிலை சீட்டு விழ தாறம். அதுக்காக நீங்கள் வீட்டை விட்டுப் போறது அவ்வளவு நல்லாய் இல்லை. பாக்கிறவங்களுக்கு...." என்று மாமனார் காலில் விழாக்குறையாகக் கெஞ்சியும் மனமிரங்காமல் வீட்டை விட்டு வெளியேறியவன் இன்று தானாகவே திரும்பியிருந்தான்.

அவன் வீட்டை விட்டுப் பிரிந்து போன அன்று அவள் பட்டபாடுகள் ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

"கட்டிய கணவனோடு குடும்பம் நடத்தத் தெரியாதவள், வாய்க்காரி என்று உலகம் தூற்றுமே, அவர் என்னை விட்டுப் போன பிறகு தான் ஏன் உயிரோடு இருக்க வேண்டும்"? என்று கிணற்றுக்குள் விழப்போனதும், அவளைத் தேற்றுவதற்குப் பெற்றோர் பட்டபாடும் அப்பப்பா!

திருமணம் முடிந்து சில மாதங்கள் வரை அவர்கள் வாழ்க்கை இன்பமாகத்தான் கழிந்தது மனமொத்த தம்பதிகளாக கடற்கரை, சினிமா என்று போய் வந்தார்கள்

ராஜனிடம் சீட்டாடும் பழக்கம் இருப்பதாகத் தெரியவந்ததும், சுமதி துடிதுடித்துப் போனாள்.

"அத்தான்! சீட்டாடுவதனால் எத்தனையோ குடும்பங்கள் சீரழிந்து கிடக்கின்றன. வாழ்வைக் கெடுக்கும் அந்தச் சனியனைக் கையாலும் தொடவேண்டாம்" எனக் கேட்டுக் கொண்டாள். அதுதான் தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையைப் பிரிக்கும் யமனாக மாறுமென்பதை அவள் அறியவில்லை

சீட்டாட்டத்தினால் கையில் இருந்த பணமெல்லாம் கரைந்து போக, சீதனப் பணத்தின் மிகுதியையும் தருமாறு நச்சரிக்கத் தொடங்கினான் ராஜன்

சீதனக் காசை மருமகனிடம் கொடுத்தால், அப்பணமும் போய் சுமதி வறுமையில் வாட நேரிடுமே என்ற காரணத்தினால் கடத்திக் கொண்டே வந்தார் மாமனார்.

சீதனக் காசை தன்னிடம் தரவில்லை என்ற காரணத்தினால் தேவையற்றதுக்கெல்லாம் சுமதி மீது எரிந்து விழுந்தான் ராஜன். அடி, உதை இத்தனைக்கும் அவள் கணவனை எதிர்த்து ஒரு வார்த்தைதானும் பேசுவதில்லை.

ஒருநாள் ராஜன் வந்து கோலம், சுமதியின் பொறுமையைச் சோதிப்பதாக அமைந்தது. அவ்வளவு நாளும் சீட்டாட்டத்தில் மன்னவனாக விளங்கிய தனது கணவன் குடித்து விட்டு வந்ததைக் கண்டபோது அவளால் பேசாமலிருக்க முடியவில்லை.

"கிடைச்ச சீதனக் காசையும் சீட்டாடித் தொலைச்சியள். என்னை அடிச்சியள் உதைச்சியள் பேசாமலிருந்தன், இப்ப குடிச்சுப் போட்டு வந்து நிக்கிறியள். என்ன நினைச்சுக் கொண்டு இந்தக்கூத்தெல்லாம் ஆடுறியள் - நான் உங்களை கலியாணம் கட்டி என்ன சுகத்தைக் கண்டன்?" கணவனை திருத்திவிடலாம் என்ற நப்பாசை அவளைப் பேச வைத்தது ஆனால் அதுவே தனது வாழ்விற்கு இடையூறாக வருமென்று தெரிந்திருந்தால் அவள் அப்படிப்பேசியிருக்கவே மாட்டாள்.

அவன் எதைப் பற்றியுமே சிந்திக்கவில்லை

"டியேய்! என்னை எதிர்த்துப் பேசுற அளவிற்கு உனக்குத்திமிர் பிடிச்சுப் போச்சு. உன்னையும் கொப்பரையும் படிப்பிக்கிறன் பார்" என்று சொல்லி விட்டு வெளியேறியவன், மனம் திருந்தியவனாக, குடியை மறந்தவனாக, சீட்டாட்டத்தைத் துறந்தவனாக திரும்பியிருந்தான்.

அவளைப் பிரிந்து சென்ற சில நாட்கள் சந்தோஷமாகத் தான் கழிந்தன. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல....



அவளோடு கழித்த இன்ப இரவுகளின் நினைப்புக்கள் அவன் மனதை....

குலவிளக்கை - தன் மழலைச் செல்வத்தைக் காண வேண்டுமென்ற ஏக்கம் அவன் நெஞ்சத்தை....

தனிமை அவனைக் கொல்லாமல் கொன்றது; கொடிய இரவுகள் அவனை வாட்டாமல் வாட்டின

எவ்வளவு துன்பத்தின் மத்தியிலும் கணவனும் மனைவியும் சேர்ந்திருக்கும் இன்பத்தை விட சொர்க்கம் வேறுண்டோ?

நான் இங்கே.... அவள் அங்கே .... காலமெல்லாம் இப்படியே..... சே....! சீதனம் ஒன்றிற்காக எங்கள் வாழ்க்கையே சீரழிவதா? சிந்தித்தான் மீண்டும் மீண்டும் சிந்தித்தான் முடிவு...?

வாழ்நாளின் கடைசி இது வென்று யாருக்குமே தெரியாது. திடீரென்று அவள் இறந்து விட்டால்..." அவனால் அதை நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை.

"ஒன்றாகக் கூடி இன்புற்று வாழ்வதே வாழ்வின் நியதி. இளமை, நாள் கழியும் தோறும் கழிந்து கொண்டே போவது. போன இளமையை மீட்டுத் தரும் சக்தி எதற்குமே கிடையாது ஆகவே இளமையில் இன்பத்தினை ஒன்றியிருந்து அனுபவித்து மகிழ்தல் வேண்டும் பிரிந்து இருந்து இளமையும் இன்பமும் கெடச் செய்வது தவறு "என்ற வாழ்வியலின் தத்துவம் அவன் மனதில் நிலைபெற்றது அதன் பலன்...?

ராஜனது காலடிச் சப்தத்தினால் திடுக்கிட்டு விழித்துக்கொண்டாள் சுமதி. "அத்தான்..." என்று ஆச்சரியமும் அழுகையும் கலந்து வர அவன் அருகேசென்றாள் இருவர்க்குமிடையில் உள்ள இடைவெளி குறுகிக் கொண்டே வந்தது அவனது அணைப்பில்....

❑ ❑ ❑ ❑ ❑

ராதா
10-05-1969



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் தெய்வம்

இளங்கோவின் தகப்பனார் தபாற் பகுதியில் ஓர் உயர்தர அதிகாரியாகப் பதவி வகித்து ஓய்வு பெற்றவர். தன் மகனும் தன்னைப் போலவே ஒரு உயர்தர பதவிக்கு வரவேண்டுமென்று ஆசைப்பட்டார்.

"அப்பா நான் எழுதுவினைஞர் தேர்வுக்கு தோற்றப் போகிறேன்" என்று மகன் கூறியதற்கு அவர் தடையேதும் கூறவில்லை. இளங்கோ பரீட்சையும் எழுதி சித்தியுமடைந்தான்.

தபாற் பகுதியில் எழுதுவினைஞராகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். தாயற்றவனாகிய அவனைத் தனியே கொழும்பிற்கு அனுப்பி கஷ்டப்படுத்த விரும்பவில்லை. தகப்பனார். கடைச்சாப்பாடு மகனை உருத் தெரியாமல் எலும்பும் தோலுமாக மாற்றிவிடும் என்பதை உணர்ந்த அவர் மகனோடு ஒரு துணையையும் சேர்த்து அனுப்ப விரும்பினார். துணைவி ஒருத்தியையும் கூட அனுப்பத் தீர்மானித்தபோது இளங்கோவும் தந்தை சொல்லைத் தட்ட விரும்பவில்லை.



கொழும்பிற்குப் புறப்படுமுன் இளங்கோ தனது தந்தையின் விருப்பப்படி மேகலாவைத்திருமணம் செய்து கொண்டான். நகர்ப்புறத்து அனுபவங்கள் அதிகம் இல்லாவிட்டாலும், கணவன் மனங்கோணாது நடக்கக்கூடியவளே மேகலா. அத்தோடு சிறிது படிப்பு ரசனையும் உடையவள்.

வெள்ளவத்தையில் கணவனும் மனைவியும் தனிக்குடித்தனம் ஆரம்பித்தனர். சிங்களம் கற்கவென்று கல்கிஸ்ஸைக்குத் தினமும் சென்று வந்தான் இளங்கோ. தனது இயல்புக்கேற்ப சூதுவாதில்லாத மேகலாவும் இதைப் பொருட்படுத்தவில்லை.

திருமணமான புதிதாகையால் நாட்கள் இனிதே கழிந்தன. மாதங்கள் பல கடந்தன. "சிங்களம் படிக்கவென்று செல்லும் உன் கணவன் சிங்களப் பெண் ஒருத்தியுடன் தொடர்பு கொண்டிருப்பதாகப் பலரும் கதைக்கின்றார்கள். ஆகவே இதைப் பற்றி நீயும் கொஞ்சம் கவனமாக இருக்கவும்" என மாமனாரிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது.

திருமணம் ஆகிய பின்பு கணவனுக்குத் தெரியாமல் கடிதம் தனக்கு வருவதையோ தான் எழுதுவதையோ அடியோடு வெறுத்த அவள் மாமனாரிடமிருந்து வந்த கடிதத்தை என்ன செய்வது என்று தெரியாமல் சிறிது கஷ்டப்பட்டாள். இறுதியில்" ஆபத்திற்குப் பாவமில்லை" என்றெண்ணி அந்தக் கடிதத்தை கணவனுக்குத் தெரியாமலே கிழித்தெறிந்து விட்டாள்.

கடிதம் வந்த நாளிலிருந்து மேகலா சிறிது எச்சரிக்கையாகவே இருந்தாள். மேலதிக நேர வேலையென்று கூறி போயா தினங்களில் கணவன் போய் வருவது பற்றி ஆரம்பத்தில் எதுவுமே எண்ணாத அவள் கடிதம் வந்த நாளிலிருந்து அடிக்கடி அலுவலகத்திற்கு தொலைபேசி மூலம் தொடர்பும் கொண்டாள். கணவன் தன்னை ஏமாற்றிவிட்டு சிங்களப் பெண் வீட்டிற்குச் சென்று விடுவானோ என்ற அச்சம் அவளுக்கு.

"இங்கு எத்தனையோ தனிப்பட்ட கல்லூரிகளில் சிங்களம் கற்பதற்கு வசதி இருக்க நீங்கள் கல்கிஸ்ஸைக்கு ஏன் செல்ல வேண்டும்? அதுவும் திருமணமாகாத ஒரு இளம் பெண்ணிடம் நீங்கள் படிக்கவென்று செல்வது அவ்வளவு விரும்பத்தக்கதல்ல" என்றாள் மேகலா.

மேகலாவின் மனதில் சந்தேகம் குடிகொண்டு விட்டதை உணர்ந்து கொண்டான் இளங்கோ. "மேகலா சுற்றி வளைத்துப் பேச வேண்டியதில்லை. உன் மனதிலும் சந்தேகத்தின் நிழல் படிந்து விட்டது. இன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடன் புறப்படு. சாந்தி வீட்டிற்குச் சென்ற பின்பு நீயே புரிந்து கொள்வாய் என்றான்.

அன்று மாலையே கணவனோடு சாந்தி வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றாள் மேகலா.

சாந்தி வீட்டிற்குச் சென்றதன் பயனாக ஓரளவிற்கு மேகலாவிற்கு மனம் தெளிவடைந்தது. இளங்கோவும் சாந்தியும் களங்கமின்றிப் பேசுவதையும், உடன் பிறந்தவர்களைப் போல் உரையாடுவதையும் கண்டு சிறிது சந்தேகம் தெளிந்தாள்.

சாந்தி சிங்களப் பெண்ணாயிருந்தும் அழகிய தமிழ்மொழியில் மேகலாவோடு உரையாடினாள். அரசியலில் இருந்து அடுப்படிவரை பல விடயங்களும் அவர்களின் உரையாடலில் இடம் பிடித்துக் கொண்டன. இந்தச் சந்திப்பின் மூலம் ஓர் நெருக்கமான உறவு சாந்திக்கும் மேகலாவிற்கும் இடையில் ஏற்பட்டது.

வீணாக ஒரு பெண்ணிடம் சந்தேகம் கொண்டோமே என தன்னையே நொந்து கொண்டாள்.

இதன் பிறகு அடிக்கடி மேகலா சாந்தியின் வீட்டிற்குச் சென்றுவரத் தலைப்பட்டாள். போயா தினங்களில் மயக்கும் மாலைப் பொழுதில் கல்கிஸ்ஸைக் கடற்கரையில் சாந்தியின் அன்புப் பேச்சில் கட்டுண்டு கிடப்பாள் மேகலா. நேரம் போவதே தெரியாமலிருக்கும். சிங்களவர்களும் பழகுவதற்கு இனியவர்கள் என்ற உண்மையை சில நாட்களுக்கிடையிலேயே புரிய வைத்தாள் சாந்தி.

சாந்திக்குச் சாதாரண காய்ச்சல் வந்து விட்டாலும் தன் உடன் பிறந்தவள் ஒருத்திக்கு வந்த துன்பம்போல எண்ணிப் பதறிப் போய் விடுவாள் மேகலா.

பத்துத்திங்கள் கழிந்தன. தலைப்பிரசவத்திற்காக மேகலா யாழ்ப்பாணம் செல்ல வேண்டி நேர்ந்தது. பிரசவம் சுகமாக முடிந்தது. மேகலா யாழ்ப்பாணத்தில் இருந்தபோது இளங்கோ - சாந்தி இருவர்க்கிடையிலான உறவுமுறையைக் குறித்து பல அநாமதேயக் கடிதங்கள் வந்து சேர்ந்தன. கையெழுத்திடுவதற்குத் தைரியமில்லாத கோழைகள் தாங்கள் மொட்டைக் கடிதம் எழுதுவதில் வல்லவர்கள் என்பதைத் தமது செயல்களின் மூலம் காட்டினர். தாம் எழுதும் அந்த மொட்டைக் கடிதங்கள் எத்தனை குடும்பங்களைக் குட்டிச் சுவராக்குகின்றன என்பது



தெரிந்தும் கேவலமான அந்த கைங்கரியத்தைச் செய்வதில் போட்டி போட்டனர் பலர்.

சந்தேகம் என்ற கொடிய பேய் மீண்டும் மேகலாவின் மனதில் பிடித்துக் கொண்டது. பூரண ஓய்வு எடுக்காமலேயே கைக்குழந்தையோடு புகையிரதத்தில் ஏறினாள் மேகலா.

கொழும்பிற்குச் சென்ற மேகலாவிற்கு இது பற்றிக் கேட்கவும் தைரியமில்லை. கேட்காமலிருக்கவும் முடியவில்லை. முன்பு போல சாந்தியின் வீட்டிற்குச் செல்வதுமில்லை. தனது வீட்டிற்கு வருமாறு சாந்தி அழைப்புக்கு மேல் அழைப்பு விடுத்த போதும் தட்டிக் கழித்துக் கொண்டே வந்தாள் மேகலா.

மேகலாவிற்கு தங்கள் இருவரினதும் களங்கமற்ற நட்பில் சந்தேகம் பிறந்துவிட்டதை சாந்தியும் புரிந்து கொண்டாள். அதன் பயனாக சாந்தியிடமிருந்து மேகலாவிற்கு ஒரு கடிதம் வந்தது.

"சகோதரி உங்கள் கணவர் மிகவும் நல்லவர். வீணாக அவர் மீது சந்தேகம் கொள்ளவேண்டாம். வாழ்க்கைப் படகிலே சந்தேகத்தை ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள். இன்றில்லா விட்டாலும் உண்மை என்றாவது ஒரு நாள் வெளிவரத்தான் செய்யும்" என சாந்தியிடமிருந்து வந்த கடிதத்தையும் சுக்குநூறாகக் கிழித்துப் போட்டாள். சாந்தி மீதுள்ள ஆத்திரம் அத்தனையையும் கடிதத்தைக் கிழித்ததன் மூலம் கொட்டித் தீர்த்தாள்.

ஓடும் புளியம்பழமும் போல உப்புச் சப்பற்ற ஒரு வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டிருந்தனர் கணவனும் மனைவியும். தன்னிடம் சிங்களம் கற்க வரவேண்டாமென்று சாந்தி தடுத்துங்கூட இளங்கோ சென்று கொண்டே இருந்தான்.

ஒரு சிலரின் புத்தியற்ற செயல்களினால் ஏற்பட்ட இனக்கலவரமே மேகலாவின் வேதனையைத் தீர்ப்பதாக அமைந்தது. ஈழத்தின் வரலாற்றில் ஒரு பாவக்கறையாக ஏற்பட்டுவிட்ட அந்தத் துர்ச்சம்பவமே சாந்தியின் உண்மை வடிவத்தை மேகலாவிற்கு உணர்த்துவதாக அமைந்தது.

சிங்கள - தமிழ் மக்களின் நல்லுறவிற்குப் பங்கம் விளைவித்த ஒரு சில கயவர்களின் வெறித்தனங்கள் நர்த்தனமாடியநேரம். வழமைபோல கல்கிஸ்ஸைக்குச் சிங்களம் கற்கச் சென்ற இளங்கோ வீடு திரும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. "கல்கிஸ்ஸைப் பக்கமும் தமிழர்களைத் தாக்குகின்றார்-களாம்" என்று யாரோ கூறிச் சென்ற வார்த்தைகள் மேகலாவிற்கு நெஞ்சத்தில் நெருப்பை அள்ளிக் கொட்டின வேண்டாத தெய்வங்கள் இல்லை. கடந்து செல்லும் ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொருயுகமாகக் கழிந்தது. வெள்ளவத்தையில் கொள்ளையர்கள் சூறையாடல் இல்லாதது ஓரளவு ஆறுதலாக இருந்தது.

நள்ளிரவில் பொலிஸ் வானில் கொண்டு வந்து இளங்கோவை இறக்கிவிட்டுச் சென்றனர் பொலிஸார். பிரிந்து சென்ற உயிர் திரும்ப வந்தது மேகலாவிற்கு.

சாந்தியின் வீட்டில் தான் நின்றபோது குண்டர்கள் தாக்க வந்ததையும் அவர்களிடமிருந்து சாந்தி தன்னைக் காப்பாற்றி விட்டதையும் வேதனையோடும் வெதும்பிய உள்ளத்தோடும் கூறிய இளங்கோவின் கண்களினின்றும் கண்ணீர்த்துளிகள் வழிந்தோடின.

அவன் அழுத காரணத்தை அறிந்தபோது மேகலாவால் "சாந்தி நீ அன்புத் தெய்வம்" என்று அலறுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?

தன் உயிரைத் தியாகம் செய்து தன் கணவனைக் காப்பாற்றி தங்கள் வாழ்வோடு இணைந்து விட்ட அந்த அன்புத் தெய்வத்தின் நினைவு மேகலாவை விட்டு என்றுமே நீங்காது பசுமையாக நிலைத்-திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

❑ ❑ ❑ ❑ ❑

தினபதி
03-06-1969



# ஏழையின் கருணை

அறைக் கதவைத் தடார் எனத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் ராஜன். வங்கியிலிருந்து எடுத்து வந்த பணத்தை மீண்டும் ஒரு முறை எண்ணிப் பார்க்கும் ஆவலோடு காற்சட்டைப் பாக்-கெட்டினுள் கையைப் புகுத்தினான். மறு-படியும் நன்றாகப் பார்த்தான். இரண்டு பாக்கெட்டுக்களையும் மாறிமாறிப் பார்த்-தான். பாக்கெட்டுக்குள் இருந்த மணிப்-பர்ஸ்சைக் காணவில்லை.

அந்த மணிபர்ஸ்....?

ராஜன் தனது வாழ்க்கையில் எத்த-னையோ ஏமாற்றங்களையும், துயரங்களை-யும் அனுபவித்தவன் தான். ஆனால் இன்று..!

எத்தனையோ ஆசைக்கோட்டை-களுடன், பல காலமாகச் சிறுகச் சிறுக சேர்த்து வைத்திருந்த பணத்தின் பெரும்-பகுதியை வங்கியில் இருந்து எடுத்துக் கொண்டு வந்த அவன் தனக்கு இப்படியான தொரு சம்பவம் நேருமென்பதைக் கன-விலும் எண்ணியதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பணத்தை எதிர்பார்த்திருக்கும் வயோதிப தாய் தந்தையரையும், ஆவலோடு தனது வருகைக்காகக் காத்திருக்கும் தங்கைமாரையும் எண்ணியபோது....

".....உனது தங்கச்சிக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்துப் பேசியிருக்கு. எப்படியும் ஐயாயிரம் ரூபாயாவது சீதனம் கொடுத்தால்தான் கலியாணம் நடக்கும் போல இருக்கு..." என ஊரிலிருந்து வந்த பெற்றோரின் கடிதத்தைக் கண்டு, இதுவரை காலமும் சேமித்து வைத்திருந்த ஐயாயிரம் ரூபாயை எடுத்துக்கொண்டு வங்கியை விட்டு வந்தவன் வழியில் அதைப் பறிகொடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகி விட்டான்.

தனது ஆசைகள் அத்தனையும் நிராசையாகி விட்ட நிலையில்.... தான் இதுவரை பட்ட துன்பங்களையும், பணம் பறிபோய்விட்டதனால் தன் தங்கையின் திருமணம் தடைபடப் போகின்றதே என்பதையும் எண்ணிப்பார்த்தபோது அவனுக்கு அழுகை குமுறிக்கொண்டு வந்தது.

எந்த இடத்தில் தான் மணிபர்ஸைப் பறிகொடுத்திருப்பேன் என்பது பற்றி தனக்குள் யோசித்தான்.

பஸ்தரிக்கும் இடத்தில் காத்து நின்றதும், தனக்குப் பக்கத்தில் பகட்டாக ஆடை அணிந்துகொண்டு ஒருவன் நின்றிருந்த காட்சியும் அவன் மனக்கண் முன் தோன்றின.

ஆடம்பரம், பகட்டு, பரம்பரைப் பணக்காரன் போன்ற போலி நடிப்பு அத்தனையும் வெளி வேஷந்தானா?

நகரத்தில் நடந்து விட்ட அநாகரிகத்தை எண்ணி மனம் புழுங்கியவனாக தான் வந்த வழியே ஓடினான். பணம் திரும்பக் கிடைத்துவிடாதா என்ற நப்பாசை அவனுக்கு.

கிழிந்த சட்டையும் அழுக்கடைந்த வேஷ்டியுமாக ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு சவாரிக்காக அலைந்து கொண்டிருந்தான் மாடசாமி. பொழுது விடிந்தலிருந்து நாயாய் அலைந்தும் நிக்கல் சல்லியும் கிடைத்த பாடாய் இல்லை.

"இப்ப யார்தான் ரிக்ஷாவிலை ஏறுறாங்க. எல்லாரும் டாக்ஷியிலே போறாங்க. ஸ்கூல் நாளெண்டாலும் ஒண்டு ரெண்டு சவாரி கிடைக்கும். இப்ப ஸ்கூலுகளும் லீவு எப்ப திறக்கப் போறாங்களோ..." என தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.



நாளெல்லாம் உழைக்கும் உழைப்பு கால்வயிற்றுக்கே போதாத நிலையில், நகரின் புறத்தில் ஒரு சிறிய குடிசையிலாவது இருப்பதற்கு வழியின்றி சாலைகளின் ஓரத்திலே - மரத்தடியிலே உணவு சமைத்து, உண்டு காலம் கழிக்கும் - தங்கள் கஷ்டங்களை எண்ணி கண்ணீர் வடித்து, மனம் ஒடிந்து அன்றாடம் செத்துக்கொண்டிருக்கும் பட்டினிப் பட்டாளத்தில் அவனும் ஒருவன்.

கொழும்பைப் பொறுத்தவரையில் தொழிலாளர்கள். அன்றாடம் காய்ச்சிகள், நாள் முழுவதும் கஷ்டப்பட்டு உழைத்துப்பெற்ற சம்பாத்தியத்தில் பெரும் பகுதியைக் கள்ளுத் தவறணைகளிலும், கசிப்புக் கடைகளிலுமே செலவு செய்பவர்கள். ஆனால் மாடசாமியோ அவை எல்லாவற்றையும் மறந்துவிட்டவன்.

வாலிப வயதில் ஒரு தொழிற்சாலையில் வேலை பார்த்த அவன், இளமைப்பருவத்தில் ஒருத்தியைத் திருமணம் செய்தான். அவள் தக்கவிக்கிரகம்போல ஒரு குழந்தையைப் பெற்றுத் தந்துவிட்டு கண்ணை மூடிவிட்டாள்.

நாடாளுமன்றக் கட்டிடம் நிமிர்ந்து கடலைப் பார்த்துக் கொண்டிருந்தது. கடலின் அலைகளோடு போட்டி போட்டுக்கொண்டு சிங்கக் கொடி பறந்து கொண்டிருந்தது. மாடசாமி காலிமுகக் கடற்கரையை வந்தடைந்து விட்டான்.

வயது போயும் இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறானென்றால், அது அவனது மகள் ஒருத்திக்காகத்தான்.

"மணிமேகலையை ஒரு நல்ல பெடியனாகப் பார்த்துக் கட்டிவைத்துவிட வேணும். அதைவிட வேறு என்ன வேண்டும்?" பெரிய பெண்ணாகி இருக்கும் தனது மகளைப்பற்றிய எண்ணம் அவனுக்கு

"ஏய் கிழவா! ரிக்ஷா உன்னைத்தான்" கிழவன் திரும்பிப் பார்த்தான். பெரிய துரை ஒருவர் தன்னை அழைப்பதைக் கண்டு அவர் அருகே கொண்டு சென்று வண்டியை நிறுத்தினான்.

"வாங்க சாமி ஐஞ்சு நிமிசத்திலே உங்களைக் கொண்டு போய் இறக்கிடறேன்" அந்தச் சவாரியைத் தவற விடக்கூடாதென்ற எண்ணம் அவனுக்கு.

"அவசரப்படவேண்டாம். நீ ஆறுதலாகப் போ" என்று சொல்லிக்கொண்டே வண்டியிலேறி உட்கார்ந்தான் நன்றாக உடையணிந்த வாலிபன் ஒருவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வாலிபனின் உள்ளத்திலோ பெருமகிழ்ச்சி அவன் இந்தத் தொழிலில் இறங்கி என்றாவது இப்படியானதொரு கொழுத்த வேட்டை கிடைத்ததில்லை. தான் "பிக்பாக்கெட்" அடித்த மணிபர்ஸில் ஐயாயிரம் ரூபாய் கிடைத்துவிட்ட மகிழ்ச்சி அவனுக்கு.

பஞ்சத்தின் காரணமாக - பசித்துடிப்பினால். சாப்பாட்டுப் பொருட்களைத் திருடவும். பிச்சை எடுக்கவும் பழகிக் கொண்டுள்ளவர்கள் ஒரு சிலர். படிப்பறிவில்லாத காரணம் தான் அவர்களைத் தீய பழக்கவழக்கங்களில் ஈடுபட வைக்கின்றதென்றால். படித்தவர்களுமா இப்படி ஏமாற்று வேலைகளில் ஈடுபடவேண்டும் ஏய்த்துப் பிழைக்க வேண்டும்?

துரைகூறிய இடத்தில் வண்டியை நிறுத்தி, அவரை இறக்கி விட்டு விட்டு, அவசர அவசரமாக தனது இருப்பிடத்தை நோக்கி விரைந்தான். கிழவன்.

கால்களின் விரைவிற்கமைய வண்டியும் ஓடிக்கொண்டிருந்தது. வண்டியிலிருந்து ஏதோ ஒரு பொருள் கீழே விழவே, வண்டியை நிறுத்தினான். கீழே விழுந்த மணிபர்ஸை பரபரப்புடன் எடுத்துப் பார்த்தான். அவன் கண்கள் வியப்பால் விரிந்தன.

பலநூறு ரூபாய் நோட்டுக்கள் அவனைப் பார்த்துச் சிரித்தன. அவன் முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடியது.

"ஆண்டவன் தனக்குத் தந்த பரிசு'" என நினைத்துக்கொண்டு ஒரு கணம் மகிழ்ந்தான்.

மறுகணம்...!

சே...! எவ்வளவு அற்பமான எண்ணம்?

இந்தப் பணம் இருந்தால் தன் மகளின் திருமணத்தை ஒருவித கஷ்டமுமின்றி நடத்திப் போடலாமென்றும் நினைத்தான். ஆனால்...!

பலத்த மனப்போராட்டத்தின் பின் அவனது நேர்மையே வென்றது. தான் இதுவரையில் காத்து வந்த நாணயத்தை அழிந்துபோகும் பணத்திற்காக இழப்பதா என்ற எண்ணம் அவன் சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. தான் சிறிது நேரம் பணத்தைக் கண்டதும் சபலப்பட்டதை எண்ணி தனக்குள் தானே துக்கித்துக் கொண்டான்.

ரிக்ஷாவை மீண்டும் வந்த இடத்தை நோக்கித் திருப்பினான்



ரிக்ஷாவை விட்டிறங்கிச் சென்ற "டிப்டாப்" பேர்வழி தான் அடித்துக்கொண்டு வந்த மணிபர்ஸைக் காணாது திகைத்தான். அவனுக்குப் பெரியதோர் ஏமாற்றம்.

கடவுளைப் பற்றிய சிந்தனை அப்போதுதான் அவனுக்கு உதயமானது.

தான் செய்த செயலுக்குத் தண்டனையாகத்தான், திருடிய பொருளைப் பறிகொடுத்து விட்டேனா? என நினைத்துக்கொண்டான்.

"இந்தாங்க சாமி உங்களைத்தான் சாமி நில்லுங்க உங்கட மணிபர்ஸை வண்டியிலை விட்டு விட்டு வந்திட்டீங்க இந்தாங்க உங்க..." கிழவனின் குரல் அவனைத் தடுத்து நிறுத்தியது.

அவனுக்கு ஆச்சரியம்!

"இன்னைக்கு நீங்கதான் முதல் சவாரிங்க இன்னும் பத்து சதம் கூட்டிக்கொடுங்க" என்று கிழவன் தன்னிடம் கெஞ்சியதும், "போ போ" எனத் தான் விரட்டியதும் அவனுக்கு நினைவில் வந்தது.

மணிபர்ஸைத் துரையிடம் நீட்டினான் கிழவன். "இப்பதானுங்க எனக்கு நிம்மதி. நாங்கள் ஏழைகள் தானுங்க... ஆனா... திருட்டுச் சம்பாத்தியம் ஆகாதுங்க ஆமாங்க நீங்க மறந்து போய் பர்ஸை ரிக்ஷாவிலை தவறவிட்டிருக்கலாம்.

அதை நான் உங்க கிட்ட கொடுக்காம இருந்தா அதுவுந் திருட்டுத் தானுங்க

"களவெடுத்துச் சேர்க்கிற பொருள் ஒருக்காலும் நிலைக்காதுங்க எவ்வளவுதான் சாப்பாட்டுக்கு இல்லாமல் செத்தாலும் பெரியவங்களாலை பழிக்கக்கூடிய செயலைச் செய்யாதே" என்று தன் தாய் தன்னிடம் கூறியதாக கிழவன் சொல்லியதும், முன்பு படித்த திருக்குறள் ஒன்று வாலிபன் மனதில் வந்து உதித்தது.

"ஈன்றாள் பசி காண்பாளாயினுங் - செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை"

"தன்னை ஈன்றெடுத்தவள் பசியால் வாடி இருந்தாலும் பெரியோர்களாற் பழித்தொதுக்கப்பட்ட செயல்களைச் செய்யாதே" என வகுப்பாசிரியர் சொல்லித்தந்த குறளை நினைத்துக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்த தன்னிடம் இல்லாத கருணை, பண்பு என்பன ரிக்ஷா இழுக்கும் அந்த ஏழையிடம் இருந்ததைக் கண்டு வெட்கத்தினால் தலைகுனிந்-தான்.

குற்றம் செய்த அவன் மனமே அவனைச் சுடு நெருப்பாய்த் தகித்தது.

வாலிபனுக்கு வியர்த்துக்கொட்டியது. கிழவன் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் அவனைக் கொல்லாமற் கொன்றது.

மனிதனுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்ட ஒன்று அறிவு என்பதையும், அதை இது நாள்வரையும் தான் பயன்படுத்தாமலிருந்ததையும் எண்ணிய அவனுக்கு, கிழவனின் அறிவுரைகள் பொன்மொழிகளாக ஒலித்தன.

"இந்தாங்க பெரியவரே இதை வைத்துக்கொள்ளுங்க" என்று தனது சட்டைப் பைக்கட்டில் இருந்து ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து நீட்டினான். வாலிபனின் வற்புறுத்தலின் பேரில் அதனைப் பெற்றுக்-கொண்டு கிழவன் அங்கிருந்து சென்றான்.

தெய்வம்தான் தனக்கு வந்து அறிவு புகட்டியதாக வாலிபன் நினைத்துக்கொண்டான்.

"இனிமேல் கூலிவேலை செய்தாவது பிழைப்பேன். திருட்டுத் தொழிலில் ஈடுபட மாட்டேன்" என்று தனக்குள் உறுதிப்பாடும் எடுத்துக் கொண்டான்.

முதல் வேலையாக மணிபர்ஸில் இருந்த விலாசத்தின்படி அதனைப் பறிகொடுத்தவனின் இருப்பிடத்தை நாடி ஓடினான்.

வீட்டுவாசலில் தான் தேடிவந்த இளைஞன் சென்று கொண்டிருப்-பதைக் கண்டு அவனை அழைத்து மணிபர்ஸைத் திருப்பிக் கொடுத்-தான்.

"கால்களில் விழுந்து மன்னிப்புக்கேள்" என்று திருடியவனின் நெஞ்சம் இடித்துரைத்தாலும் போலிக் கௌரவம் அதனைச் செய்ய-விடாது தடுத்தது.

தவறவிட்ட பொருளைத் தன்னிடம் கொண்டு வந்து தந்ததற்காக அந்த வாலிபனை ராஜன் மனமாரப் பாராட்டினான். ஆனால் அந்தப் பாராட்டுதல்களைப் பெறவேண்டியவன் எங்கோ ஒரு சேரிப்புறத்தில் தெருவோரத்தில்....



காலையிலிருந்து அலைஞ்சு திரிஞ்ச களைப்பும், இதுவரை ஒன்றும் சாப்பிடாததனால் ஏற்பட்ட வாட்டமும் முகத்தில் தென்பட்டாலும், தான் செய்து விட்ட பெருமையின் ஒளி முகத்தில் பிரகாசித்தது.

"மணிமேகலை நீ இன்னும் சாப்பிட இல்லையாம்மா"?

"இல்லேப்பா நீங்க வராம நான் சாப்பிட மாட்டேன் என்று உங்களுக்-குத் தெரியுந்தானே" பதிலிறுத்தாள் மணிமேகலை

"சரி சரி சாப்பாட்டைப்போடு" என்றான் மாடசாமி

அச்சிறு சட்டியிலே அவள் காய்ச்சி வைச்சிருக்கும் கஞ்சி அவர்கள் இருவருக்கும் போதாதுதான்.

ஆனாலும் மாடசாமிக்கு அது தேவாமிர்தமாக இனித்தது.

மாடசாமி கஞ்சியை ருசித்துக் குடிப்பதை பார்த்தவாறு உட்கார்ந்-திருந்தாள் மணிமேகலை.

❑ ❑ ❑ ❑ ❑

**சிந்தாமணி**
**07-06-1969**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவரிமான்

ஆலயமணியின் ஓசை கேட்டுப் படுக்கையைவிட்டு எழுந்த தங்க மலர். கணவனின் பாதங்களைத் தனது இரு கரங்களாலும் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். விலகி இருந்த போர்வையை எடுத்து அவன் கால்களைப் போர்த்தி விட்டு வெளியேறினாள் அவள்.

காலைக்கடன்களை ஒன்றன்பின் ஒன்றாகச் செய்து முடித்தாள். நீராடிவிட்டுவந்து சுவாமி அறைக்குள் புகுந்தாள். பாலமுருகன் அவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான். குங்குமச் சிமிழைத் திறந்து மங்கலச் சின்னத்தை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டாள்.

காப்பியை கோப்பையில் ஊற்றி அதை எடுத்துக்கொண்டு படுக்கை அறையினுள் நுழைந்தாள். சிறிது நேரத்துக்கு முன்பே கண் விழித்துக்கொண்ட தேவன். தங்கமலர் வருவதைக் கண்டதும் அயர்ந்து தூங்குபவனைப் போல பாசாங்கு செய்து கொண்டிருந்தான்.



ஸ்டூலில் மெதுவாக காப்பிக் கோப்பையை வைத்துவிட்டு .அவன் காலடியில் சென்று உட்கார்ந்தாள் தங்கமலர்.

"அத்தான்...!"

"உம்....!" அடுத்த பக்கம் திரும்பிப்படுத்தான்.

"அத்தான் எழும்புங்கோவன். காப்பி ஆறப்போகுது"

என்று சொல்லிக் கொண்டே கணவனின் உடலின்மேல் இருந்த போர்வையை அகற்றினாள்.

தேவன் மெல்லியலாளின் கையைப் பிடித்திழுத்து...! கன்னியவளின் கன்னங்கள் இரண்டும் குங்குமச் சிவப்பாக மாறின. அவன் கொடுக்க மிகுதிக் காப்பியைப் பருகிய போது அது தேனாமிர்தமாக இனித்தது.

அலுவலகத்திற்குப் புறப்பட ஆயத்தமாகி விட்ட அத்தானுக்கு கோர்ட்டை எடுத்துவந்து மாட்டி விட்டாள் தங்கமலர். "சரி போய் வரட்டுமா கண்ணே...." என்று விடைபெற்றான் தேவன். உதட்டில் ஒரு புன்சிரிப்பைச் சிந்தி கணவனுக்கு விடை கொடுத்தனுப்பினாள்.

"இன்றைக்குத் தன்னும் அவர் நல்லபடியாக வீடு வந்து சேரவேண்டும் இறைவா....!" என இறைவனை வேண்டிக் கொண்டாள்.

பள்ளிப் பருவத்திலே எத்தனையோ கற்பனைக் கனவுகள் கண்டு மகிழ்கிறோம். வாலிப வேகத்தோடு மனோகரமான மாலை வேளைகளில் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர்களுடன் காதல் கதைகள் பேசி மகிழ்கிறோம். தங்கமலரும் நம்மிடையே ஒரு அங்கம் தானே!

தனது இதயங்கவர்ந்தவனின் அன்புப் பிணைப்பிலே இன்பசுகம் காணலாம் காலை மாலை காதல் கீதம் பாடலாம் என ஆயிரமாயிரம் கற்பனைக் கனவுகளில் மிதந்தவள்தான் அவளும் ஆனால்.....?

எண்ணியபடி எதுவும் நடந்துவிட்டால்....?

"எனது மகள் மீனவன் ஒருவனைக் காதலிப்பதா"? என எரிந்து விழுந்தார் தங்கமலரின் தகப்பனார்.

உயர் சாதியினர் என்று கூறிக்கொள்பவர்களிடையேகூட உயர்வு - தாழ்வு, ஏற்ற - இறக்கம்!

"இனி நான் இருந்து என்ன பயன்? எப்படி ஊரார் முகத்தில் விழிக்க முடியும். என்னுடைய மகளே என் மானத்தை விற்கிற அளவுக்கு வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு இனியும் உயிரோடு இருக்கவா?" என்று தற்கொலை செய்து கொள்ளப் போவதாகப் பயமுறுத்திய தகப்பனாரின் வார்த்தைகளுக்கு எதிர்வார்த்தை கூறமுடியாத நிலையில் யாரோ ஒருவனுக்குக் கழுத்தை நீட்டினாள் தங்கமலர்.

திருமணமாகி விட்டால் தாலி கட்டிய கணவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் அவனையே தெய்வமாக வரித்து வாழ்க்கை நடத்தும் தமிழ்ப் பெண்களின் பண்பாட்டிற்கு அமைய தங்கமலரும் வாழத் தலைப்பட்டாள். வாழ்வில் புதியதோர் அத்தியாயத்தை ஆரம்பித்தாள்.

கொழும்பிலே பெரிதாக வாழ்க்கை நடத்துபவர்கள் மதுவின் மயக்கத்திலேதான் இன்பம் காண்கின்றார்கள் என்ற உண்மையை, குடித்தனம் நடத்துவதற்காகக் கொழும்புக்கு வந்த பின்பு தான் உணர்ந்து கொண்டாள் தங்கமார்.

மதுவின் வசப்பட்டு, மதிகெட்டு வாழ்க்கை நடத்துபவர்களில் தனது கணவனும் ஒருவனாக இருப்பதைக் கண்டு துன்பம் கொண்டு நெஞ்சம் கலங்கினாள். கொஞ்சம் கொஞ்சமாகச் சீதனப்பணமும் கரைந்து கொண்டே வந்தது.

காலையில் "கண்ணே! மணியே!" என்று இன்மொழி பேசிச் செல்லும் தேவன், ஊர் உறங்கும் வேளையில் ஆடி அசைந்து வீடு வந்து சேருவான். அவனிடத்து அவள் பட்ட துன்பமோ கொஞ்ச நஞ்சமல்ல. ஆனாலும் கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்" என்ற கோட்பாட்டிற்கமைய அவள் வாழ்வும் ஓடிக்கொண்டிருந்தது.

மங்கை நல்லாள் கணவன் வரவிற்காகக் காத்திருக்க, அவனோ ஹோட்டல் ஒன்றில் மதுவென்னும் அமுதத்தில் மூழ்கிக் கிடந்தான். ஹோட்டல் பணியாளன் ஊற்றிக் கொண்டிருக்க, தான் மற்றவர்களுக்கு ஒரு காட்சிப் பொருளாக மாறிவிட்டது தெரியாமல் குடித்துக் கொண்டிருந்தான்.

பைத்தியக்காரன் போல அவன் இருந்த கோலம் பக்கத்தில் குடித்துக் கொண்டிருந்தவன் சிந்தனையையும் திருப்பியது. ஒரு ஏளனச் சிரிப்பைச் சிந்திய வண்ணம் அவனும் அங்கிருந்து அகன்று விட்டான் மனதைக் கட்டுப்படுத்தக் கூடியவர்கள் ஓரளவோடு திருப்திப்பட்டுக் கொள்கிறார்கள். ஆனால் தேவனோ....?

போதை தலைக்கேறியதும் எழுந்து நின்று வீண் வார்த்தைகள் பேசவும் தொடங்கி விட்டான். கையில் மதுக்கிண்ணத்தை ஏந்திய வண்ணம் மேசைக்கருகே சென்றான் அவசரமாக குடித்துவிட்டு மணிபர்ஸிலிருந்து பணத்தை எடுத்து நீட்டிக் கொண்டிருந்தான் இன்னுமொருவன்.

அவன் மணிபர்ஸிலிருந்த புகைப்படம் தற்செயலாக தேவனின் கண்களில் பட்டுவிட்டது. வெறிமயக்கத்திலும் அந்தப் படத்தை உற்றுப்பார்த்தான். சந்தேகமேயில்லை...!

"தங்கமலர் டியேய்..." எனக் கத்திக் கொண்டே ஆத்திரத்தின் பிம்பமாய் வெளியேறினான் தேவன்.

அந்த வார்த்தைகள் காசைக் கொடுத்துக் கொண்டிருந்த பாலச்சந்திரனின் கவனத்தைத் திருப்பியது. தனது மணிபர்ஸிலிருந்த புகைப்படத்தைப் பார்த்து விட்டு ஆத்திரத்தோடு ஒருவன் வெளியேறிச் செல்வதைக் கண்டதும் தானும் அவனைப் பின் தொடர்ந்தான்.

பாலச்சந்திரன் தான் தங்கமலரின் பழைய காதலன் என்ற உண்மை தேவனுக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. ஆகவேதான் அந்நியனொருவனின் மணிபர்ஸில் தனது மனைவியின் புகைப்படத்தைக் கண்டதும் ஆத்திரத்தோடு வீட்டை நோக்கி ஓடிக் கொண்டிருந்தான் தேவன்.

"தங்க மலரும் இங்குதான் இருக்கின்றாள். ஆனால் இவன் போகும் போக்கைப் பார்த்தால் நிச்சயமாக ஏதோ நடக்கத்தான் போகின்றது. இவன்தான் அவளின் கணவன் போலும்" என நினைத்துக் கொண்டே உண்மையைக் கூறி தங்கமலரைக் காக்க வேண்டுமென்ற ஆவலோடு தேவனைப் பின் தொடர்ந்தான் பாலச்சந்திரன்.

படீரென்று கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த கணவனைக் கண்டதும், வழமை போல அணைத்துச் சென்று படுக்க வைப்போம் என்ற எண்ணத்தோடு ஓடிவந்தாள் தங்கமலர். அவன் கண்கள் நெருப்பைக் கக்கின.

"டியேய்.... எத்தனை நாளாடி ஆசை நாயகனோடை..." வார்த்தைகள் நஞ்சைக் கக்கின.

"அத்தான் நீங்கள்..." வார்த்தைகள் பூர்த்தியாக முன்னம் அவளது கன்னத்தில் மின்னல் ஒன்று மின்னியது.

அவனுடைய வலிமை மிக்க கரங்கள் இரண்டும் அவள் கழுத்தை நெருடின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாரடி அவன்...? ஏன் உன் கள்ளக் காதலன் இன்னும் வந்து சேரவில்லையோ...?" நாடக பாணியில் வசனங்கள் வெளிவந்தன.

மின்சாரத்தினால் தாக்குண்டவள் போலத் துடிதுடித்துப் போனாள் தங்க மலர். அவள் நெஞ்சத்தில் நிறைந்த துன்பவெள்ளம் கண்களின் வழியாகச் செந்நீராகப் பாய்ந்தது.

"அத்தான் கண்ணாற் கண்டதும் பொய் காதால் கேட்டதும் பொய் தீர விசாரித்தறிவதே மெய் ஆத்திரத்தில் அறிவை இழந்து விடாதீர்கள் "கெஞ்சினாள், மன்றாடினாள்.

முன்பொருமுறை தன் காதலனிடம் கொடுத்த புகைப்படம் தான் இத்தனைக்கும் காரணம் என்ற உண்மை அவளுக்கு எப்படித் தெரியம்...?

தேவன் மனதில் இருந்த ஆத்திரம் அத்தனையும் அவனது கரங்களின் வழியாக அவள் கழுத்திலே விளையாடின உடல். உள்ளம் அத்தனையும் சோந்துவிட்டாள் தங்கமலர். மனஞ் சோர்ந்து விட்ட நிலையில்...?

"தங்கமலரைக் காணவேண்டும் சுழன்றடிக்கப்போகும் சூறாவளியி-னின்றும் அவளைக் காக்க வேண்டும்" என்று விரைந்து வந்த பாலச்-சந்திரன் சாளரத்தினூடாக அங்கே நடந்து கொண்டிருந்த பயங்கரத்-தைக் கண்டு கொண்டான்.

"மிஸ்டர் உங்களைத்தான்..."பாலச்சந்திரனின் அழைப்பு தேவனின் காதிலும் விழுந்திருக்கவேண்டும்.

தங்கள் குடும்ப விவகாரத்தில் இன்னொருத்தன் தலையிடுவதா? என்ற எரிச்சலோடு திரும்பினான் தேவன். பாலச்சந்திரன் நிற்பதைக் கண்டதும் அவன் ஆத்திரம் அளவு கடந்தது.

தாங்கள் இருவரும் மனமொத்த காதலர்களாக விளங்கியதையும், ஆனால் தெய்வீகக் காதலின் புனிதத்தன்மை கெடும்படியாக என்றாவது நடந்து கொள்ளவில்லை என்பதையும், தங்கமலரின் திருமணத்திற்குப் பிறகு மனமுடைந்தவனாக அந்த ஊரைவிட்டு வெளியேறியதையும், முன்பு கொடுத்த புகைப்படத்தையே அவள் நினைவாக வைத்திருப்-பதையும் பாலச்சந்திரன் விளக்கிய போதுதான், தேவனுக்கு தனது அறிவீனம் புலப்பட்டது.

மதுவெறியோடு ஆத்திரமும் சேர்ந்து கொள்வே தான் அறிவை-யிழந்து, மலரினும் மென்மையானவளினது உடலையும், உள்ளத்தையும்



வருத்திவிட்டதை எண்ணி தன்னைத்தானே நொந்து கொண்டான் தேவன்.

"அவளை அள்ளி அணைக்க வேண்டும். அவளிடம் தான் மன்னிப்புக் கேட்கவேண்டும்" என்ற நினைவோடு அவளின் கரங்களைப் பற்றினான். திருந்தியவனின் அன்பு அணைப்பிலே சிக்குண்ட தங்கமலர் என்று-மில்லாதபடி அவனை உற்றுநோக்கினாள். அவளது அந்தப் பார்வை....?

"ஏதோ" வேலை செய்யத் தொடங்கவே அவனது அணைப்பிலே துவண்டாள் அவளது கண்கள் சொருகத் தொடங்கின.

தனது இரும்புக் கரங்களினால் கழுத்தை நெரித்த படியாத்தான் களைப்பினால் சாய்கின்றாள் என எண்ணினான் தேவன் ஆனால்...?

அத்...தான்....என்னை....மன்னித்துக் கொள்ளுங்கள்....நான்.... கணையாயிலியிருந்த வைரத்தை.... விழுங்கிவிட்டேன்." என்றாள் தங்கமலர். வார்த்தைகள் தடுமாறின.

சிறிது நேரத்தில் அத்தானின் அணைப்பிலே, சுமங்கலியாக அவள் உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது.

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் - அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"
தன் உடம்பிலிருந்து மயிர் நீங்கினால் உயிர்வாழா
கவரிமானைப் போன்றவர் மானம் அழிய நேர்ந்தால்
உயிரைவிட்டுவிடுவர்.

தேவனின் அழுகை ஓலம் எங்கும் வியாபித்துப் பரந்தது.

❑ ❑ ❑ ❑ ❑

சிந்தாமணி
29-06-1969



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் வெளிச்சத்துக்கு வருகிறாள்!

எனது திருமணம் முடிந்து விட்டது! காதலித்துத் திருமணம் செய்பவர்கள் சிலர். பெரியவர்கள் பார்த்து மணம் பேசி, நாள் வைத்து, அம்மி மிதித்து, அருந்ததி கண்டு இல்வாழ்வை ஆரம்பிப்பவர்கள் வேறு சிலர்.

பெற்று வளர்த்தவர்களுக்குத் தெரியாமல் வீட்டை விட்டு ஓடி தாம்பத்திய வாழ்வை ஆரம்பிப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். எனக்கு நடந்துவிட்ட இந்தத் திருமணம்...?

நாளை பொழுது விடிந்ததும் இங்குள்ளவர்களுக்கு எனது அவசரம் பற்றித் தெரியவரும். நாளை மறுநாள் பல நூறு மைல்களுக்கப்பால் இருக்கும் பெற்றவளுக்கு, உடன் பிறந்ததுக்கு ஏன் ஊருக்கே புரிந்து விடும்.

மற்றவர்களின் புதினங்களில் இன்பம் காண்பவர்களுக்கு சில நாட்களுக்கு அலட்டிக் கொள்ளப் புதியதோர் செய்தி கிடைத்துவிடும். சில நாட்களுக்கு ஊரில் என்னைப் பற்றியே பேச்சுக்கள் அடிபடும்.

எல்லாரும் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்..? நான் சீர்திருத்தங்கள் பேசி, எழுதி வருகின்ற போதெல்லாம் தங்களுக்குள் என்னைப் பற்றி, நான் இல்லாத வேளைகளில் எள்ளி நகையாடியவர்கள் என்னை நினைத்து...?

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றனவென்றால், எனது திருமணமும் அங்கு தான் நிச்சயமாகி இருக்க வேண்டும்.

"எப்படியோ" சேர்த்து வைத்திருக்கும் தங்கள் பணத்தைக் கொண்டு என்னை விலைக்கு வாங்கி விடலாம் என்று நப்பாசை கொண்டிருந்தவர்களுக்கு, சீதன மார்க்கெட்டில் என்னை வீழ்த்தி விடலாம் என்று கனவு கண்டுகொண்டிருந்தவர்களுக்கு எனது கலியாணச் சேதி தெரியவந்ததும் சிறிது ஆத்திரம் வரத்தான் செய்யும்.

தலையாட்டிப் பொம்மைகளிடம், எப்படியும் தங்கள் செல்வங்களைக் கட்டி அடித்து விடுவார்கள் அந்தச் சீமான்கள்.

தங்கள் பெண்ணை மணம் முடிக்கவில்லை என்பதற்காக உறவு முறைகளை வெட்டிப் பிரித்துவிட்ட உறவினர்கள் சிலர், நான் ஏதோ பாவக் குழியில் விழுந்துவிட்டதாக எண்ணி அற்ப சந்தோஷத்தை அனுபவிப்பார்கள்.

நாங்கள் ஏழ்மையில் உழன்ற போது எட்டியும் பார்க்காத, நான் வேலையாகி ஓரளவு நல்ல நிலைக்கு வந்த பின்பு உறவு முறை கொண்டாடுகின்ற ஒரு சிலர், என்னால் தங்கள் குடும்பமானமே அழிந்துவிட்டதாகக் கொதித்தெழவும் செய்வார்கள்.

"சீதனம் இன்றித் திருமணம் செய்து கொள்ள மாட்டோம்" என்ற கொள்கைத் தங்கங்களுக்கு நான் ஒரு விசரனாகவே தென்படுவேன்.

"....கவனமாயும் புத்தியாயும் வேறு ஏதும் தொடர்புகள் இல்லாமல் ஈடுபடாமல் நடந்து கொள்ளவும். அம்மா உனக்கு கனக்கப் புத்தி கூறமாட்டாள்" என்று கடிதம் எழுதிய அம்மாவின் முகத்தில் இனி எப்படி விழிப்பது?

"அம்மாவின் விருப்பப்படி ஊரிலேயே திருமணம் செய்திருந்தா..." ஒரு தடவை எண்ணிப் பார்க்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரிற்தானே அண்ணாவும் கலியாணம் செய்தார். இன்று பெற்றவளையோ உடன் பிறந்ததையோ தனது சீதன வீட்டில் வைத்து உபசரிக்க முடியாதவராக - உப்புச்சப்பற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றாரே?

"அந்த ஊர் வாழ்க்கை எனக்கும் வேண்டியதுதானா?" என்னை நானே தேற்றிக் கொள்கின்றேன்.

"முற்போக்கான சிந்தனைகளைச் சிந்திப்பது இவற்றைச் செயல்படுத்த முனைவது இவையெல்லாம் தவறுகள் என்றால் அத்தவறுகளையே என் வாழ்நாள் பூராவும் செய்வேன்" என்றோ மனதில் பதிந்துவிட்ட வாக்கியங்கள் எனக்குத் தெம்பை ஊட்டுகின்றன.

பூவும் மஞ்சளும் அழிஞ்சு போச்சாம். அவள் வெள்ளைப் பிடவைதான் கட்டவேண்டுமாம்? பொழுது விடிகிறதாம். அவளுக்கு இன்னமும் விடியவில்லையாம். அவளைப் பொறுத்தமட்டில் அவளுக்கு விடிவே கிடையாதாம்!

அவள் இருளிலேயே வாழப்பழகிக் கொண்டு விட்டாளாம். சாக்கடைச் சமுதாயத்தின் சட்ட திட்டங்களுக்கிடையில் சிக்குண்டு அவள் மடிய வேண்டியதுதானாம்!

மனைவியை இழந்தவனுக்கு மறுமணம் செய்து கொள்ள உரிமை உண்டென்றால் விதவைக்கு மட்டும் ஏன் அந்த உரிமை மறுக்கப்படவேண்டும்?

ஆசாபாசங்கள் உள்ளத்துணர்ச்சிகள் இவையெல்லாம் மற்றவர்களைப்போல அவளுக்கும் இருக்கத்தானே செய்யும்? அந்த வேட்கை பூர்த்தியாவதை சமூகத்தினர் ஏன் தடைசெய்ய வேண்டும்?

அவளை வாழவும் விடாமல் சாகவும் விடாமல் நடைப்பிணமாக நடமாட வைத்த சமூகம் நாளைக்கு அவளையும் ஏசத்தான் போகின்றது.

வாழ்க்கை நடத்தப் போகின்றவர்கள் நாங்கள். மற்றவர்களைப் பற்றி ஏன் சிந்திக்க வேண்டும்?

பயங்கரமான இருளின் துயரப் போர்வையைக் கிழித்தெறிந்து விட்டேன். நான் நினைத்தபடியே அவளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து விட்டேன்.



சமூகத்தினரின் சட்ட திட்டங்களை விலக்கிக் கொண்டு அவள் வெளிச்சத்துக்கு வருகின்றாள்!

அறையின் மத்தியில் ஒளியைப் பாய்ச்சிக் கொண்டிருக்கும் குப்பி விளக்கின் மஞ்சள் ஒளியில் அவள் தோற்றத்தைக் காண்கின்றேன்.

ஏனோ அவள் கண்கள் பனிக்கின்றன! அது நிச்சயமாகத் துயரக் கண்ணீராக இருக்காது.

இருள் திரை விலகிவிட்டது என்றதனால் ஏற்பட்ட பெருமகிழ்வாக, ஆசைக் கனவுகள் அத்தனையும் நிறைவேறப் போவதனால் ஏற்பட்ட உள்ளத்தின் பூரிப்பாகத்தான் இருக்கும்.

அவள் எழில் வதனத்தில் ஒரு புதுமலர்ச்சி! எங்கள் இருவர்க்கிடையேயும் காதல் ஆட்சி புரியத் தொடங்குகின்றது!

❑ ❑ ❑ ❑ ❑

ராதா
29-11-1969



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளை மனம்!

அம்மாவுக்கு "பிளட் பிரஷர்". ஊறணி ஆஸ்பத்திரியிலை அம்மாவை "அட்-மிற்" பண்ணியிருக்கிறார்கள். வல்வைக் கிராமத்தில் ஒரு பென்னம் பெரிய வைத்-தியசாலையைக் கட்டி வைத்த அந்தப் புண்ணியவாளன் இன்று இவ்வுலகில் இல்லை. ஆனால் அவன் பெயர் என்றைக்-கும் நிலைத்திருக்கும்.

எத்தனையோ விதமான போராட்டங்-களுக்கு மத்தியில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிற எங்கள் ஊரவர்களுக்கு இந்திராணி வைத்தியசாலை மட்டும் இல்லையென்றால் எங்களைப் போன்ற ஏழைகளால் என்ன செய்ய முடியும்?

டாக்டர் நோயாளிகளைப் பார்வை-யிட்டுத் திரும்பிய பிற்பாடு நானும், அண்ண-னும் உள்ளே நுழைந்தோம்.

ஆஸ்பத்திரிக் கட்டிலில் காயப்போட்ட கருவாடாக அன்னையைக் கண்டபோது என் கண்கள் நீர்த்தேக்கமாக மாறுகின்-றன.



எங்கள் இருவர்க்குமாகவே உழைச்சு உழைச்சு உருமாறிவிட்ட அந்தத் தெய்வத்திற்குக் கடைசி காலத்திலேயும் எங்களாலை எவ்வளவு கஷ்ரங்கள்...துயரங்கள்....

அண்ணாவின் அவல வாழ்க்கையைப் பற்றி எண்ணி வருந்தி அன்றாடம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் அவளுக்கு நோய் வராமல் என்ன செய்யும்?

அண்ணாவைப் பற்றிய சிந்தனைகள் மட்டும் தான் அம்மாவை இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்குமா?

இல்லை....இல்லவேயில்லை...!

என்னுடைய வாழ்க்கைக்குதுதவாத வரட்டு வேதாந்தங்களும், அம்மாவின் விருப்பப்படி ஊரிலை கலியாணம் முடிக்க மறுக்கும் முரட்டுப் பிடிவாதமும் தான் அவளின் நெஞ்சத்தை வேக வைத்திருக்கவேண்டும். அந்த வேக்காட்டில் வெந்து நொந்துதான் அவளுக்கு இந்த நோய் வந்திருக்க வேண்டும்.

நான் மனதுக்குள்ளேயே குலுங்கிக் குலுங்கி அழுதேன். பார்வை மங்கிவிட்ட அந்தக் கண்கள் கட்டிலருகே நிற்கும் என்னிடம் எதையோ யாசிக்கின்றன.

நிச்சயமாக "அந்த"ஒன்றைத்தான் அவள் என்னிடமிருந்து எதிர்பார்க்கின்றாள்.

பெண்ணாகப் பிறந்து விட்டவர்களுக்குத்தான் எத்தனை ஆசை அபிலாசைகள்

ஆண்களாகப் பிறந்து விட்ட நாம் ஏதோ ஒரு கடமைக்காக வாழ்ந்து கொண்டிருக்கின்றோமே தவிர, வாழ்க்கையைப் புரிந்து கொண்டு அதன் தத்துவங்களைத் தெரிந்து கொண்டு பிறந்து விட்டதன் பலனை உணர்ந்து கொண்டு வாழ்பவர்கள் பெண்கள் தானே!

கன்னிப் பெண்ணொருத்தி மனதுக்குப் பிடித்த மணாளன் கிடைக்க வேண்டுமென எண்ணுகின்றாள். எத்தனையோ கற்பனைக் கனவுகளைத் தன் இதயத்தின் அடித்தளத்தில் புதைத்து வைத்து "அந்த நாள்" வராதா என ஏங்குகின்றாள். கண் நிறைந்த கணவனோடு வாழ்க்கை நடத்தும்போது கொஞ்சி விளையாட ஒரு பிஞ்சை விரும்புகின்றது அவள் மனம். வம்சத்தை விளங்க வைக்க அவதரித்த குலவிளக்கு நடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டியின் உதவியோடு நடந்து காட்டும்போது "என்மகன் வளர்ந்து பெரியவனாகி நாலுபேர் மதிக்கும்படியாக வாழ வேண்டும்" எனச் சிந்தனை செய்கிறாள் அந்த அன்னை. கால ஓட்டத்தில் சின்னஞ் சிறியவன் பென்னம் பெரியவனாகின்றான். அரும்புமீசை துள்ளும் ஆணழகன், அவன் மனதுக்குப் பிடித்த உத்தியோகமும், கை நிறையச் சம்பளமும் கிடைக்கின்றது. அப்போது பால் நினைந்தூட்டிய அந்தத் தெய்வம், தன் மகனுக்கு ஒரு திருமணம் செய்து கண் குளிரப் பார்க்க வேண்டுமென விரும்புகின்றது.

என்னைப் பெற்றவள் ஏழைதான். ஓலைக்குடிசையிலை வாழ்கின்றோம் என்றால் அந்த ஆசைகள் என் அம்மாவுக்கு மட்டும் இருக்கக் கூடாதா என்ன?

"அம்மா ஒன்றையும் யோசியாதையுங்கோ" கொழும்பிலிருந்து வாங்கிவந்த தோடம்பழப் பார்சலை அவ்விடம் தந்துவிட்டு வெளியேறுகின்றேன்.

அண்ணா சைக்கிள் பெடல்களை மிதிக்கின்றார். வண்டி உருள்கின்றது. நான் பின் ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றேன்.

"அண்ணா டாக்டர் என்ன சொன்னவர்...? "

"அம்மாவை அதிகம் யோசிக்காமல் பார்த்துக்கொள்ளட்டாம்"

அவருடைய வார்த்தைகளில் ஏதோ ஒரு கிண்டல் தொனி.

"அம்மாவுக்கு இப்ப அடிக்கடி சுகமில்லாமல் வந்து கொண்டு கிடக்கிது. என்னுடைய தலைவிதிதான் அப்படியாப் போச்சு. நீயென்றாலும் அவவுந்தை விருப்பத்துக்கு ஊரிலை நல்ல இடமாப் பார்த்து கலியாணம் முடிச்சியென்றால் அவவைச் சந்தோசமா வைச்சிருக்கலாம் தானை...." குற்றமுள்ள என் நெஞ்சு குறுகுறுக்கின்றது.

"அம்மாவின் உடல்நோய்க்கு வேண்டுமானால் மருந்தைக் குடுத்து மாற்றிப் போடலாம். உள்ளத்தில் இருக்கிற மன நோய்க்கு...?

அண்ணாவின் கேள்விக்கணை ஆமிக்காறனின் சப்பாத்துக்கால் உதையைப் போல் என் நெஞ்சத்தைப் பலமாகத் தாக்குகின்றது.

நான் எதுவுமே பேசவில்லை. வீட்டிற்குப் போய்க்கூட ஒன்றுமே கதைக்கவில்லை



உடுப்பை மாற்றிச் சாரத்தைக் கட்டி சேர்ட்டையும் போட்டுக் கொண்டு சைக்கிளில் எங்கோ வெளிக்கிடுகின்றேன்.

சைக்கிள் சக்கரங்கள் செல்வச்சந்நிதியை நோக்கிச் சுழல்கின்றன. அங்கு என் நெருங்கிய நண்பர்கள் இருக்கின்றார்கள் என்ற காரணத்திற்காக மட்டுமல்ல, எனது மன ஆறுதலுக்காகவுமே அங்கு செல்கின்றேன். நான் லீவில் ஊருக்கு வரும் சமயங்களிலெல்லாம் அப்படித்தான். அதுமட்டுமல்ல, நான்முன்பு பள்ளிக்கூட மாணவனாக இருந்த காலத்திலையும் அங்கே செல்வதுண்டு. சிலவேளைகளில் ஏதாவது கஷ்டமான பாடங்களா இருந்தா, அன்றைக்குப் பள்ளிக்குக் கள்ளம் ஒழித்துக்கொண்டும் அங்கு போயிருக்கிறன்.

நண்பன் ராசுவையும் அழைத்துக்கொண்டு கோயிலுக்குத் தென்புறமாக உள்ள ஆற்றங்கரையோரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் சென்றமர்கின்றேன்.

என் இன்பங்களில் மட்டுமன்றி, துன்பங்களில் கூட சமபங்கு எடுத்துக் கொள்பவன் அவன்.

நண்பனின் மடிமீது தலை வைத்துப் படுத்திருக்கும் என்னால், அவனுடைய கேள்விகள் தெற்குமே பதில் சொல்ல முடியவில்லை.

பறிக்குள் போடப்பட்ட மீனாக நான் துடிக்கின்றேன். என் துயரச்சுமை அவனையும் மௌனியாக்கி விட்டது. போலும்.

ஒரு புறம் நான் தெய்வமெனப் போற்றித் துதிக்கும் தாய்.

"என் அன்பு நிறைந்த அன்பரே! எனக்கு நீங்கள்; உங்களுக்கு நான் என்பது இறைவன் முடிவு. இதனை மாற்ற மானிடர் எவராலும் முடியாது. என் உள்ளமெனும் மாளிகையில் என்றோ நீங்கள் குடியேறிவிட்டீர்கள். நான் உங்களிடம் என் மனதைப் பறிகொடுத்துவிட்டேன். என்னைக் கடைசிவரை கண்கலங்காமல் காப்பாற்றுவீர்கள் தானே" எனத் துடிக்கும் என் இதயமலர் மறுபுறம்.

என் கண்களை நண்பனின் கைகள் துடைத்து விடுகின்றன.

நான் எப்பவுமே சின்னப்பிள்ளையாகவே இருந்திருக்கக்கூடாதா? வளர்ந்து பெரியவனாகி உத்தியோகம் பார்க்க வேண்டுமென்று கொழும்புக்குச் சென்றதால்தானே அவளைச் சந்திக்க நேர்ந்தது. அவளைச் சந்திச்சதாலை தானை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையின் மெருகோ, வாலிபத்தின் மினுமினுப்போ, ஆடம்பர ஆடை அணிகளோ, எதுவுமே இல்லாத என்னை அவள் விரும்பியது கூட ஆச்சரியம் தான்! நான் கூட அவளைக் காதலிப்பேனென்று கனவில் கூட நினைத்ததில்லை.

கொள்ளுப்பிட்டிக்கு வேலைக்கு போய் வரும்போது அடிக்கடி பஸ்ஸில் அவளைச் சந்திப்பேன். பள்ளிக்கூட நாட்களிலோ, படிப்பை முடித்துக்கொண்டு வேலையில்லாமல் திரிந்த காலத்திலோ வயதுக்கு வந்த எந்தப் பெண்களுடனுமே நான் பேசுவதில்லை. வேலையாகிக் கொழும்பிற்குச் சென்ற பிறகு தான் முதன் முதலில் பெண்களுடனும் பழகவேண்டும் போலத் தோன்றியது.

முதன் முதலாக மலரின் தங்கையர்களுடன் தான் கதைக்கத் தொடங்கினேன். அன்று அவள் பாடசாலைக்கு வரவில்லையாம். ஆனால் அடுத்தநாள் காலை அவளையும் சந்திக்க நேர்ந்தது. அதன் பிறகு அதிகமாக அவளுடன் தான் கதைப்பேன். காரணம் அப்போது விளங்கவில்லை.

நாட்கள் செல்லச் செல்ல அவள் வருகைக்காக நான் தவமிருக்கத் தொடங்கினேன். மலர் செல்கின்ற இடங்களுக்கெல்லாம் வண்டாக அலைந்து திரிந்தேன். அவளும் என்னை விரும்பினாள். என் உயிரோடு கலந்து உத்தமமான காதலியானாள்.

எனது இந்த உடல். உத்தியோகம், ஒரு காலத்திலை காவாலி - கடப்பளி என்று என்னை ஏசித்திரிந்தவர்கள்கூட மதிக்கும்படியாக நான் இன்று நடத்தும் வாழ்க்கை அனைத்துமே என்தாய் எனக்கிட்ட பிச்சை. தன் இரண்டு காதுத் தோடுகளையும் கழற்றி அடகுவைத்து பரீட்சைக்குக் கட்டப் பணம் தந்திருக்காவிட்டால் நான் எழுதுவினைஞர் பரீட்சைக்குத் தோற்றியிருக்க முடியுமா? அதில் சித்தியடைந்து தபால் பகுதியில் எழுதுவினைஞனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்று கடமை புரிந்து கொண்டிருக்கத்தான் முடியுமா?

பானையில் இருக்கும் சோற்றை அண்ணாவுக்கும் எனக்கும் பங்கு போட்டுத் தந்துவிட்டு பச்சைத்தண்ணி குடித்துப் பசியாறிய அந்தத் தெய்வத்தைவிட நேற்று வந்த ஒருத்தி...

"அம்மா உங்கள் ஆசைகளை நிராசைகளாக்கி அந்த வேதனையில் நீங்கள் வெந்து, உயிர் உடலைவிட்டுப் பிரிந்த பிறகு, உங்கள் படத்திற்கு விளக்கேற்றி மலர்மாலை அணிந்து, திலகமிட்டு ஊர் உலகம் மெச்ச நாடகமாடுவதற்கு நான் விரும்பவில்லை. நீங்கள் செத்து விட்ட பிறகு உங்களைத் தெய்வமாக்காது உங்களுடைய ஆசையை நீங்கள் இருக்கும் போதே உங்கள் கண் முன்னாலேயே நிறைவேற்றுறனம்மா"

என் உதடுகள் முணுமுணுத்துக் கொள்கின்றன. நான் செய்யப்போகும் இந்தக் காரியத்தினால் இதயமலர் மனமுடைவாள்; நம்பிக்கைத்துரோகி நயவஞ்சகன் என்றெல்லாம் என்னை ஏசவும் செய்வாள். நான் அவளை என் உயிரினும் மேலாக நேசித்தேன் ஆனால் அவள் உடலை என்றாவது கழங்கப்படுத்தியதே இல்லை.

நரம்பில்லாத நாக்கைச் சுழற்றி எதை எதையோ பேசும் சாக்கடைச் சமுதாயத்தினர் இதை நம்ப மறுப்பார்கள். அவர்களைப் பற்றி என்றைக்குமே எனக்குக் கவலை இல்லை. உண்மை அவளுக்குத் தெரியுந்தானே!

நெஞ்சின் சுமை நீங்கி விட்டதற்கான அறிகுறி. என்னை நான் உணர்ந்து நான் செய்து கொண்ட முடிவு.

எனது முடிவை ஆமோதிப்பதைப் போல,

சன்னதி முருகனின் மணி "டாண்....டாண்...." என ஒலிக்கத் தொடங்குகின்றது.

❑ ❑ ❑ ❑ ❑

**அஞ்சலி**
**ஜனவரி - பெப்ரவரி 1972.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெத்த மனம் பித்து!

எனக்கு அழுகை அழுகையாக வருகுது. கொழும்பாலை அந்தக் கடதாசி வந்த நேரத்தில் இருந்து நான் அழுது கொண்டிருக்கிறன். எனக்கு ஆறுதல் சொல்ல ஆருமே இல்லை. சேதி கேள்விப்பட்டுப் போலை ஒருசிலர் வந்திட்டுப் போயினம் தான். ஏன், இவ்வளவு நாளும் என்ரைவீட்டு வாசற்படி தெரியாதவைகூட ஒப்புக்கு வந்து பறைஞ்சு போட்டுப் போயினம். இவையளெல்லாம் எனக்கு ஆறுதல் சொல்ல வந்தவையெண்டு நான் சொல்ல மாட்டன். சும்மா புதினம் அறிஞ்சு கொண்டு போகலாமெண்டும், பூராயக் கதைகளேதும் சொல்லலாமெண்டும் தான் வந்திருப்பினம். இவையளைப்பற்றி எனக்கு விளங்காதே...?

பக்கத்து வீட்டுப் பரிமளத்துந்தை மேள் புருஷனோடை கோவிச்சுக்கொண்டு கிணத்துக்கை விழுந்து செத்த அண்டு எவ்வளவு விண்ணாணக் கதையளெல்லாம் கதைச்சவளவை. நரம்பில்லாத நாக்குகளை எப்படியெல்லாம் சுழட்டினவளவை ஆறுதல் சொல்ல வந்திட்டினமாம்... ஆறுதல்? புருஷன்மார் உழைச்சுக் கொண்டு வந்து கொட்ட நேரத்துக்கு நேரம் திண்டு போட்டு திமிரெடுத்துக்கொண்டு திரியிறவளுகள், வீட்டுக்கு வீடு - படலைக்குப்படலை ஊரார் கதை சொல்லிக் கொண்டு திரியிறவளவை எனக்கு ஆறுதல் சொல்லப் போகினமாம்.... ஆறுதல்!

தங்கடை முதுகளிலை உள்ள புண் அவையளுக்குத் தெரியுமே?

இவளுகளைக் காணக் காண, அவன் சின்னவனில எனக்கு கோவம் பத்திக் கொண்டு வருகுது. அவன் செய்த எளிய வேலையாலைதானை ஊரிலை திரியிற சொறி நாயளட்டையெல்லாம் நான் கேக்காத கேள்விகளைக் கேக்க வேண்டி இருக்குது.

அவன் ஊருக்கு வரப்போறானாம்!

ஆசையோடை அம்மாவுக்குக் கடிதம் போட்டிருக்கிறான். பொறுக்கிப்பயல்...துரும்பன்! பெத்தவளெண்டு ஒருத்தி இருக்கிறாளெண்டு நினைப்பிருந்தா அப்பிடிச் செய்திருப்பானே...? அவனை இங்கை வரச் சொல்லி நான்தான் வெத்திலை பாக்கு வைச்சு அழைச்சனாக்கும்!

இதுகளைப் பெத்து வளர்த்து என்ன சுகத்தைக் கண்டன்? தேப்பனுக்குத் தேப்பனா, தாய்க்குத் தாயா இருந்து கஷ்டப்பட்டுத்தான் என்ன பலன்? அது மனுஷன் எங்களை நடுத்தெருவிலை தவிக்க விட்டுப்போட்டுக் கடலோட போன அண்டைக்கே நானும் செத்துத் தொலைஞ்சிருக்கவேணும். எனக்கு இப்ப எண்டாப் போலை இருக்கு. மாதப் பிறப்பு அண்டைக்கு வெள்ளாப்போடை சன்னதி கோயிலுக்குப் போயிட்டு வந்து அரிச்சினைச் சாமானுகளையும் என்னட்டைத் தந்து போட்டு பயணம் சொல்லிக் கொண்டு போனதை இப்பவும் என்னாலை மறக்க ஏலாமல் கிடக்கு.

பெரிய பொடியனுந்தை நேர்த்திக் கடனுக்கு அன்னதானம் குடுக்கிறதுக்கு சம்பா அரிசி எடுத்துக் கொண்டு வர எண்டு சொல்லி காரைக்காலுக்குப் போனவர்.... போனவர்தான் திரும்பவேயில்லை! காற்றுக் கடலா இருக்குதெண்டு மற்ற வள்ளக்காரங்கள் எல்லாம் திரும்பி விட்டாங்களாம்.

"நீங்க போங்கோ.... காற்றுக் குறைந்துபோடும். நான் பயணம் போட்டு வாறன்" இப்படி மனுஷன் சொன்னதெண்டு அந்த வள்ளக்காரங்கள் இதெல்லாம் நடந்ததுக்குப் பிறகுதான் சொன்னவங்கள்... அந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயசிலை - இளவயசிலை அவருக்கு அப்படி ஒரு முடிவு வருமெண்டு ஆர்தான் நினைச்சம்? எனக்கு ஆகப்பெரிய கவலை என்னெண்டா அந்தத் தெய்வத்தின்ரை முகத்தை கடைசியா ஒரு முறை தன்னும் பார்க்கக் குடுத்து வைக்காமல் போச்சுதே எண்டுதான்.

பனை ஏறுறதுகளுக்குச் சாவு வந்தால், பனை அடியிலை பிணத்தைக் காணலாம். கடலிலை போறதுகளுக்குச் சாவு வந்தால்...?

அதுகள் நடந்து ரெண்டு மூண்டு நாளைக்குப் பிறகு சிறிய தகப்பன்போய் வள்ளத்தை மட்டும் கொண்டு வந்தவராம். பெரிய கல்லடியிலை கொண்டு வந்து விட்டிருக்காமெண்டு சொல்லிச் சொன்னாங்கள். நான் போய்ப் பார்க்க இல்லை.

மலையான மலை மாண்டு போச்சாம்...! அந்த வள்ளம் தான் எனக்குப் பெரிசே...?

அப்ப பெரியவனுக்கு அஞ்சு வயசு. இவன் சின்னவன் வயித்திலை நாப்பது நாள்.

எவ்வளவு காலத்துக்குத்தான் அழுது கொண்டிருக்க முடியும்? மனசைக் கல்லாக்கி குஞ்சு குறுமானுகளுந்தை எதிர்காலத்தை நினைச்சு அதுகளை ஆளாக்கிப் போட வேணுமெண்டு வளர்த்தெடுத்ததுக்கு இதுதான் அதுகள் செய்யிற கைம்மாறு!

அவன் செய்திருக்கிற காரியத்தை நினைக்கேக்கை பெத்த வயிறு பத்தி எரியிது. அவன் இதுக்குத்தான் உத்தியோகம் பாக்க எண்டு சொல்லி வெளிக்கிட்டவனோ? அவன் எப்படியும் சின்னப் பிள்ளையாகவே இருந்திருப்பானெண்டா எனக்கு இந்தக் கரைச்சலுகள் ஏற்பட்டிருக்காது. இதைச் சொன்னாப் போலதான் எனக்கு ஞாபகத்துக்கு வருகுது. அப்ப இவன் சின்னக்குழந்தை.

ஒருநாள் விடியக்காலம்பற தெரு கூட்டிக் கொண்டு இருந்தனான். இவன் தொட்டிலுக்கை நித்திரையாக்கிவிட்டிருந்தனான். எப்படியோ தொட்டிலுக்கிளாலை கீழை இறங்கி தவண்டு தெருப்படலைக்கே வந்திட்டான். கூட்டிமுடிச்சுப்போட்டு சாணி தெளிப்பமெண்டு உள்ளுக்கு வந்தால் இவன் பொக்கை வாயைத் திறந்து சிரிச்சுக் கொண்டிருந்தான். நான் அப்படியே அவனை அள்ளி எடுத்துக் கொஞ்சிக் கொண்டே, "ஏண்டி தேவராசா நீ எப்பவும் அம்மாவுக்குச் சின்னப் பிள்ளையாகவே "இரடி" எண்டு சொல்ல, தெருவாலை போய்க் கொண்டுந்த பெத்தாச்சி, "ஏண்டி வளர்ற பிள்ளையை இப்பிடிச் சொல்லுறாய்"? எண்டு என்னை ஏசிப்போட்டுப் போனவ. அந்தச் சின்னக் குழந்தைதான் இண்டைக்கு இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்திருக்கு.

வெறும் வாயை மெல்லுறவளுகள் இனி வாய் கிழியப் பேசிக்கொண்டு திரிவாளுகள். மாப்பிள்ளை குடுக்க இல்லையெண்டு சொல்லி, என்னிலை எரிச்சல்பட்டுக் கொண்டு நான் இல்லாத இடங்களிலை என்னைத் திட்டிக்கொண்டு திரிஞ்சவளுகள் என்ரை முகத்திலை காறித் துப்பப்போறாளுகள்.

மூத்த பொடியனின்ரை அமைப்புத்தான் அப்பிடிப் போச்சு தெண்டால் இவனுக்கும் அப்பிடியே தலையெழுத்து வாய்க்கவேணும்? ஊரிலை பெண்ணெடுத்தா பொம்பிளைப் பிள்ளையள் இல்லாத எனக்கு பின்னடிக்கு ஆறுதலா இருக்குமெண்டு பெரியவனுக்கு ஊரோடைதான் கலியாணம் முடிச்சு வைச்சன். அதிலை தன்னும் நான் ஏதும் சுகத்தைக் கண்டனோ?

பாவம், ஏழை எளியதுகள் எண்டு சொல்லி இரக்கப்பட்டு சீதனபாதனம் எண்டு தொல்லைப்படுத்தாமல் மாப்பிள்ளை குடுத்துத்தான் என்ன சுகத்தைக் கண்டன்?

கலியாணமான புதுசிலை பொடியன் கண்டபாட்டிலை காசைக் கரியாக்கிறனெண்டுபோட்டு புத்தி சொல்லப்போனா அதுவும் பொல்லாப்பு.

மருமகளுந்தை பழக்கவழக்கங்கள் சரியில்லையெண்டு திருத்தத்துக்கு ஒண்டுரெண்டு கதை சொல்லப்போய், "பொல்லாத மாமி" எண்ட பட்டத்தைவேறு வாங்கிக் கட்டிக் கொண்டன்.

பெண்சாதிக்காறியோடை ஏதோ மனஸ்தாபம் எண்டு சொல்லிக் கொண்டு அவன் பொடியன் என்னோடை வந்து இருக்கிறான். அந்தக் குடும்பத்தையும் நான்தான் பிரிச்சுப் போட்டனாம்!

பாவிகள் போற இடமெல்லாம் பள்ளமும் திட்டியுந்தானே...!

பெரியவனுந்தை வாழ்க்கைதான் ரெண்டும் கெட்டான் நிலையாப்போச்சு. சின்னவனையாவது ஒரு நல்ல இடத்திலை செய்து வைப்பமெண்டா அதையுமெல்லோ கெடுத்துப்போட்டான் அப்பனைத்தின்னி

எத்தனை சம்மந்தங்கள் பேசி வந்ததுகள்... தொண்டைமானாற்றிலை இருந்து.... பருத்தித்துறையிலை இருந்து....ஏன் ஊருக்கை தான் எத்தனை? பெரிய வீடுவாசல் குடுக்கிறம்.... இருபத்தையாயிரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைரொக்கம்... தாறம் எண்டெல்லாம் கேட்டதுகள்தானை... எல்லாத்தையும் இவன் குழப்பிக்கொண்டு வந்ததுக்கு இப்போ எல்லோ காரணம் விளங்குது. இவன் இப்படிச் செய்வானெண்டு தெரிஞ்சிருந்தா ஆவணியிலை சன்னதி கோவில் திருவிழாவுக்கு வந்து நிண்ட போதே கால் கட்டு ஒண்டு போட்டெல்லோ அனுப்பியிருப்பன். கொஞ்ச நாளைக்கு முந்தியே சன்னதியிலை ஆரோ பொடியள் இப்படிக் கதைக்கிறாங்களெண்டு அவன் தமையன் வந்து சொன்னவன் அப்பவும்நான் நம்பேல்லை. நான் கொழும்புக்குப் போய் ரெண்டு மூண்டு நாள் நிண்ட பொழுது அவனின்ரை அறையிலை கூட இருக்கிற பொடியளும்சொன்னவங்கள் அப்பதன்னும் விசரிக்குப் புத்தி வந்துதே?

பவுத்திரம் முத்தினதுக்குப்பிறகு இப்பயோசிச்சு என்ன பலன்?

உம்....எல்லாம் அவனவன் தலைவிதிப்படி தான் நடக்கும். அண்டைக்கு எழுதின எழுத்தைகடவுள் இண்டைக்கு மாத்தியோ எழுதப் போறார்? இல்லை... அவன் இப்படி நடந்திட்டான் எண்டாப்போலை அவனைத் தள்ளி வைக்க முடியுமே?

ஊரை உலகத்தை நினைக்கேக்கைதான் என்னவோ ஒரு மாதிரியா இருக்கு இந்த ஊரிலை அவன் எப்படித்தான் சீவியம் நடத்தப்போறானோ? அவன் நெடுக இங்கை இருக்க மாட்டான். அம்மாவுக்கு கொண்டு வந்து காட்டிப்போட்டு திரும்பவும் கொழும்புக்கு கூட்டிக்கொண்டுபோயிடுவான்.

ஏதோ அவன் தான் புதுசா ஊரிலை நடந்து போட்டானாக்கும். அவன் என்ன ஆருந்தையாவது கழுத்தை முறிச்சு, இல்லாட்டி களவெடுத்துப் போட்டானோ? ஆரோ ஒரு பெட்டையை தனக்குப் பிடிச்சவளை கலியாணம் செய்து போட்டான். அவ்வளவுதான்!

வேதக்காறப் பெட்டையைக் கலியாணம் முடிச்சுப்போட்டானாம்! அதுதான் அவன் செய்த பிழை. ஏன் வேதக்காறி எண்டாப்போலை என்ன? இந்த நாளையளிலையும் ஆரோசாதிசனம் பார்க்கினமே? நானும் முந்தி காய்கனிச்சந்தையிலை சாமான் விக்கேக்கை தண்ணி அள்ளுறதுக்கு "செவ்வேத்தியார்" கோயிலுக்குப் போறனான் தானை... சின்னமடு, பெரிய மடு எல்லாத்துக்கும் தம்பியின்ரை வானிலை போய் கும்பிட்டுக்கொண்டு வந்தனாங்கள் தானே!

பேந்தென்ன சாதியும் சமயமும்....?

ஏதோ தங்களின்ரை மானம் கப்பலேறிப் போச்சு தெண்டு கூத்தாடுறவை - தங்கடை வாய் நாத்தங்களை வெளிப்படுத்துறவை கொஞ்ச நாளிலை அடங்கிப் போயிடுவினம்.

அவன் தான் குடும்பம் நடத்தப்போறவன். தனக்குப் பிடிச்ச பொம்பிள்ளையைக் கலியாணம் பண்ணியிருக்கிறான். அதனாலை எனக்கென்ன? இல்லை ஊராருக்குத்தான் என்ன?

சன்னதியானே...! பொழுதும் உச்சிக்கு வந்திட்டுது. பயணத்தாலை வாறதுகளை வரவேற்கிறதுக்கு ஆயத்தங்கள் பண்ணாமல் நானும் விசரிமாதிரி அலம்பிக்கொண்டிருக்கிறன்.

அப்பாடி....! ஒரு மாதிரியா அலுவல்களை முடிச்சாச்சு. குத்துவிளக்கிலை எண்ணெய் குறையிது போலை. அதுக்குள்ளை கொஞ்சம் தேங்காய் எண்ணையை ஊத்துறன். சிவன் கோயில் ஐயரட்டைப் போய் ரெண்டு மாலையும் வாங்கி வந்து வைச்சிருக்கிறன். இன்னும் கொஞ்ச நேரத்திலை அதுகள் வந்து விடுங்கள். பெரியவனும் அதுகளைக் கூட்டிக்கொண்டு வரத்தான் கார் கொண்டு போயிருக்கிறான்.

தெருவிலை கார் வந்து நிக்கிது. முன்கதவைத் திறந்து கொண்டு பெரியவன் இறங்கிறான். அப்ப மற்றவை பின்னுக்கு இருக்கினம் போலை. பெரியவன் இறங்கிப் பின் கதவைத் திறந்து பிடிக்க சின்னவனும் மருமகள் பெட்டையும் இறங்குகினம். அவள் பெட்டையும் பார்வைக்கு லட்சணமாகத்தானை இருக்கிறாள். குங்குமம் நெற்றியிலை வைச்சு, காஞ்சிபுரம் பிடவையும் உடுத்தி மகாலஷ்மி மாதிரி...

ரெண்டும் என்னரை காலிலை விழுதுகள்... அதுகளுக்கு நிறைஞ்ச வாழ்க்கையைக் குடுக்கும்படி சன்னதியானை வேண்டிக்கொண்டு எல்லாரையும் உள்ளுக்குக் காட்டிக் கொண்டு போறன்.

என்ரை கண்களிலை கண்ணீர் வருகுது. அது ஆனந்தக் கண்ணீர்...!

❑ ❑ ❑ ❑ ❑

ரோஜாப்பூ ஆண்டு மலர்
1972



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் எனும் தெய்வம் !

வாழ்க்கை அவளுக்கு ஒரு சுமையாகக் தோன்றிற்று. ஏழ்மையில் உழல்பவர்களுக்கும், வறுமையால் வாடுபவர்களுக்கும்தான் வாழ்க்கை சுமையாகத் தோன்றுகின்றதா, அல்லது பணக்காரர்களுக்கும் அப்படித்தானிருக்குமோ? - மனத்தில் நினைவுகள் பழுவாக அழுத்தும் வேளையில் படுத்துறங்கி ஆறுதல் அடையலாம் என்றால் பயங்கரமான கனவுகள் - தொடர்ந்து நினைவுகள் சுழற்சியாக அவளைத் திணற அடித்தன.

திருமணம் - கேட்கும் பொழுதும், நினைக்கும் பொழுதும் இனிக்கும் வார்த்தைகள். அப்படித்தான் அவளும் நினைத்தாள் - மகிழ்ந்தாள் - இன்பக் கனவுகள் கண்டு இறுமாந்திருந்தாள். ஆனால் - ?

அவள் நினைவுகள் அனுபவங்கள் எல்லாம் சிதறிச் சுக்கு நூறாகி விட்டன. திருமணம் என்பது ஒரு மாயக்கண்ணாடி. அதன் சக்தி சிலருக்குச் சாதகமாகவும் பலருக்குப் பாதகமாகவும் அமைந்து விடுகின்றதே - ஆண்டவனுக்கு ஏன் இந்த ஓரவஞ்சனை?

துடித்துக் கலங்கும் இதயத்தை ஒரு கையால் அமர்த்திப் பிடித்துக் கொண்டு பூசை அறையில் இருக்கும் ஆதிபராசக்தியின் படத்தைப் பார்த்தாள்.

"தாயே நானும் ஒரு பெண்தானே. என் கலக்கம் உன் கலக்கம் அல்லவா? நான் என்ன பிழை செய்தேன்? ஏழையாகப் பிறந்து விட்டது குற்றமா? திருமணத்துக்காக பெற்றோரின் எண்ணப்படி என்னைத் தாரைவார்த்துதான் குற்றமா?

குலுங்கிக் குலுங்கி அழுதாள் ரமா

வளவளவென இருந்த பட்டுப்போன்ற மேனி பாதியாகிவிட்டது. முற்றத்தில் நின்ற வாழை தண்ணீரின்றி இதழொடிந்து நின்றது போன்றிருந்தது அவள் தோற்றம். நவராத்திரி பூசை ஒன்பது நாளும் உபவாசமிருந்து தேவியின் அருளால் தன் கணவனை அடைந்து விடவேண்டும் என்று எண்ணினாளோ என்னவோ?

"ஏனடி ரமா இப்படியே கிடந்து சாவது என்று தீர்மானித்து விட்டியா?" தாயின் சோகக்குரல் அவளுக்கு உணர்வு வரச்செய்தது.

"அம்மா உங்கள் எண்ணப்படி நடந்து நான் என்ன சுகமாக வாழ்கின்றேனா? இனியாவது..." வார்த்தைகள் வெளிவரவில்லை. குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

நவராத்திரி ஏழாம் நாள் பூஜை அறையில் ஆதிபராசக்திக்கு பூஜை செய்து கொண்டிருந்தாள் ரமா

"அயோக்கியப்பயல் இவனுக்கு இப்படி வராமல் வேறை என்ன செய்யும்? நம்பினவளுக்குத் துரோகம் செய்தால் கடவுளுக்கு என்ன கண்கெட்டுப்போச்சுதா?"

"என்னங்கோ என்ன நடந்தது. ஆருக்கு என்ன வந்தது? பொன்னம்மா கணவனைக் கேட்டும் குரல்

"அவன் தான்டி உன்ரை மருமேன். கண்ணிருந்தும் குருடனாய் திரிஞ்சானே. இப்போ கண்ணே கெட்டுப் போச்சுதாம். கடவுள் என்று ஒருவன் இல்லையா என்ன?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் என்ன சொல்லுறியள்?"

"பொக்குளிப்பான் வந்ததாம். நேற்றுத்தான் தண்ணி வார்த்தவையாம் அவனுக்கு கண் தெரியேல்ல என்று யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலை கொண்டுபோய்ப் போட்டிருக்கினமாம்"

"கடவுளே! தாயே! நான் உனக்கு என்ன தீங்கு செய்தேன்? என்னை ஏன் இப்படி வதைக்கின்றாய்? அவர்...அவர்...." கண்கள் இருண்டு கொண்டு வந்தன ரமாவுக்கு.

பணம்...பணம் எண்டாங்கள்...பச்சைக்கொடி போன்ற அவளைப் பரிதவிக்க விட்டவனுக்கு பணம் கண்ணைக் குடுக்குதோ பார்ப்பம்?" என்று தகப்பன் கூறிய வார்த்தைகள் அவளுக்கு கனவில் கேட்பது போன்றிருந்தது. அந்த மயக்க நிலையில் கூட அவருக்கு அந்தக் காட்சி மங்கலாகத் தெரிந்தது.

"போடி...போ...போய் உன் கொப்பரிடம் சொன்ன காசு ஐயாயிரத்தையும் வாங்கிக் கொண்டுவா." கணவன் பேய் பிடித்தவன் போல இரைந்தான்.

"என்ன இது என்னைக் கேட்டா இது எல்லாம் செய்தனீங்கள்..." - ரமா.

"ஓ...ஓ....நீ பெரிய ராசாத்தி, பொறுக்கிப் பயலின்ரை மேள்தானே... போடி...." என்று வேறும்பல கடுமையான வார்த்தைகளினால் ஏசி, கன்னத்தில் நாலு அறையும் வைத்து பிறந்த வீட்டுக்கு கல்யாணமான மூன்றாம் மாதமே திருப்பி அனுப்பிவிட்ட கணவனுக்காக அவள் கதறுகின்றாள்.

"அம்மா...அம்மா...."

பொன்னம்மாள் ஓடி வந்து மகளை அணைத்துக் கொள்கின்றாள். அவள் தள்ளாடியபடியே எழுந்து நின்று "அம்மா என்னை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டு போங்கோ" என்று கதறுகின்றாள். வீட்டில் ஒரே மௌனம். எவரும் எதுவும் பேசவில்லை.

"அப்பா எனக்குக் கல்யாணம் செய்ய வேண்டுமென்ற ஆசையிலை உங்கள் நிலையை மறந்து பணம் தாறதாகச் சொன்னீங்கள். அதனால் வந்த வினை தானே? என்ன செய்தாலும் அவர் என் கணவர். என்னைக் கூட்டிக் கொண்டு போங்கோப்பா..." என்று கெஞ்சினாள்.

"ரமா...ரமா நீயா... இந்தப் பாவியைத் தேடி நீ வந்தியா ரமா?" அவளுடைய கரங்களை இறுகப் பற்றிக் கொண்டே கதறினான் மனோகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் அத்தான் வந்திட்டான். ஐயாயிரம் ரூபாய்க்கு ஆசைப்பட்டு என்னைத் துரத்தினியள். ஆனால் உங்களுக்கு வழிகாட்ட நீங்கள் ஐந்து லட்சம் கொடுத்தாலும் பெற முடியாத ஒன்றுடன் வந்துள்ளேன். இனி எனக்கு கவலை இல்லை. உங்களோடு இணை பிரியாதிருக்கும் ஒரு வாய்ப்பை தேவி எனக்குக் கொடுத்துவிட்டாள்" இன்னும் என்னமோ எல்லாம் பிதற்றினாள் ரமா.

"ரமா நீ என்ன சொல்கிறாய்? எனக்கு எதுவும் புரியவில்லை ரமா" தட்டுத்தடுமாறி அவள் தலையைத் தடவி முகத்தை கைகளில் ஏந்தி கண்ணீரைத் துடைத்தான்.

"இந்த ஒரு நொடிப் பொழுதிலே என் வாழ்வனைத்தின் சுகங்களையும் அனுபவித்து விட்டேன்" என்று அவன் கன்னங்களிலும், இதழ்களிலும் மாறிமாறி முத்தமிட்டாள். அடுத்த நிமிடம் அந்த அறையில் அடியற்ற மரம்போல அவள் விழுந்த சப்தம் கேட்டு வெளியிலே நின்றவர்கள் ஓடி வந்தனர்.

நெஞ்சில் பீறிட்டெழுந்த குருதியுடன் ஒரு கையில், அவள் வீட்டில் இருந்து எடுத்து வந்த கூரிய கத்தியும் ரத்தம் தோய்ந்திருந்தது.

எல்லோரும் கதறினர். நர்சுகள் டாக்டர்கள் விரைந்தனர்.

"டாக்டர்.....டாக்டர்... என் விழிகளை என் கணவருக்கு எடுத்து வைத்துவிடுங்கள். அவரோடு நான் என்றும் பிரியாது வாழ்வேன்" ஏ்னறு தட்டுத்தடுமாறிக் கூறினாள்.

"ரமா" என்று மனோகர் வீரிட்டலறிய குரல் அந்த ஆஸ்பத்திரியைக் கிடுகிடுக்க வைத்தது.

❑ ❑ ❑ ❑ ❑

சுடர்
வைகாசி 1975

# உலகம் வெளிக்குது !

"எளிய பொறுக்கிப் பயல். ஒரு சதத்துக்கும் வழியில்லாத பிச்சைக்கார நாய்க்கு கலியாணம் தேவைப்படுதாம். பாவம்! தாய் தகப்பன் இல்லாத பொடியனெண்டு சொல்லி இரக்கப்பட்டு, ஏதோ பிழைச்சுப் போகட்டும் எண்டு சொல்லி இங்கை கொண்டு வந்து கடையில வேலை செய்யடா எண்டு விட்டால் இதுவும் செய்வான்... இன்னமும் செய்வான்..." எரிமலையைப் போல் குமுறிக் கொண்டே வீட்டினுள் நுழைந்தார் பொன்னம்பலத்தார். அவரது மனைவி செல்லம்மாவிற்கு ஒன்றுமே விளங்கவில்லை.

"இதென்ன இந்த மனுஷன் வெள்ளிக்கிழமையும் அதுவுமா பொரிஞ்சு தள்ளுது. என்னெண்டு கேட்கவும் பயமாக் கிடக்கு...." என தனக்குள் எண்ணியபடியே, அவரது கொதி அடங்கட்டும் என்ற நோக்கிலோ என்னவோ குளிர்பானத்தைக் கொண்டு வந்து கொடுத்தாள் செல்லம்மா.

குளிர்பானத்தைக் குடித்தும் பொன்னம்பலத்தாரின் கொதி அடங்கிய பாடாயில்லை.



"இண்டைக்கே அவன் கடையை விட்டு வெளிக்கிடவேணும். இனி ஒரு நிமிசமும் அவன் இந்த ஊரிலை இருக்கப்படாது. இங்கை நாலு பெரிய மனுசருக்குத் தெரிஞ்சுதெண்டா என்ரை மானம் மரியாதை எல்லாமே போய்விடும்"

"இஞ்சருங்கோ என்னெண்டு சொல்லுங்கோவன். உங்கடை பாட்டிலை கத்திக் கொண்டிருந்தால்.....

செல்லம்மாவின் வார்த்தைகள் எரிகிற நெருப்பிலை பெற்றோல் ஊற்றுவது போலிருந்தது பொன்னம்பலத்தாருக்கு.

அவன்தாண்டி உன்ரை தூரத்துச் சொந்தக்காரனெண்டு இரக்கம் பார்த்தியே... இப்ப அவன் எங்கடை தோளிலை ஏறிநிண்டு காதைக் கடிக்கப் பார்க்கிறான்... எங்கையடி உன்ரை மகள்.....? நல்ல வளர்ப்பு வளர்த்து வைச்சிருக்கிறாய். வரட்டும் அவள் இண்டைக்கு... வெட்டித் துண்டாக்கிப் போட்டுத்தான் வேறை வேலை பார்ப்பன்...." குட்டி போட்ட பூனை போல குறுக்கு மறுக்குமா நடை போட்டார் பொன்னம்பலத்தார்.

அந்தப் பரதேசிப் பயலை கூட்டிக் கொண்டு வரச்சொல்லி பண்டாவை அனுப்பிப் போட்டுத்தான் பொன்னம்பலத்தார் வீட்டுக்கு வந்திருக்கிறார். கடையிலை போய் சத்தம் போட்டால், நாளைக்கு விலையாகப் போகிற அவருடைய மகளுக்குத்தான் கேடு. அதனால்தான் புத்தியாக வீட்டுக்கு கூட்டிவரச் செய்து நாலு சாத்துகை சாத்தி அவனை அனுப்ப வேண்டுமென்பதுதான் அவர் திட்டம்.

"வாருங்கோ துரை.... வாருங்கோ..." பண்டாவுக்குப் பின்னால் பயந்துவந்த ஆனந்தனை, பொன்னம்பலத்தாரின் நக்கல் வார்த்தைகளே வரவேற்றன. ஆனந்தன் உள்ளே காலடி எடுத்து வைத்ததும் வைக்காததுமாக கண்மண் தெரியாமல் அடிகள் விழுந்தன. முதலாளி அடித்தால் பரவாயில்லை. நாலு நாளாவது சோறு போட்டவர். அதற்காக மன்னிக்கலாம். தன்னைப் போல ஒருவன் அதுவும் தன் இனத்தை அடிமைப்படுத்தி இருக்கும் இனத்தில் வந்தவன் அடித்ததுதான் -ஆனந்தனுக்கு வருத்தமாக இருந்தது. செல்லம்மா தடுத்துத்தான் பார்த்தா. முடியவில்லை. தினமும் மாட்டெலும்பு தின்று வளர்ந்த அல்சேஷன் நாயைப் போல் பாய்ந்த பண்டாவுக்கு முன்னால் செல்லம்மா எம்மாத்திரம்?

இத்தனைக்கும் ஆனந்தன் செய்த குற்றம் பொன்னம்பலத்தாரின் செல்வ மகள் யாழினியை உளமார விரும்பியதே. யாழினியும் அவனை மனதார நேசித்தாள். பாழும் வறுமையினால் எம்பிமாருக்கு மூவாயிரமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலாயிரமோ கொடுத்து ஒரு உத்தியோகத்தைத் தனதாக்கிக் கொள்ள வக்கில்லாத காரணத்தினாலேயே அவன் கடையில் வேலை செய்ய நேர்ந்தது. ஜீ.சீ.ஈ.பரீட்சையில் திறமைச் சித்திகளோடு பாஸ் பண்ணிய அவன், பார்வைக்கும் கட்டழகனாகத் தான் காட்சி தந்தான். இவர்களுக்கு தூரத்து உறவும் கூட. சிங்களப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்த காரணத்தினாற் போலும் யாழினிக்கு ஆனந்தனையே பிடித்திருந்தது. ஆனந்தனும் யா்ழினியும் தெய்வீகமாகப் பழகுவது பண்டாவுக்கு - அந்த இரண்டு கால் ஜீவனுக்கு 'ஏனோ' பிடிக்கவில்லை. அதன் விளைவே அத்தனை அமர்க்களமும். உடல் வலியோடும், உள்ளத்தோடு வேதனையோடும் ரயிலேறி ஊர் போய்ச் சேர்ந்தான் ஆனந்தன்.

யாழினி அழுதாள் - புரண்டாள் -துடித்தாள் -கொஞ்சக் காலத்திற்குத்-தான். அதன் பிறகு அவள் ஆனந்தனை மறந்தாளா, மறக்கடிக்கப்பட்டாளா?

சிறிமாவோ அம்மையாரின் ஆட்சியில் ஓரிரு வருடங்கள் கழிந்தன. பொதுத் தேர்தல் வந்தது. ஜே.ஆர்.ஐயா ஆட்சிக்கு வந்தார். ஐயா ஆட்சிக்கு வந்ததனால் பெருமகிழ்ச்சியடைந்த பணக்காரத் தமிழர்களில் பொன்னம்பலத்தாரும் ஒருவர். ஐயாவின் ஆளுக்காக பொன்னம்பலத்தார் தேர்தலில் உயிரை விட்டு வேலை செய்தது அநுராதபுரம் மட்டுமல்ல, தமிழ்ப்பகுதிகளும் அறிந்த செய்தியாகும்.

தேர்தல் காலத்தில் போட்ட இறால் சுறாவைக் கொண்டு வருமென்பதே அவர் நோக்கம். ஆனால் சுறாவா வந்தது.... சூறாவளி வந்தது.

யாழ்ப்பாணத்தில் ஏதோ குழப்பமாம் என்று யாரோ கடைத்தெருவில் பேசியபோது பொன்னம்பலத்தாருக்கு பத்திக் கொண்டு வந்தது. "எல்லாம் இவங்களாலைதான் வாறது. ஐம்பத்தெட்டிலை ஒருக்கா அடிவாங்கிக் குடுத்தாங்கள். இப்ப பிறகு அடிவாங்கிக் குடுக்கப் போறாங்கள் போலை"

"அநுராதபுரத்திலையும் குழப்பம் துவங்கி விட்டுதாம். ஸ்ரேசனிலை ராத்திரி தமிழ் ஆக்களுக்கு றெயிலுகளிலை ஏறி அடிச்சவங்களாம்" காலையில் செய்தி நகரினுள் பரவிற்று.

"இவங்களுக்கு நல்லா அடி விழவேணும். கூட்டணிக்காரங்களுக்கு பார்த்துப் பார்த்து அடிக்க வேணும்" - பொன்னம்பலத்தார் ஒரு ஊறின யூஎன்பிக் கட்டை.



மற்றவங்கடை கடையளை , அடிச்சு, உடைச்சு நெருப்பு வைச்சுக் கொண்டு வாற கூட்டம் தனக்கு ஒண்டும் செய்யாது என்பது அவருடைய நம்பிக்கை.

ஆனால்....

இனவெறிப்பூதம் எவனைத்தான் விட்டுவைக்கும்?

பொன்னம்பலத்தாரின் கடைச்சுவர்கள் தகர்ந்து சிதறின. பச்சை நிறம் பூசிய அவர் கார் சிவப்பு நிறம் கக்கிய நெருப்பில் ஆடிற்று.

அந்த ஒருகணத்தில் பொன்னம்பலத்தார் தமிழனாய்ப் புதிதாக பிறந்தார்.

தன்னுடைய பணத்தில் வளர்ந்த பண்டாவே வீட்டினுள் நுழைந்த கூட்டத்துக்கு தலைமை தாங்கி வரக்கண்ட போது அவருடைய தலை சுற்றிச் சுழன்றது.

அநுராதபுரக் கூட்டிற்குள் குடும்பத்தோடு ஓடிப் போனவர் தமிழ் ஈழத்தின் புனித வன்னி நாட்டு மண்ணில் கால் வைத்து ஒருவாறாகத் தலையை நிமிர்த்தினார்.

பொன்னம்பலத்தாரின் மகள் யாழினிக்கு ஒரு லட்ச ரூபா ரொக்கம், வீடு வளவு காரும் சீதனமாகத் தாறதெண்டு சொல்லி ஒரு என்ஜினியரை பேசி முற்றாக்கி இருந்தது.

பெரிய தமிழரின் மகள் அநுராதபுரத்திலை சீதனச் சொத்தை எல்லாம் இழந்து போனார் என்பது என்ஜினியருக்குத் தெரியும். ஆனாலும் நிலைமையில் இருந்து தப்பித்துக் கொள்ள என்ஜினியர் சொன்ன நியாயம் "கலவரத்துக்குள்ள எந்தப் பெண் பிள்ளைக்கு என்ன நடந்திருக்கும் எண்டு ஆருக்குத் தெரியும்?"

பொன்னம்பலத்தார் என்ன செய்வார்?

சாகலாம்....

ஆனாலும், வவுனிக்குளத்திலை விவசாயம் செய்து கொண்டிருந்த ஆனந்தன் அவர் சாவதை விரும்பவில்லை. விளைவு....?

பொன்னம்பலத்தாரே இப்போது அடிக்கடி செல்லம்மாவிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்- "இப்பத்தாண்டி எனக்கு உலகம் வெளிக்குது"

❑ ❑ ❑ ❑ ❑

சுடர் - 1978



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனங்கள் உடலிற்தான் !

நான் இயக்கத்தில் வந்து சேர்ந்து வருடங்கள் நான்கு கழிந்து விட்டன.

இந்த நான்கு வருடங்களிலும் என்றுமே வீட்டுக்குச் செல்ல வேண்டுமென்றோ, எனது பெற்றோர்களை உடன் பிறப்புகளை சந்திக்க வேண்டுமென்றோ ஆசைப்பட்டதில்லை.

இயக்கத்தில் உள்ள பிள்ளைகளில் பலர் வீடுகளுக்கு விடுமுறையில் சென்று வந்துள்ளார்கள். என்னைப் பொறுத்த வரையில் நான் வீடு செல்லாததற்குக் காரணம், நான் வீட்டிற்குச் சென்றால் வீட்டிலுள்ளவர்கள் என்னை மறித்து விடுவார்கள் என்றோ - அழுது ஒப்பாரி வைப்பார்கள் என்பதனாலோ அல்ல.

வீட்டிற்குச் செல்லவேண்டும் - பெற்றோரை - உற்றார் உறவினரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் ஏனோ எனக்கு ஏற்படவில்லை. அவ்வளவுதான்.

பொதுக்கூட்டங்களில் பேசப்பட்ட ஆவேசப் பேச்சுக்களைக் கேட்டு விட்டோ -வெறுமனே உணர்ச்சியினால் உந்தப்பட்டோ நான் திடீரென்று இயக்கத்துக்கு வந்து சேர்ந்து விட்டவள் அல்ல.



நான் பிறந்து வளர்ந்த வடமராட்சிப் பகுதி, அடிக்கடி சிங்கள ஆட்சியாளர்களின் அடாவடித்தனங்களால் அழிக்கப்பட்ட நிகழ்வுகள் என் மனதில் கொஞ்சம் கொஞ்சமாக போராட்ட உணர்வை வளர்த்துக் கொண்டே வந்தன.

ஆனாலும் பெண்கள் பூரணமாகத் தங்களை போராட்டத்துடன் இணைத்துக் கொள்ளாத நாட்கள் அவை.

ஆரம்பத்தில் 'சுதந்திரப் பறவைகள்' அமைப்பிலேயே என்னை இணைத்துக் கொண்டேன். முதலுதவிச் சிகிச்சை நிலையங்கள் நிறுவப்பட்டு சிங்கள இராணுவத்தினரின் தாக்குதல்களினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு சிகிச்சைகள் செய்வது போன்ற செயல்களில் என்னையும் ஈடுபடுத்திக் கொண்டு வந்தேன்.

உண்ணாவிரதங்கள் - ஊர்வலங்கள் -பொதுக்கூட்டங்கள் என்று நான் திரிந்த ஆரம்ப நாட்களில் எனது வீட்டிலும் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது.

"பொம்பிளைப் பிள்ளையள் கண்ட பாட்டிலை வீட்டை விட்டு வெளிக்கிடக் கூடாது. புலிக் கொடியைத் தூக்கிக் கொண்ட ஊர்வலமெண்டும், உண்ணாவிரதம் எண்டும் றோட்டிலை திரியிறது அவமானம். பொடியளும் பெட்டையளும் சேர்ந்து கொண்டு திரிஞ்சா பார்க்கிறவை என்ன சொல்லுவினம்...." என்றெல்லாம் அம்மா அடிக்கடி சொல்லிக் கொள்வா.

"அவையளோடை சேரக்கூடாது..... இவையளோடை பழகக்கூடாது...." என்றெல்லாம் நச்சரிப்புகள் வேறு.

"சாதி குறைந்தவர்கள் என்று கருதப்பட்டவர்களோடு நான் பேசினால் - பழகினால் -சேர்ந்து திரிந்தால் அவர்களோடு நான் ஓடிவிடுவேன்" என்ற அச்சம் அம்மாவுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

இந்த அழுத்தங்கள் அனைத்தும் போராட்டத்தின் பக்கம் என்னை இழுத்துச் சென்றனவே தவிர, யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஒரு சாதாரண பெண்ணுக்கு ஏற்படுகின்ற படிக்கவேண்டும், திருமணம் செய்ய வேண்டும், குழந்தைகளைப் பெறவேண்டும் என்பது போன்ற சராசரி வாழ்க்கைக்கு என்னை இட்டுச் செல்லவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நெஞ்சத்தினுள் வித்தாக விதைக்கப்பட்டு சின்னஞ்சிறு செடியாக வளர்ந்து கொண்டிருந்த எனது போராட்ட உணர்வுகள் பாரியதோர் விருட்சமாக வளர்வதற்கு 1987இல் இடம்பெற்ற "வடமராட்சி லிபரேஷன் ஒபரேஷன்" நடவடிக்கை வழிசமைத்தது.

ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட அந்தப் பெரிய தாக்குதல்களின் போது அப்பகுதி மக்கள் எல்லோரும் பாடசாலைகளிலும் கோயில்களிலும் தஞ்சம் புகுந்தனர்.

முதலுதவிச் சிகிச்சை நிலையமொன்றில் கடமை புரிந்து கொண்டிருந்த நானும், சினேகிதிகள் சிலரும் எங்கள் பெற்றோர்களோடு கோயில் ஒன்றில் தஞ்சம் புகுந்தபோதுதான் எங்களது மக்களின் மனோநிலையை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது.

"இஞ்சார் பெட்டையள் நீங்கள் இங்கை இருக்க வேண்டாம். எங்கையாவது ஓடி விடுங்கோ... நீங்கள் இங்கை இருக்கிறதாலை எங்கடை பெம்பிளைப் பிள்ளையளையும் ஆமி வந்து பிடிச்சுக் கொண்டு போயிடுவான்... நீங்கள் எங்கையாவது ஓடுங்கோ.... அல்லது ஆமியிட்டைப் போய் சரண் அடையுங்கோ..." என்று கோயில் மண்டபத்தில் கூடியிருந்த எங்கடை ஊர்ச்சனமே எங்களுக்குச் சொன்னபோது, எனக்கு என்னையறியாமலேயே அவர்கள் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அவ்வளவு நாளும் நாங்கள் நடத்திக் கொண்டிருந்த முதலுதவிச் சிகிச்சை நிலையத்தில் எந்த மக்கள் எங்களிடம் வந்து நோய் நொடியென்று சொல்லி மருந்துகளை வாங்கிப் போனார்களோ - காயங்களுக்கு மருந்து கட்டுவித்துக் கொண்டு சென்றார்களோ - அந்த மக்களே எங்களை அந்த இடத்திலிருந்து "ஓடுங்கோ ஓடுங்கோ" என்று விரட்டிய போதுதான்-

"கட்டாயமாக நான் இயக்கத்திற் போய்ச் சேரவேண்டும். இயக்கத்தைப் பற்றி - போராட்டத்தின் அவசியம் பற்றி மக்களுக்குப் புரிய வைக்கவேண்டும்" என்ற உணர்வு ஆத்திரத்தோடு கலந்து கொண்டது.

அமைதிப்படை என்ற பெயரில் இந்திய அழிவுப்படை இங்கு வந்ததும் - நான் அந்தக் காலகட்டத்தில் இயக்கத்தில் என்னை இணைத்துக் கொண்டதும் - அலம்பில் காட்டில் நான் பயிற்சி பெற்றதும் கடந்தகால நிகழ்வுகள்.

இந்தியக்காரனோ- சிங்களவனோ மொத்தத்தில் ஆமியோட சண்டை பிடிக்கிறதெண்டா....



அடிபாட்டுக்குப் போறதெண்டா.....

நாங்கள் எங்களுக்குள்ளேயே போட்டிபோட்டுக் கொள்ளுவம்....

எங்களை அடிபாட்டுக்கு விட இல்லையெண்டு சொல்லி அண்ணையிலை எத்தனை தடவை கோபப்பட்டிருப்பம்....

ஆனா இப்ப என்னாலை அடிபாட்டுக்கு போக ஏலாம இருக்கு என்பதை நினைக்கேக்கை தான்....

போன வருசம் ஆறுமாசத்துக்கு மேலை பலாலிப் பகுதியிலை சென்றியிலை 'குறுப்'புக்குப் பொறுப்பாக இருந்தனான். கட்டுவன் அடிபாட்டினால் ஆமிக்காரங்களைத் தேடித்தேடி ஓடிஓடி அடிச்சனாங்கள்...

ஆனா இப்ப என்னால தேடித்தேடி ஓடி ஓடி அடிக்க முடியாமற் போயிட்டுது எண்டதை நினைக்கேக்கைதான்....

கோட்டை அடிபாடு, சிலாவத்துறை அடிபாடு, மாங்குளம் தாக்குதல் எல்லாவற்றிலும் வெற்றிக் களிப்போடு மீண்ட எனக்கு ஆனையிறவு அடிபாட்டிலைதான்...

ஆனையிறவு அடிபாட்டுக்கு நாங்கள் வெளிக்கிட்டதை இப்ப நினைச்சாலும் எவ்வளவு சந்தோசமா இருக்குது...

❑ ❑ ❑ ❑ ❑

பெண் போராளிகள் நாங்களும், அண்ணாக்களுமாக பல நூற்றுக்கணக்கானோர் எந்தவித கவலைகளுமின்றி "எப்ப அடிப்பம்...? எப்ப ஆனையிறவைப் பிடிப்பம்? என்ற ஆவலோடும் சென்றோம்.

நாங்கள் சென்ற இயக்கச்சிப் பகுதி பரந்த வெளிப்பிரதேசம். அந்தப் பகுதியில் இழப்புக்கள் அதிகம் வருமென்பது எங்களுக்கு முன்பே தெரியும். ஆனாலும் இழப்புக்களை நினைத்தால் நாங்கள் சண்டை பிடிக்க முடியாது. நாங்கள் முன்பு கலந்து கொண்ட எத்தனையோ களங்களில் இழப்புக்களையும் சந்தித்திருக்கிறோம் - வெற்றிகளையும் பெற்றிருக்கின்றோம்.

குழுக்கள் குழுக்களாக நாங்கள் பிரிக்கப்பட்டு அனுப்பப்பட்டோம். முதலில் ஒரு குழு உள்ளே சென்று காயப்பட்டிட்டுது- அல்லது இழப்புகள் ஏற்பட்டிட்டுது என்பது தெரிந்த பின்பே அடுத்த குழு தாக்குதலுக்குச் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பு வாகனம் ஒன்று முன்னே செல்ல அதன் பாதுகாப்பில் எங்களது முதலாவது குழு சென்று கொண்டிருந்தது. எங்களது காவலரண்களிலிருந்து நூறு யார் தூரம் வரை எங்கள் வாகனம் சென்றுவிட்டது. எதிரி தரப்பிலிருந்து எந்தவிதமான தாக்குதலும் எங்கள் பகுதியை நோக்கி வரவில்லை. ட்ராக்டர் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி கொண்டிருந்தது. ஐந்து நிமிட இடைவெளியின் பின் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் காவலரண்கள் அனைத்திலுமிருந்தும் சகலவிதமான ஆயுதங்களும் பயன்படுத்தப்பட்டதை எங்களால் உணர்ந்து கொள்ள முடிந்தது. எங்கள் பகுதியிலிருந்தும் பதில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

எங்களது பாதுகாப்பு வாகனத்தின் மீது எதிரி தரப்பிலிருந்து ஆர்.பி.ஜி.தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதனால் அது தீப்பற்றி எரிந்தது. அதன் பாதுகாப்பில் சென்ற பிள்ளைகள் சிதறி பல பக்கங்களிலும் சென்றபோது அவர்களை நோக்கிச் சீறிப் பாய்ந்து வந்தன ரவைகள். எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

முன்னுக்குச் சென்ற நால்வர் காயப்பட்டுவிட்டதாகவும், அவர்களை அப்புறப்படுத்தும் படியும் லீமா அறிவித்தாள்.

அதன்படி மீட்புக்குழுவினர் சென்று காயப்பட்டவர்களைத் தூக்கி வந்தனர். பிள்ளைகள் உயிராபத்தான நிலையில் இருந்த காரணத்தினால் அவர்களது ஆயுதங்களை மீட்புக் குழுவினரால் எடுத்துவர முடியாது போய்விட்டது.

முன்னே சென்ற இரு குழுக்களைச் சேர்ந்தவர்களும் காயப்பட்டு விட்டதனால் மூன்றாவது குழுவினரோடு நானும் செல்ல நேர்ந்தது.

நான் சென்றபோது எங்கள் தரப்பில் ஆர்.பி.ஜி கொண்டு சென்றவர்களில் 'லோடர்' வீரமரணம் அடைந்திருந்தார். இயக்குபவரும் காயப்பட்டிருந்தார். 'ஷெல்' நிரப்பியபடி ஆர்.பி.ஜி கீழே விழுந்து கிடந்தது. காயப்பட்டவரையும் தூக்கி ஆர்.பி.ஜியையும் கொண்டு சென்று பின்புறமாக அனுப்பிவிட்டு மீண்டும் நான் முன்னேறினேன்.

அங்கு சென்றவர்களில் பலரும் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டோ, காயப்பட்டோ இருந்தனர். அது வெட்டவெளிப் பிரதேசம் என்பதால் காயமுற்றவர்களைத் தூக்கச் சென்றவர்களும் காயமடைந்து ஆங்காங்கே வீழ்ந்து கிடந்தனர்.



அவர்களை தூக்க முனைந்தால் எதிரியின் காவலரண்களை பிடிக்க முடியாது போய்விடும் என்பதனால், பக்கத்தில் நின்ற அண்ணாக்களிடம் "பொயின்ரைப் பிடிக்க வேணும். விடியப் போகுது. ஓடி வாருங்கோ" என்று சொல்லிக் கொண்டே நான் முன்னுக்கு ஓடினேன். அண்ணாமாரும் நானும் ஓடிப்போய் ஒரு இடத்தில் நிலை எடுத்திருந்து அடித்துவிட்டு மீண்டும் முன்னே செல்வதற்காக எழுந்த போது அண்ணாக்கள் இருவருக்கு வயிற்றில் வெடிவிழுந்தது.

அவர்கள் தங்களுக்கு வெடி விழுந்ததைப் பொருட்படுத்தவேயில்லை.

"அக்கா ஓடுங்கோ அக்கா.... போயின்ரைப் பிடியுங்கோ அக்கா...." என்றுதான் கத்திச்சினம்.

நான் முன்னுக்கு ஓடினன். 'அருள் 89' லோட் பண்ணியபடி பிள்ளையள் நின்றுகொண்டிருந்தினம். எதிரியின் காவலரண்களிலிருந்து 50 யார் தூரத்துக்குக் கிட்டப் போயிட்டம்.

"இதிலையிருந்து நாங்கள் அடிச்சால் அவன் 203 ஷெல் அடிப்பான். பொயின்றுக்குக் கிட்டவந்து படுத்திருக்கிறது வீண் வேலை. எழும்பி முன்னுக்குப் போய் 'சக்கைக்கான்' எறிவம் என்றேன் நான்.

"காந்தி அக்கா என்னிடம் ரவைகள் முடிஞ்சிது. எனக்கு றவுன்ஸ் அனுப்பச் சொல்லி வோக்கியில் அறிவியுங்கோ" என லீமா என்னிடம் சொன்னாள்.

வோக்கியில் தொடர்பு எடுக்க முயன்றேன். நான் பேசியது எம்மவர்களுக்குக் கேட்க இல்லை. அவர்கள் பேசியது எனக்குக் கேட்க இல்லை. வோக்கித் தொடர்புகளை தொடர்ந்து குழப்பிக் கொண்டிருந்தார்கள். எங்கும் ஒரே வெடிச்சத்தம்... வோக்கியில் தொடர்புகளை எடுக்க முடியாமலே இருந்தது.

"முட்கம்பிகளை அகற்றிவிட்டு நாங்கள் முன்னுக்குப் போய் 'கிரனட்டை' வீசுவோம்" என்று சொல்லிக் கொண்டே எழுந்து முன்னுக்கு ஓடினேன் நான்.

"ரோப்பிட்டோவின்' (வெடிக்கண்ணி) மூலம் மிதிவெடிகளை வெடிக்கச் செய்வதிலும் முட்கம்பி வேலிகளை அகற்றும் வேலையிலும் ஈடுபட்டிருந்த லீமாவின் குரல் என்னை திரும்பிப் பார்க்க வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்குக் காயம் காந்தி அக்கா...." என்று சொல்லியபடியே மார்பைப் பொத்தியபடி லீமா கீழே விழுந்ததுதான் எனக்குத் தெரியும். அவள் வீரமரணம் அடைந்துவிட்டாள் என்பதனை நான் பின்புதான் தெரிந்து கொண்டேன்.

திடீரென்று யாரோ என்னையும் தூக்கி வீசியது போன்றதோர் உணர்வு. கொஞ்ச தூரம் மேலே போய் கீழே வந்தது மாதிரியான நிலை. காலொன்றில் இனம் புரியாதவலி, ஆனாலும் நான் மயங்கிவிடவில்லை. நிலா வெளிச்சத்துடன் போட்டி போட்டுக் கொண்டிருந்த 'பரா லைற்றின்' உதவியோடு கால்களை ஒருகணம் சற்று நோக்கினேன்.

காலொன்றில் முழங்காலுக்குக் கீழே எதுவும் இல்லை.... வெறும் எலும்பும் பிய்த்தெறியப்பட்ட நிலையில் சதைத்துண்டங்களுமாய்...

நான் 'மைன்ஸிலை' காலை வைச்சபடியால் எனது காலொன்றை இழந்துவிட்டேன் என்பதனை அப்பொழுதுதான் என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

எழும்பினால் அடுத்த காலும் போய்விடுமோ என்ற தயக்க உணர்வு.

ஆனாலும் காலொன்று பறிபோய்விட்ட நிலையிலும் கத்தினேன்.

கால் போனது எனக்குப் பிரச்சனையாய்ப்படவில்லை. என்னாலை எழும்பி ஓட ஏலாமல் போச்சு என்ற ஏக்கமே என் நெஞ்சில் பரவி நின்றது.

அப்பவும் நான் பலமாகக் கத்தினேன். எனக்கு மைன்ஸிலை கால் போயிட்டுது.... என்னைத் தூக்க வேண்டாம். எழும்பி எல்லாரும் ஓடுங்கோ.... போயின்றைப் பிடியுங்கோ" என்று தொடர்ந்து கத்தினேன்.

பொழுது விடியத் தொடங்கிட்டுது..' இனிமேலும் படுத்துக் கிடந்தால் ஆமி வந்து பிடிச்சுக் கொண்டு போயிடுவான். அல்லது ஷெல் அடிச்சு எங்களைச் சாகடிச்சுப் போடுவான்.

நான் சாகிறதுக்கு எப்பவுமே பயப்பட இல்லை. ஒரு கால் போய் விட்டது என்பதற்காக செத்துவிடவும் முடியாது. எமது இயக்கத்தில் இரண்டு கண்களும் இரண்டு கைகளுமின்றி அண்ணாக்கள் இருக்கின்-றார்கள்.

தங்கையொருத்தி மாங்குளம் தாக்குதலில் இரண்டு கைகளையும் இழந்தவள். வாயினால் பேனாவைக் கவ்வி எழுதுகிறாள்... காலினால் ரவைகளை நிரப்புகின்றாள்...



எனக்கு ஒரு கால்தானே போய்விட்டது...

நான் எதற்காக சாவை அரவணைக்க வேண்டும்... நாங்கள் எதிரியிடம் பிடிபட்டுவிடக் கூடாதென்பதற்காக எங்கள் மானத்தைக் காப்பதற்காக எங்கள் கழுத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் 'சயனட்டை ஒரு கணம் தொட்டுப் பார்த்துக் கொண்டேன்.

ஆனாலும் சாவைத் தேடிக் கொண்டுவிட்டால் -சிலவேளை எனது உடலை எம்மவர்களால் மீட்க முடியாது போய்விட்டால் -எனது உயிரற்ற உடலைக் கூட அந்த இனவெறி பிடித்த சிறிலங்கா அரசின் சிங்கள இராணுவத்தினர் சீரழித்து சின்னாபின்னப்படுத்தி விடவும் கூடும்...

மெது மெதுவாக இழுத்து இழுத்து எங்கடை காவலரனுக்குக் கிட்ட சென்றுதான் வோக்கியிலை அறிவிச்சன் "என்னை வந்து தூக்குங்கோ" என்று சொல்லி.

நான் இயக்கத்திலை சேர்ந்து நாலு வருஷத்துக்குப் பிறகு - எனக்குக் கால் போன பிற்பாடுதான் எங்கட வீட்டில என்ர அப்பா, அம்மா, சகோதரங்கள் எல்லாரையும் கண்டனான். அதுவரையும் நான் எவரையும் சந்திக்கவில்லை. என்னைப் பார்ப்பதற்காக 'வைகறை'க்கு வந்த அம்மா, "இனியும் இங்கையிருந்து என்னடி செய்யப் போறாய்? காலைப் போட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்து விடன்... என்று சொன்ன போது எனக்கு அம்மா மீது ஆத்திரம் வரவில்லை. அவரது அறியா-மையை எண்ணியபோது சிரிப்புத்தான் வந்தது.

சிலவேளை நீங்களும் "சொத்தி... அதுவும் பொம்பிளைப் பிள்ளை..... இனி உன்னாலை சண்டை பிடிக்க ஏலுமோ? விசர்க்கதையளை விட்டுப்-போட்டு வீட்டை போய் ஆத்தை அப்புவோடை இரன்" எண்டுதான் சொல்லுவியள்.அம்மாவுக்குச் சொன்னதைத்தான் உங்களுக்கும் சொல்லுறன்.

"களத்தில் நாங்கள் வீரமரணமடையலாம். எங்கள் கண்கள் பறி-போகலாம். கைகள் போகலாம். கால்கள் போகலாம். நாங்கள் ஊன-முற்றவர்களாகலாம்... ஆனாலும் நாமனைவரும் உறுதியோடு இறுதிவரை போராடி எமது இலட்சியத்தை வென்றெடுப்போம். இது திண்ணம்"

❑ ❑ ❑ ❑ ❑

**வெளிச்சம் முதலாண்டு நினைவுச் சிறப்பிதழ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்பதிலும் ஆசை வரும்

எனக்கு இந்த வயசிலை இப்படி ஒரு ஆசை வந்திருக்கப்படாது...! ஆனா வந்திட்டுது.... என்ன செய்யிறது....?

எனக்குத் தெரிஞ்ச பொடி பொட்டையள் நெடுக நக்கல் அடிக்கிறதுகள்.... தாண்டிக்குளத்தைத் தாண்டி 'டை' வராமல் தடுக்க வேணுமெண்டு சொல்லி....

ஐம்பது வயது தாண்டியும் எனக்கு இன்னமும் தலை நரைக்காத படியால், நான் தலைக்கு 'டை' அடிக்கிறன் எண்டு சொல்லி அவையளின்ரை கணிப்பு.

நான் இங்கை வேலைக்குப் போகேக்கை வரேக்கை பொம்பிளைப் பிள்ளையள் சைக்கிளுகளிலையும், வாகனங்களிலையும் போய்வாறதுகளைப் பார்க்கேக்கை இடைக்கிடை எனக்கு இந்த ஆசை வாறதுதான்.... ஆனால் என்ரை வயசையும் குடும்ப நிலையையும் யோசிச்சு என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டுதான் வந்தனான்... ஆனா இப்ப என்னாலை என்னைக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு....

இந்த வயசிலை எனக்கு இந்த ஆசை வந்திருக்கு என்பதை, என்ரை மனுசி கேள்விப்பட்டுதெண்டா, வீட்டிலை பெரிய பூகம்பமே எழும்பும்....

"நான் மலைபோல வீட்டில ஒருத்தி இருக்கிறன். அவங்கள் பொடியள் ரெண்டுபேர் வெளியிலை... குமர் ஒண்டு வீட்டிலை இருக்குது.... அந்தக் குமரைக் கரை சேர்க்கிறதுக்கு ஒரு வழி பார்ப்பம் எண்டில்லாமல், இந்த மனுசனுக்கு இந்த வயசிலை இப்படி ஒரு ஆசையோ" எண்டு சொல்லி, என்ரை தர்மபத்தினி துள்ளி மிதிப்பா எண்டதும் எனக்குத் தெரியும்.

அதுக்கு நான் என்ன செய்ய முடியும்? இந்த வயசிலை வரக்கூடாத ஆசைதான்....! ஆனா வந்திட்டுதே...!

"கல்லெண்டாலும் கணவன், புல்லெண்டாலும் புருசன்" எண்டு நினைக்கிற என்ரை மனுசியை ஒரு மாதிரிச் சரிப்பண்ணினாலும், ஊரிலை உலகத்திலை இருக்கிறதுகள்.... இனசனம் சும்மா இருக்குமே.. அதுகள் தேவையில்லாத கதையெல்லாம் சொல்லி மனுசியின்ரை மனசைக் குழப்பிப் போடுங்கள்....

வெளிநாட்டிலை இருக்கிற பொடிப் பிள்ளையள் "அப்பா இந்த வயசிலை உங்களுக்கு இப்பிடியும் ஒரு ஆசை வரவேணுமோ?" எண்டு சிலவேளை கடிதத்திலை எழுதிக் கேட்கக்கூடும்.

"நீங்கள் அந்தந்தக் காலங்களிலை சரியா நடந்திருந்தா எனக்கு ஏன் இந்த வயசிலை இப்பிடி ஒரு ஆசை வரப்போகுது...." எண்டு சொல்லி அவையளின்ரை மூஞ்சியிலே அடிச்சமாதிரி பதில் எழுதிப் போட வேண்டியதுதான்....ஓ....!

சிலவேளை நான் செய்யப் போற இந்தக் காரியத்தாலே வீட்டில இருக்கிற குமரைக் கரைசேர்க்கிறதிலை ஏதும் கஷ்டம் வந்திடுமோ?

சே..... என்ரை ஆசைக்கு நான் அதைச் செய்யிறதுக்கும் என்ரை குமர் கரை சேர்றதுக்கும் என்ன சம்பந்தம்?

அயலட்டையிலை உள்ளதுகள் அல்லது சொந்தக்காரர், மனுசியின்ரை மனசைக் குழப்பி மனுசி ஏதும் துள்ளியடிச்சாளெண்டால்...?

"ஓ...... மனுசிக்கு இப்பிடிச் சொல்ல வேண்டியதுதான்... இஞ்சை பாரடியப்பா.... நான் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையாக கேள். அவை இவை சொல்றதைக் கேட்டு சும்மா மனசைப் போட்டுக் குழப்பாதை.... எல்லாம் எங்கடை தலைவிதிப்படிதான் நடக்கும். இந்த வயசிலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு இப்பிடி ஒரு ஆசை வரவேணுமெண்டு எங்கடை தலையிலை எழுதி இருக்கு....

அவன் அண்டு எழுதினதை அழிச்சு எழுத ஏலாது.....

நான் என்ரை ஆசைப்படி நடந்தாலும் இரண்டொரு கிழமையிலை ஆகக் கூடியது ஒரு மாசத்திலை வீட்டை வந்திடுவன்.... பிறகு உங்களோடைதான் இருப்பன். இடைக்கிடை கட்டாயமா தேவைப்படுற நேரங்களிலை மாத்திரம் போயிட்டு வருவன். கோவியாதையடி நாச்சியார்" எண்டு சொல்லி அவளின்ரை சொத்தையைத் தடவி ஒருமாதிரிச் சமாளிக்க வேண்டியதுதான்.

நான் இதைச் சொல்லிக் கொண்டு வரேக்கை கேட்டுக் கொண்டிருக்கிற உங்களுக்கும் என்னை அடிச்சுக் கொல்ல வேணும்போல நினைப்பு வரும்....ஓ.....!

"நைன்ரிக்கு இந்த வயசிலை இப்படியும் ஒரு ஆசையோ.....? எண்டு சொல்லி நீங்களும் வாய்க்கு வந்த மாதிரி திட்டித் தீர்ப்பியள்...

உதுதான் சொல்லிறது... இந்த முந்திரிக் கொட்டை மாதிரி முந்தக்கூடாது எண்டுசொல்லி

இந்த வயசிலை எனக்கு அந்த ஆசை வந்திட்டுது எண்ட உடனை என்ரை மனுசி, பிள்ளையள், ஊர் உலகத்திலை உள்ளவை மாதிரி நீங்களும் என்னைப் பற்றி வித்தியாசமாகத்தான் யோசிச்சிருப்பியள்.... என்ன?

எதையுமே நல்ல மாதிரி யோசிக்க மாட்டியளே....! உடனே உங்கடை மூளையெல்லாம் தலைகீழா வேலை செய்ய ஆரம்பிச்சிடும்.

வெளிநாட்டிலை இருக்கிற என்ரை பொடியளிலை ஒருத்தன் தன்னும் இங்கை நிண்டு நல்லமாதிரி நடந்திருந்தானெண்டால்...

எனக்கு இந்த வயசிலை இப்பிடி ஒரு ஆசையே வந்திருக்கத் தேவையிலை....

ஆனா ஒண்டு சொல்லுறன்... இண்டைக்கு இந்த நாட்டிலை, எங்கடை தமிழீழ மண்ணிலை வாழுற எல்லாருக்குமே இந்த ஆசை கண்டிப்பா வரவேணும்...

சும்மா நடந்து கொண்டு....



சந்திக்குச் சந்தி நிண்டு கொண்டு, போறது வாறதுகளோடை சேட்டை விட்டுக் கொண்டு நிக்காமல்....

அவங்கள் எங்கையோ இருந்து.... எத்தனையோ மைலுக்கங்காலை இருந்து தங்கடை பகுதிகளை விட்டு இங்கை வந்து எங்களோடை சேட்டை விட்டுக் கொண்டு நிக்கிறாங்கள்.....

எங்களை அழிக்க எண்டு வந்து நிக்கிறாங்கள்...

புக்காரா எண்டும், சுப்பசொனிக் எண்டும், சியாமாசெட்டி எண்டும் சொல்லி குடாநாட்டை குண்டு போட்டு அழிக்கிறதுக்கு விமானங்களோடை வந்து காத்து நிக்கிறாங்கள்....

நாங்கள் ஓடுறதுக்கு றெடியா நிக்கிறம்...

அவன் கிளாலிக்கு வந்திட்டான் எண்ட உடனை "இனி என்ன நாங்களும் வெளிக்கிட வேண்டியதுதான் சண்டைக்கு" எண்டு சொல்லி கனபேர் வெளிக்கிட்டவை.

அவன் ஆனையிறவுக்குத் திரும்பியிட்டான் எண்ட உடனை, சொன்னவையளின்ரை வாயள் தங்கடை பாட்டிலை மூடிட்டுது....

"கடைசிக்கட்டம் எண்டால் விடவே போறம்.... ஒரு கை பார்ப்பம் தானை" எண்டு இப்பவும் சிலர் முணுமுணுக்கிறது என்ரை காதிலையும் சாடையாக விழுகிது...

இப்ப நடந்த போர்க்காலக் கருத்தரங்குகளிலை இயக்கத்திலை உள்ளவை கேட்ட மாதிரி அவன் உடைச்சுக் கொண்டு உள்ளுக்கை பூந்த பிறகு மண்வெட்டிப் பிடியளோடையும் மரவள்ளித் தடியளோடையுமே சண்டை பிடிக்கப் போறது?

வெள்ளம் வாறதுக்கு முந்தி அணை கட்ட வேணும். அதுக்குத் தான் அவையள் சொல்லுகினம், "வாருங்கோ பயிற்சி எடுங்கோ" எண்டு சொல்லி....

குடாநாட்டிலை வீட்டுக்கு ஒரு பொடியனோ, ஒரு பெட்டையோ வெளிக்கிட்டு வருங்களெண்டால் உண்மையா வந்து சுத்தி வளைச்சு நிக்கிறவன் பார்த்துப் பார்த்து ஓடமாட்டானே...ஆ....!

கொழும்பிலை நிண்டு கொண்டு அந்த நைன்ரி சொல்லுது.... " தீர்வுத்திட்டம் எண்ட பேச்சுக்கே இடமில்லையாம், அவர் மருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைச்சிருக்கிறாராம் எங்களுக்குத் தாறதுக்கு....

இனியும் சும்மா நாங்கள் விடுப்புப் பார்த்துக் கொண்டு இருந்த-மெண்டால் எல்லாருமே அழிய வேண்டியதுதான்...ஓ....

பொடி பொட்டையள் வெளிக்கிடட்டும் புலிப்படைக்கு...

நாங்கள் நைன்ரியளும் வெளிக்கிடுவம் துணைப்படைக்கு....

அங்கை வவுனியாவிலை.... மணலாற்றிலை ..... அலம்பில்லை.... முல்லைத்தீவுப் பக்கங்களிலை எல்லாம், அறுபது எழுபது வயது நைன்ரியிலும் தோளிலை துவக்குகளை மாட்டிக் கொண்டுதான் திரியிதுகளாம்...

நாங்கள் மட்டும் என்னத்துக்கு பார்த்துக் கொண்டு கிடப்பான்....?

இப்ப இங்கையும் துணைப்படைக்கும் நூற்றுக்கணக்கிலை ஆட்கள் சேர்ந்து பயிற்சிகளும் குடுக்கத் தொடங்கி விட்டினமாம்...

இனியும் என்ன பார்த்துக் கொண்டிருக்கிறது...?

வாருங்கோ வெளிக்கிடுவம்.

தம்பியவை..... பொடிச்சியள்... இப்ப சொல்லுங்கோ.... இந்த நைன்ரிக்கு இந்த வயசிலை இப்பிடி ஒரு ஆசை வரவேணுமோ? வேண்டாமோ? எண்டு சொல்லி....ஆ!...

❑ ❑ ❑ ❑ ❑

**வெளிச்சம்**
**கார்த்திகை 93**



# சிங்கள நண்பனுக்கு ஒரு கடிதம்...

ஆதரணீய மித்ரய,

உனதும் உன் குடும்பத்தினரதும் நலன்களுக்கு மும்மணிகளின் ஆசீர்வாதம் கிடைப்பதாக.

பல வருடங்களின் பின்னால் என்னிடமிருந்து இப்படி ஒரு கடிதத்தினை நீ எதிர்பார்த்திருக்க மாட்டாய்.

நண்பா,

1966 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 14 ஆம் திகதி நீயும் நானும் அஞ்சல் திணைக்களத்தில் எழுதுவினைஞர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட அந்த நாள் உனக்கு ஞாபகம் இருக்கிறதா?

நீ என்னைப் பார்த்து "தமில்" என்றதும் நான் உன்னை நோக்கி "சிங்களம்" என வினவியதும் இருவரும் ஒருவர்க்கொருவர் புன்முறுவல்களோடு தலைகளை அசைத்துக் கொண்டதையும் இன்று நினைத்தாலும் எனக்குச் சிரிப்புத்தான் வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாக வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட, தமிழைத்தவிர ஆங்கிலமோ, சிங்களமோ தெரியாத நானும், தமிழோ ஆங்கிலமோ தெரியாத நீயும் தேநீர் குடிப்பதற்குக் கூட சைகைகளினால் பரிமாறிக் கொண்டதையும் என்றுமே என்னால் மறக்க முடியவில்லை.

சகோதர மனப்பான்மையோடு எத்தனை வருடங்கள் ஒன்றாக வேலை செய்தோம்.

ஒன்றாக உண்டு உடுத்து உறங்கிய அந்த நாட்கள் மீண்டும் என்று வரும்? என்ற ஏக்கம் என் நெஞ்சில் இன்றும் நிறைந்திருக்கின்றது.

கொள்ளுப்பிட்டியிலுள்ள அந்த ஆறு மாடிக்கட்டிடத்தில் வேலை செய்த அந்த நாட்களிலே மதிய வேளைகளில் அனுலா வீட்டிற்குச் சென்று உணவருந்திய அந்த நாட்களைத்தான் மறக்க முடியுமா?

விடுமுறை நாட்களின்போது மேலதிக வேலை செய்து கொண்டு மதிய உணவு வேளைகளில் இன மத மொழி வேறுபாடின்றி அனைவரும் குடித்து கூத்தாடி உண்டு மகிழ்ந்திருந்ததையும் மறந்து விடத்தான் முடியுமா?

வருடா வருடம் அலுவலகத் தோழர்கள் பலர் ஒன்றிணைந்து யால, வில்பத்து வனங்கள், ஸ்ரீபாய, தலதா மாளிகை, கதிர்காமம், ஹெக்கல பூந்தோட்டம், தியலும, துமிந்த நீர்வீழ்ச்சிகள் நாகதீபம், கீரிமலை என இலங்கையின் வடக்கிற்கும் தெற்கிற்கும் உல்லாசப் பயணங்கள் சென்றது - கூடிக்களித்தது இவைகளெல்லாம் மறக்க முடிந்த நாட்களா?

புதுவருடத்தின்போது "புத்தாண்டு வாழ்த்துக்கள்" என நானும்; சுப அளுத் அவுறுத்தக் வேவா" என நீயும் புத்தாண்டு வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொண்டதும்,

ஹோமாகமவிலுள்ள உனது வீட்டிற்கு நான் வரும் போதெல்லாம் உனது அம்மா "புத்தே" என பரிவோடு என்னை அழைத்து 'கட்ட' சம்பலோடு "கிரிபத்" தந்தது", கட்டித்தயிரில் கித்துல் பாணி ஊற்றித் தருவது.

நீ என்னோடு யாழ்ப்பாணம் வந்திருந்தபோது எனது தாயார் இடியப்பம் அவித்து முட்டைப் பால்கறி வைத்துத்தர நீ விழுந்து விழுந்து ருசித்துச் சாப்பிட்டது...



நீ கொழும்பிற்குத் திரும்பியபோது எள்ளுருண்டை தந்து வழியனுப்பியமை....

அதன் பின்னால் நான் ஊருக்கு வரும் போதெல்லாம் "மச்சான் என கொட்ட "தலகுளி," தலதெல்' கொண்டுவா "என எள்ளுப்பாகு, நல்லெண்ணை கொண்டு வரும்படி நீ அன்புக்கட்டளையிடுவது வெசாக் நாட்களில் உன்னோடு சேர்ந்து மூன்று நான்கு நாட்கள் தொரண், வெசக்கூடு மின்சார சோடனைகள் என இரவிரவாக பார்த்து மகிழ்ந்தது. இன்னும் எத்தனை எத்தனை இன்பகரமான நாட்கள்....

மறக்க முடியாத அந்த இனிய நாட்கள் மீண்டும் வருமா நண்பா...?

சுதந்திரம் கிடைத்தது ஐம்பதாண்டு நிறைவை இன்று நீங்கள் கொண்டாடிக் கொண்டிருக்கின்றீர்கள்...

"சுவர்ண ஜயந்தி" என்ற பெயரில் ஆடுகின்றீர்கள்... பாடுகின்றீர்கள்... கூடிக் குதூகலிக்கின்றீர்கள்.

நாங்களும் இந்த நாட்டின் மைந்தர்கள் தான் என்பதை ஏன் தான் மறந்து போனீர்களோ?

"தெமள சகோதரயா" என வாஞ்சையோடு அழைப்பீர்களே...

மொழியால்... மதத்தால்... இனத்தால் நாங்கள் வேறுபட்டிருந்த போதிலும் பாசத்தோடு பழகிக்கொண்டோமே..

சின்னஞ்சிறிய இந்தத் தீவிலே ஒற்றுமையாக வாழ்ந்த இரண்டு இனங்கள் இன்று முட்டிமோதி நிற்கின்றனவே...?

இதன் காரணகர்த்தாக்கள் யார்?

வேட்டொலிகள்...குண்டுச் சத்தங்கள்....

கரும்புலித்தாக்குதல்கள்... தொடர்கின்ற உயிரிழப்புக்கள் .... இவையெல்லாவற்றிற்கும் என்ன காரணம்? புலிகள் தான் இத்தனைக்கும் காரணம் என்று நீயும் சொல்வாயா?

உங்கள் இதயக் கதவுகளைத் திறந்து வைத்து உங்கள் நெஞ்சங்களைத் தொட்டுச் சொல்லுங்கள்...

இன்று எமது நாட்டிலே இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடுவதற்கு அவர்கள் தான் காரணமா? இல்லை... இல்லையேயில்லை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பத்தெட்டாம் ஆண்டு சிங்களப் பகுதிகளில் இனக்கலவரம் என்ற பெயரில் கோவில் குருக்கள் உட்பட பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்களே....

எரிகின்ற நெருப்பிலே உயிரோடு தூக்கி வீசப்பட்டார்களே... ரயர் போட்டு எரிக்கப்பட்டார்களே

நீ ஒரு சிங்களப் பிரஜை என்பதை மறந்துவிட்டு, மனச்சாட்சி உள்ள ஒரு மானிடன் என்ற நிலையில் நின்று சிந்தித்துப்பார்...

அன்று புலிகள் தோற்றம் பெற்றிருந்தார்களா என்ன?

சுதந்திரம் வழங்கப்பட்டதன் பின்னால் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் மூலம் எங்களது பாரம்பரிய பிரதேசங்கள் பறித்தெடுக்கப்பட்டனவே.

சிங்களம் மாத்திரம் என்ற சட்டத்தினை கொண்டு வந்து முதன் முதலில் உங்களவர்கள் தானே பிரச்சினைகளைத் தோற்றுவித்தார்கள்.

எமது உரிமைகள் பறித்தெடுக்கப்பட்ட போது எம்மவர்கள் அஹிம்சை முறையில் தானே போராடினார்கள். மாறி மாறி ஆட்சிக்கு வந்தவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள், ஒப்பந்தங்கள் எழுதினார்கள்.

அவை எல்லாவற்றிற்கும் என்ன நடைபெற்றது...?

நீங்களும் வாழுங்கள்...எங்களையும் வாழவிடுங்கள்..." என்றுதானே கேட்டோம்.

எமது நிலங்கள் அபரிக்கப்பட்டு? மொழி உரிமை, கல்வி உரிமை, வேலை வாய்ப்புக்கள் பறிக்கப்பட்டு; ஆயுதம் ஏந்திய அரச பயங்கரவாதிகளால் எமது மண்ணிலேயே எமது மக்களின் உயிர்கள் அநியாயமாகப் பறித்தெடுக்கப்பட்ட போதுதான் எமது மக்களைப் பாதுகாப்பதற்காக ஆயுதங்களைப் பற்றிக் கொண்டார்கள் எமது இளைஞர்கள்.

தமிழ் இளைஞர்கள் நெஞ்சத்திலே சுடர் விட்ட சுதந்திர வேட்கை.... மான உணர்வு....

ஒன்று பத்தாகி, பத்து நூறாகி, நூறு ஆயிரமாகி, இன்று பல்லாயிரமாகப் பரந்து நிற்கின்றதே... ஆயிரம் ஆயிரமாக, லட்சோப லட்சமாக தலைவன் ஒருவனின் பின்னால் தமிழ் மக்கள் அணி திரண்டு நிற்கின்றார்களே அது எதனால்...? அன்பு நண்பா,



எமது தாயக மண்ணில் நாளும் பொழுதும் சுற்றி வளைப்புக்கள், கைதுகள், காணாமற் போதல்கள், தாய்க்குலத்தின் மீது பாலியல் வல்லுறவுகள், படுகொலைகள், மனிதப் புதைகுழிகள் என உலகின் எந்த ஒரு நாட்டிலும் இடம் பெற்றிராத அளவுக்கு மனித உரிமை மீறல்கள் இடம் பெறுகின்றனவே...

இவை அனைத்தும் உங்கள் சிங்களப் பகுதிகளில் ஆக்கிரமிப்பாளர்களினால் உங்கள் மக்களுக்கு நிகழ்த்தப்படும்போது அவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு நீங்கள் பேசாமடந்தைகளாக வீற்றிருப்பீர்களா?

உங்கள் நெஞ்சங்கள் பதறித் துடிக்காதா?

உன் மனச்சாட்சியில் கை வைத்துச் சொல் நண்பா....

எம் மீது மாத்திரம் ஏன் மாற்றாந்தாய் மனப் பான்மையோடு நடந்து கொள்கின்றீர்கள்....?

"சமாதானத்திற்கான யுத்தம் என்ன பெயரில் பாதை திறப்பதாகச் சொல்லிக்கொண்டு ஆயிரக்கணக்கில் அப்பாவி சிங்கள இளைஞர்களைப் பலிகொடுத்துக் கொண்டு இருக்கிறார்களே...

தேவையற்ற யுத்தத்திற்காக தினமும் கோடிக் கணக்கான பணத்தை வீண்விரயம் செய்து கொண்டிருக்கின்றார்களே....

இவையெல்லாம் உங்கள் கண்களுக்குத்தெரியவில்லை?

தலதா மாளிகை வாசலில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு வேதனை தரக்கூடிய ஒரு நிகழ்வுதான்... புத்தமத புனித சின்னத்தின் மீது கை வைத்துவிட்டார்களே மாபாவிகள் என ஓலமிடுபவர்கள்...ஒப்பாரி வைப்பவர்கள்... வக்காலத்து வாங்கி கண்டன அறிக்கைகள் விட்ட வெளிநாட்டு எஜமானர்கள்..

தொடர்ந்து பல வருடங்களாக எமது தாய் மண்ணில் கோவில்கள், தேவாலயங்கள் பள்ளிக் கூடங்கள் என்பன குண்டுகள் வீசித் தகர்க்கப்பட்டபோது, இடித்து நொருக்கப்பட்டபோது.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாலி சென் பீட்டர்ஸ் தேவாலயத்தில், வவுனிக்குளம் வேளாங்கன்னி ஆலயத்தில் இடம் பெயர்ந்திருந்த மக்கள் மீது விமானத் தாக்குதல்களை நடத்தி அப்பாவி உயிர்களைப் பறித்தெடுத்தபோது அவர்களது உடலங்கள் கைவேறு, கால்வேறு, தலைவேறு என தசைப்பண்டங்களாக வீசி எறியப்பட்டபோது வாய்மூடி மௌனிகளாகப் பார்த்துக்கொண்டு தானே இருந்தார்கள்.

நண்பா,
"ஜாதிக சமகிய" - தேசிய ஒற்றுமை என்பது ஒரு வழிப்பாதையல்ல.

பிரதிப்பாதுகாப்புக்களின் பதவி துறப்பு நாடகங்களினாலோ, "கொட்டி"களுக்குத் தடை விதிப்பதன் மூலமோ நாட்டில் சண்டை நின்றுவிட போவதில்லை....சமாதானம் மலர்ந்திடப் போவதுமில்லை....

அன்பை...அறத்தை....அஹிம்சையைப் போதித்த போதிமாதவனின் வழிவந்தவர்கள் நீங்கள் தான் சிந்திக்க வேண்டும், செயற்பட வேண்டும்.

எம்மவர்கள் எப்பொழுதும் நியாயமான தீர்வுக்காக - நிரந்தரமான சமாதானத்திற்காக கதவுகளை அகலத்திறந்து வைத்துக் கொண்டு சமாதானப் புறாக்களின் வருகைக்காக ஆவலோடு காத்திருக்கின்றார்கள்.

தடைவிதிப்புக்களைத் தகர்த்தெறிந்து வெண் புறாக்களைப் பறக்கவிட வேண்டியவர்கள்; சமாதானத் தேவதையை அழைத்துவர வேண்டியவர்கள் நீங்களே....

நீ மாத்திரமல்ல நண்பா....

இந்த நாட்டிலே வாழ்கின்ற சிங்களப் பெரும்பான்மை இனத்தார் அனைவருமே உண்மையான சமாதானத்திற்காக - எதிர்கால சந்ததியினரின் - சுபீட்சமான வாழ்விற்காக - உங்கள் கரங்களை உயர்த்திப் பிடிக்க வேண்டும்.

இன்னும் எமக்காகக் குரல் கொடுத்துக் கொண்டு தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் - இந்த நாட்டிலே சமாதானம் ஓங்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு செயற்பட்டுக் கொண்டிருக்கும் சிறுபான்மைச் சிங்களச் சகோதரர்களோடு சேர்ந்து நின்று போரட முன்வரவேண்டும்.



இனி வரும் ஆண்டிலாவது இலங்கையில் வாழ்கின்ற சிங்கள - தமிழ் முஸ்லிம் மக்கள் அனைவருமே "நாமனைவரும் இந்த நாட்டு மக்கள் என்ற உணர்வோடு சகோதரத்துவத்துடன் புத்துலகம் நோக்கி அடியெடுத்து வைக்கவேண்டும்.

நீயும் நானும், நீங்களும் நாங்களும் எமது கரங்களைக் கோர்த்து ஒருவரை ஒருவர் கட்டித் தழுவும் அந்த இனிய நாட்களுக்காக ஆவலோடு காத்திருக்கின்றோம்.

அன்பு நண்பன்
ஆ. தேவராஜா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டியா

பு த்தர் பகவானுக்கு அப்படி ஒரு ஆசை வந்திருக்கப்படாது.

வந்துவிட்டதே என்ன செய்வது?

அவர் தற்காலிகமாக வசித்து வந்த அந்தப் பிரதேசத்திலுள்ளவர்கள் இப்போதெல்லாம் அடிக்கடி "புலி.... புலி...." என்று கிலி கொள்கின்றார்களே.... அந்தப் புலியை ஒரு தடவையாவது தரிசித்து விடவேண்டுமென்பதே அந்த ஆசை.

களனியிலுள்ள பன்சலவிலிருந்து வெளியேறிய பகவானார் பாணந்துறையை நோக்கிச் சென்று கொண்டிருந்த புகையிரதத்தில் ஏறிக் கொண்டார்.

அது காலை அலுவலக நேரமாகையால் புகையிரதம் மக்கள் கூட்டத்தினால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

மருதானை, கொழும்பு கோட்டை என முக்கியமான நிலையங்களில் பெருமளவில் மக்கள் இறங்கிக் கொண்டனர்.

பள்ளி மாணவ மாணவிகளும்கூட அப் புகைவண்டியில் பயணித்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களில் கோபியும் ஒருவன்.

அவன் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் கல்விபயிலும் ஒரு உயர்தர வகுப்பு மாணவன்.

அவனது பெற்றோர் நீர்கொழும்பில் நகைக்கடை ஒன்றை சொந்தமாக நடத்துகின்றனர்.

கோபி பருவப் பயணச்சீட்டில் காலையும் மாலையும் புகையிரதத்திலேயே பயணம் செய்பவன்.

நீண்டகாலமாக நீர்கொழும்பிலேயே வசித்து வந்தமையால் சரளமாக சிங்களத்திலும் உரையாடக் கூடியவன்.

புகையிரதம் கொம்பனித் தெருவைக் கடந்து கொள்ளுப்பிட்டியை நெருங்கிக் கொண்டிருந்தது.

கோபியைச் சுற்றி நின்றவர்களிற் சிலர் அவனைச் சுட்டிக்காட்டி தமக்குள் ஏதோ பேசிக் கொண்டனர்.

அவர்களது முகங்களில் வெறித்தனம் தாண்டவமாடியது.

கோபியிடம் இருந்து அவனது பள்ளிப் புத்தகங்கள் அடங்கிய கைப்பையைப் பறித்தெடுத்தான் ஒரு காடையன்.

"எதற்காக எனது பையைப் பறித்தெடுத்தாய்? என ஆத்திரத்தோடு சிங்களத்தில் வினவிய படியே எழுந்து நின்றான் கோபி.

'உம்ப கொட்டியக் நேத...?" (நீ ஒரு புலிதானே?)

பலமாகச் சப்தமிட்டான் அந்தச் சிங்களவன்.

"கொட்டியாத....? கொட்டியாத...? கோ... கொட்டியா?" (புலியா....? புலியா....? எங்கே புலி?) பயமும் ஆத்திரமும் கலந்த குரல் சப்தமிட்டார்கள் பெரும்பான்மை இனமக்கள்.

"கொட்டியா... கொட்டியா என்ற அந்தச் சத்தம் அரைத் தூக்கத்திலிருந்த புத்தர் பகவானையும் உலுப்பிவிட்டது.

தனது ஆசை நிறைவேறப் போகின்றது என்ற ஆவலோடு எட்டிப் பார்த்தார் பகவானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடார் தடார் என்று ஏதுமறியா அந்தப் பள்ளி மாணவனை நையப்புடைத்தார்கள் அந்த "நல்லவர்கள்"

ஓடிக் கொண்டிருந்த புகையிரத்தத்தில் இருந்து கோபியின் புத்தகப்பை கீழே வீசியெறியப்பட்டது.

கோபியின் உதட்டில் இருந்து உதிரம் வழிந்தோடியது.

அவன் பள்ளி மாணவன் தான் என்பதைத் தெரிந்து கொண்ட பிறகும், அவன் தமிழனாகப் பிறந்து விட்ட காரணத்தால் பலமாகத் தாக்கப்பட்டான்.

"அனே பவ்... அஹிங்சயெக்.... எயாட்ட கஹண்ட எப்பா.... (ஐயோ பாவம் ஒரு அப்பாவி. அவனுக்கு அடிக்காதையுங்கோ)

"உம்ப பளயாங்... தெமளுண்ட சப்போர்ட் களொத் உம்பட்டத் கஹனவா நாக்கியா உம்ப உம்பே வட பலாகனிங்......" (நீ போடா... தமிழுங்களுக்கு சப்போர்ட் பண்ணினா உனக்கும் உதைவிழும்.. கிழடா... நீ உன்ரை வேலையப் பாரடா....)

புத்த பெருமனார் அப்படியே வெட்கித்துப் போனார்!

வாயடைத்துப் போயிற்று அவருக்கு!

ஓடிக்கொண்டிருந்த புகையிரதத்தில் இருந்து இரத்தக் காயங்களோடு தூக்கி நிலத்தில் வீசியெறியப்பட்ட கோபியினைத் தொடர்ந்து பகவானாரும் கீழே குதித்துக் கொண்டார்.

கோபியைச் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அனுமதித்ததும் அவரே தான்!

அச்சம்பவம் நடைபெற்று முடிந்து மூன்று தினங்களின் பின் பங்குனி மாதத்தில் வரும் 'மெதின்' முழுநோன்மதி தினத்தன்று களனியிலுள்ள பன்சலவில் அந்த அரச மரத்தின் கீழே புத்த பகவானாரைக் காண முடியவில்லை.

❑ ❑ ❑ ❑ ❑

15.04.2000
**ஈழநாதம் வாரமலர்**



# நான் வன்னியை விட்டிட்டு வரமாட்டன் !

நன்றி கெட்ட சனங்கள்!

கொஞ்சமாவது நன்றி இருந்திருந்தா இப்பிடிக் கேட்டிருப்பினமே?

"வன்னியிலை இருந்து கஷ்ரப்பட்டது காணும். இப்ப சமாதானம் வந்திட்டுது-தானை. இனியும் ஏன் இங்கையிருந்து கஷ்ரப்படவேணும்.... சும்மா பிடிவாதம் பிடிக்காமல் வெளிக்கிட்டு வாங்கோப்பா" என்று மனுசிக்காரி ஒரே தொல்லை.

"இனி ஒரு பிரச்சனையும் இல்லைத்-தானை அப்பா. எங்களோடை கொழும்-பிலை வந்து இருக்கலாம்தானை. உங்-கடை பிடிவாதத்தாலை அம்மாவுமெல்லோ வீணாகக் கிடந்து கஷ்ரப்படுறா.... கடைசி காலத்திலையென்றாலும் கொஞ்சமாவது சந்தோசமாக இருக்கலாம்தானே" கொழும்பிலை கம்பனி ஒன்றில் வேலை செய்யிற இரண்டாவது பெட்டை கடிதத்தில் எழுதும் வாசகங்கள் இவை.

"எங்கடை மண்.... எங்கடை மண்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நீங்கள் மண்ணுக்காகப் போராடினது காணும். இனியும் சும்மா விசர்க்கூத்து ஆடாமல் தங்கச்சியோடை போய்க் கொழும்பிலை இருங்கோ.... இல்லையென்றால் கொழும்புக்கு வந்து 'பாஸ்போர்ட்' எடுத்துக் கொண்டு பிளேன் ஏறி சென்னைக்கு வந்து சேருங்கோப்பா..."என்று மூத்தவள் தமிழ் நாட்டிலை இருந்து கடிதம் எழுதியிருக்கிறாள். கடிதத்தோடை இப்ப பிறந்த தன்ரை பெட்டையின்ரை படமும் அனுப்பியிருக்கிறாள். அதைப் பார்த்திட்டு எண்டாலும் பேத்தியைப் பார்க்க நான் பறந்தோடி வருவன் எண்டு.....

எனக்கு இப்ப என்றாப் போலை இருக்கு...

தொண்ணூற்றைஞ்சாம் ஆண்டு. ஒக்ரோபர் மாதம் கடைசிக்கிழமை. வழக்கம் போல ஒருநாள் எரிஞ்சு போவார் பிளேனுகளிலை வந்து அரியாலைப் பக்கம் குண்டுகளைக் கொட்டிட்டுப் போனவங்கள்...

நானும், நாட்டுப் பணி செய்து கொண்டிருந்த எங்கடை மூத்தவளும் அறிவிச்சதைத் தொடர்ந்து, எண்பத்தொன்றிலை இருந்து தொண்ணூற்று அஞ்சாம் ஆண்டுவரை தமிழ் நாட்டில் தங்கியிருந்துவிட்டு என்ரை மனுசிக்காரி மற்றப் பிள்ளையளையும் கூட்டிக் கொண்டு வேண்டா வெறுப்போடைதான் எங்கடை மண்ணுக்கு வந்து சேர்ந்தவ.

எனது நண்பர் ஒருவர் வெளிநாடு சென்றிருந்த தனது சகோதரியின் வீட்டினை எங்கள் குடும்பம் வசிப்பதற்கென இலவசமாகவே தந்துதவினார்.

கிணறு, கக்கூசு, வசதிகளோடை நல்ல சுற்றுமதில் வீடு.

பெம்பிளைப் பிள்ளையள் இரண்டும் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியிலை படிக்கத் தொடங்கிச்சினம்.

மனுசிக்காரியின்ரை தகப்பன் படிச்ச பள்ளி என்று சொல்லி பொடிப்பிள்ளையை யாழ் மத்திய கல்லூரியிலை சேர்த்தனான் திரு சண்முகநாதபிள்ளை அப்ப அதிபராக இருந்தவர். எங்கடை வானதியின்ரை தகப்பன்.

பள்ளிக்கூடமெண்டும், ரியூசன் எண்டும் சேர்ச் எண்டும் அவையளின்ரை காலம் கழிஞ்சு கொண்டிருந்தது.

ரியூசனுக்கு காசு கட்டி அனுப்ப இல்லை. 'யூனிவர்சல்' ஐங்கரநேசனின்ரை உபயம்தான் அது!



அப்படி காலம் போய்க் கொண்டிருந்த போதுதான் அந்த அரியாலைக் குண்டுவீச்சு இடம் பெற்றது.

என்ரை நடவடிக்கைகளாலை எண்பத்தோராம் ஆண்டிலேயே பலவிதமான தேடுதல்கள் - சித்திரவதைகள் - கஷ்ரங்களுக்கு மத்தியில் கட்டுமரத்திலை கடல் கடந்து தமிழ்நாட்டுக்கு அகதியாகப் போன முதல் குடும்பம் என்ற பெயரோடை தொண்ணூற்று அஞ்சுவரை, எங்கடை மண்ணிலை இடம் பெற்ற குண்டு வீச்சுக்கள் செல்லடிகள் - துப்பாக்கிச் சூடுகள் - எதையுமே கண்டிராத என்ரை 'அப்பிராணி' மனுசிக்காரி அரியாலைக் குண்டு வீச்சு நடைபெற்ற அன்று அரைகுறையா வெட்டி வைச்சிருந்த பங்கருக்குள்ளை இறங்கி நின்று கொண்டு "யேசுவே.... யேசுவே.... யேசுவே...." என்று கண்ணீர் சொரிய மன்றாடிய காட்சி இப்பவும் என்ரை கண்ணுக்குள்ளை படமா ஓடுது....

அன்று இரவிரவாக யாருக்குமே நித்திரை இல்லை. எங்கடை வீட்டுக்கு மேலாலை அங்கையும் இங்கையுமா மாறி மாறி ஷெல்கள் கூவிச் சென்றன.

மனுஷிக்காரி ஒரே ஒப்பாரிதான்!

"என்னையும் என்ரை பிள்ளையளையும் அநியாயமாகக் கொல்லுறதுக்கே இங்கை கூப்பிடுவிச்சனீங்கள்... உங்களைக் கும்பிட்டுக் கேட்கிறன்... எங்களை அங்காலை அனுப்பி விடுங்கோ" என்று நச்சரிப்பு வேறை.

அவவுன்ரை தொல்லை தாங்காமல் அப்போது என்னிடம் இருந்த 'எனக்குச் சொந்தமில்லாத' ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு சாவகச்சேரிப் பக்கம் போய் வீடு தேடும் படலத்தை ஆரம்பித்தேன்.

நுணாவில் கிழக்கிலை ஒரு வீட்டிலை நாங்கள் தங்கிறதுக்கு அறை ஒன்று கிடைச்சிது. நண்பர் சிவபாலன்தான் அந்த உதவியைச் செய்து தந்தார்.

அன்று இரவு அடை மழை வேறை. 29ஆம் திகதி என்று ஞாபகம் எங்கடை ஊர் மகேந்திரத்தார்தான் தனது வாகனத்தைத் தந்து உதவினார். உடுப்புப் பைகளையும், குசினிச் சாமான்கள் சிலவற்றையும் எடுத்துக் கொண்டு இரவோடிரவாக நுணாவிலுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

நிரந்தரமாகவே நாங்கள் அங்கிருந்து இடம்பெயரப் போகின்றோம் என்ற உண்மை அன்று எமக்குத் தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் நுணாவிலுக்கு வந்து சேர்ந்த மறுநாள் எமது தாயக மண்ணின் வரலாற்று இடப்பெயர்வு நிகழ்வு இடம் பெற்றது.

அந்த நாளை யாழ்ப்பாணத்து மக்கள் - குறிப்பாகச் சொன்னால் வலிகாமத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் உயிர் உள்ளவரை என்றைக்குமே மறக்கமாட்டார்கள்.

அன்றைக்குப் பின்னேரம் இன்னும் சில பொருட்களை எடுத்துக் கொண்டு வருவம் என்று சொல்லி மகன் செந்திலையும் ஏற்றிக் கொண்டு ஸ்கூட்டரிலை சுண்டிக்குளிக்குப் போக வெளிக்கிட்டன்.

நாங்கள் அரியாலை மாம்பழம் சந்திக்குக் கிட்ட போகேக்கை சனங்கள் பதற்றப்பட்டுக் கொண்டும், அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டும் அலைஞ்சு கொண்டிருந்திச்சினம்.

"என்ன விசயம்....?" என்று விசாரிச்சன்.

வலிகாமத்து மக்கள் அனைவரையும் உடனடியாக அங்கிருந்து வெளியேறி வடமராட்சிக்கோ தென்மராட்சிக்கோ பாதுகாப்பாகப் போய்ச் சேரும்படி இயக்கம் அறிவிச்சிருக்கு என்று சொல்லி சனங்கள் மூட்டை முடிச்சுகளைக் கட்டத் துவங்கியிட்டுதுகள்...

எனக்கு இருக்க வீடு தந்து அன்பா உபசரிச்ச அந்த நண்பரிடம் தான் முதலில் சென்றேன். நிலைமையைச் சொல்லி கிடைச்சதை எடுத்துக் கொண்டு வெளிக்கிடுங்கோ என்று அவையளைக் கேட்டேன்.

"இந்தப் பெரிய பங்களாவையும், இவ்வளவு சொத்துப்பத்தையும் விட்டுப் போட்டு நாங்கள் எப்படி வெளிக்கிடுகிறது...? நீங்கள் போங்கோ நாங்கள் வர இல்லை...." என அவர் பிடிவாதமாக மறுக்கவே என்னால் எதுவுமே செய்ய முடியாமல் போனது.

இடப்பெயர்வு நடந்து இரண்டு மூன்று கிழமைகளுக்குப் பிறகுதான் அவர்கள் கொடிகாமத்தில் இருப்பதாக அறிந்து தேடிச் சென்றேன்.

கோடிக்கணக்கு பெறுமதியான மாடிவீடு... வாகன வசதி, வர்த்தக நிலையம் என வசதியாக வாழ்ந்த அந்தக் குடும்பம் கொடிகாமம் சந்தியிலை ஒரு கடைத் திண்ணையிலை மூத்த பெம்பிளைப் பிள்ளையையும் வைச்சுக் கொண்டு இருந்த கோலம் என் விழிகளில் நீரை வரவழைத்தாலும் அப்போதிருந்த சூழ்நிலையில் என்னால் எதுவுமே செய்ய முடியாத நிலை.



தொண்ணூற்று ஆறாம் ஆண்டு மார்ச் மாதம் பிள்ளையளையும் கூட்டிக் கொண்டு நான் புளியங்குளத்திற்கு வந்து சேர்ந்திட்டன். மனுசிக்காரி இரண்டாவது பெட்டையையும் கூட்டிக் கொண்டு கொழும்புக்குப் போய்ச் சேர்ந்திட்டா....

என்னைக் கலியாணம் முடிச்ச காலத்திலையிருந்து என்ரை அரசியல் நடவடிக்கைகளாலை காலத்துக்குக் காலம் பலவிதமான கஸ்ரங்களையும் அனுபவித்துக் கொண்டு வந்த அவவாலை வன்னியிலை வசிக்கிறதுக்கு ஏலாமல் இருந்திருக்க வேணும். நெடுக யோசிச்சு யோசிச்சு அவவாலை ஒரு சின்ன விசயத்தையும் தாங்கேலாது....

எழுபத்து ரெண்டிலை நான் கொழும்பிலை அரச திணைக்களம் ஒன்றிலை வேலை செய்து கொண்டிருந்த பொழுதுதான் அவவைக் காதலிச்சுக் கலியாணம் முடிச்சனான். காதிலை கழுத்திலை ஒன்றும் இல்லாமல் உடுத்த உடுப்போடைதான் அவங்கடை வீட்டிலை இருந்து அவவைக் கூட்டிக் கொண்டு வந்தனான். நாலு பிள்ளையள் பிறந்த போதும் நான்தான் அவவுக்குப் பணிவிடைகள் செய்தனான். சரக்கு அரைச்சு பத்தியம் வைச்சு நான்தான் குடுத்தனான். ஆனால் பிள்ளையளைப் படிக்க வைச்சதிலை அவவுக்குத்தான் முழுப்பங்கும். நான் அங்காலையும் இங்காலையும் என்று அலைஞ்சு கொண்டிருந்தனான். ஏதோ கிடைச்சதை வைச்சுக் கொண்டு நேரகாலத்துக்கு சாப்பாடு தண்ணி வென்னி இல்லாட்டியும் நாலு பிள்ளையளையும் நல்ல படியா தமிழ் நாட்டிலே வைச்சு ஆங்கில மொழி மூலம் படிப்பிச்ச படியாத்தான் அதுகள் நாலும் இன்றைக்கு நல்லபடியா இருக்குதுகள்...

"தமிழுக்காகக் கத்துறவர் -உரிமைக்காகப் போராடுறவர் தன்ரை பிள்ளைகளை மாத்திரம் இந்தியாவிலை வைச்சு இங்கிலீஸ் படிப்பிக்கிறார்" என்றெல்லாம் அந்த நாளையளிலை கனபேர் என்னைத் திட்டித் தீர்த்தவை.

எண்பத்தொன்றிலை எங்கடை மண்ணிலை இருக்க ஏலாமல் கடல் கடந்து தலைமறைவாகி விட்டன்.

பகல் இரவென்றில்லாமல் - நட்ட நடுச்சாமம் என்றில்லாமல் வேட்டை நாயள் மாதிரி 'அவங்கள் என்னைத் தேடி, தொடர்ந்து என்ரை மனுசியையும் பிள்ளையளையும் தொல்லைப்படுத்திய படியாற்தான் அவையளையும் தம்பிமார் கடல் கடந்து கூட்டி வந்து அங்காலை என்னிடம் ஒப்படைச்சவை. அந்தக் காலத்திலை எனக்கும் என்ரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்துக்கும் நடந்த இந்த விபரங்கள் எல்லாம் என்மீது வசைமாரி பாடினவைக்குத் தெரிஞ்சிருக்க நியாயமில்லை. அவையள் மாதிரி ஆட்களுக்கு கடந்த கால எங்கடை வாழ்க்கையைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமும் எனக்கில்லை.

அறிஞ்சிருந்தவையின்ரை நெஞ்சங்களிலை அது என்றைக்கும் நிலைச்சிருக்கும்.

அந்த நேரம் நான் அவங்களோடை பிடிபட்டிருந்தால் எண்பத்தி மூன்றிலை வெலிக்கடையிலை படுகொலை செய்யப்பட்ட தங்கத்துரை, குட்டிமணி ஆட்களோடை நானும் ஒருவனாக இருந்திருப்பேன்.

தொண்ணூற்று ஆறு மார்ச்சிலை புளியங்குளத்துக்கு வந்து கடன்கிடன்பட்டு எழுபத்தையாயிரம் ரூபா அளவிலை செலவழிச்சு ஒரு வீட்டைக் கட்டினன். 'வெற்றி நிச்சயம்' என்று சொல்லிக் கொண்டு வந்த பரதேசியள் பதின்மூன்று மாதங்களுக்கு மேல எங்களை அங்கையும் இருக்கவிட இல்லை.

ஒரு மாதம் புதூர் நாகதம்பிரான் கோவிலடியிலை போய்த் தங்கி-யிருந்தம். திரும்பவும் புளியங்குளத்துக்கு திரும்பிப் போகலாம் என்ற அங்கலாய்ப்போடுதான் அங்கை தங்கி இருந்தனாங்கள். அங்கை தன்னும் நிம்மதியாக இருக்க விட்டாங்களோ பாவியள்.....

காட்டு வழியாலை - கல்லிருப்புப் பாதையாலை வவுனிக்குளத்திலை போய் மிதந்தம். யாழ்ப்பாணத்திலை முன்பு எங்கடை பண்பாட்டுக் கழகத்திலை வேலை செய்த நீர்வேலிப் பிள்ளை ஜீவா அங்கை இருந்தார். அவவின்ரை உதவியாலை பாலையடியிலை அவவின்ரை மாமி ஆட்களின்ரை வளவிலை ஒரு கொட்டிலைப் போட்டுக் கொண்டு இருந்தம்.

துலைவார் அங்கையாவது நிம்மதியாக இருக்க விட்டாங்களோ....? மாங்குளத்திலையும் மூன்று முறிப்புச் சந்தியிலையும், கல்லிருப்புக் கோயிலடியிலையும் இருந்து கொண்டு மாறிமாறிச் ஷெல் அடிச்சாங்கள். கடைசியிலை வவுனிக்குளம் சேர்ச்சிலையும், பாலிநகர்ச் சந்தியிலையும் விமானங்கள் குண்டு வீசி குஞ்சு குறுமானுகள் எண்ட வேறுபாடில்லாமல் எங்கடை சனங்களை சதைத் துண்டங்களாப் பிச்செறிஞ்சாங்கள்....

வவுனிக்குளம் சேர்ச்சுக்கு குண்டு போட்டிட்டாங்கள் என்றதைக் கேள்விப்பட்ட உடனை பதறி அடிச்சுக் கொண்டு நான் அங்கை ஓடினன்....



கெந்தக நாற்றமும்.... பிணவாடையுமா.... கால்களில் ஏதோ இடறியது.... நீண்ட முடியோடு கூடிய இளம் பெண் ஒருத்தியின் தலை மாத்திரம் என் காலடியில்.....

எனக்கு எப்படி இருந்திருக்கும் என்று ஒரு கணம் நினைச்சுப் பாருங்கோ....

வவுனிக்குளத்திலை, பாலையடியிலை நாசமறுப்பானுகள் போட்ட குண்டுகளோடை மல்லாவிக்கு வந்து சேர்ந்தம்.

ஓராம் பிரிவுச் சந்திக்குக் கிட்ட இடபாவின்ரை பிள்ளையார் வளவிலை இப்ப நிம்மதியா இருக்கிறம்.

இப்பதான் எங்கடை சனம் ஓரளவு நிம்மதியா மூச்சு விடுகிதுகள்.... சமாதானம், பேச்சுவார்த்தை, இடைக்கால நிர்வாகம் என்று ஓரளவிற்கு ஆறுதல் படுற நேரத்திலையும் அடிமனதிலை பதற்றம் இல்லாமல் இல்லை.

தீவகத்திலை - வடமராட்சியிலை, கிழக்கிலை காஞ்சிரங்-குடாவிலை- திருகோணமலையிலை என்று இனவெறி பிடிச்சவங்கள் திட்டமிட்டுச் செய்யிற வெறியாட்டங்களாலை மீண்டும் எங்கை சண்டை துவங்கியிடுமோ என்று நெஞ்சத்திலே ஏக்கமாக இருக்கு. இந்த ஏக்கங்கள் என்ரை நெஞ்சத்திலை மாத்திரமல்ல.... எல்லாத் தமிழ் நெஞ்சங்களிலையும் தான்!

நான் வன்னிடை விட்டிட்டு வரமாட்டன் என்று சொல்றதுக்கு காரணங்கள் இல்லாமல் இல்லை.

"ஒரு சிகரட் பற்றவைச்சு முடிக்கிற நேரத்துக்குள்ளை சாரம் கட்டின பொடியளை அழிச்சு முடிக்கிறம்" என்று சொல்லி பக்கத்து நாட்டுக்காரன் படை எடுத்து வந்து ஆடாத கூத்துக்களை எல்லாம் ஆடேக்கை எங்கடை பிள்ளையளுக்கு அடைக்கலம் குடுத்து ஆதரிச்சு அவையளை வளர்த்துவிட்டது இந்த வன்னி மண்தான்!

எண்பத்தேழு கடைசியிலை ஒரு கொஞ்சப் பேர்தான் அலம்பல் காட்டுக்கும், வன்னியிலை ஒரு சில பகுதிகளுக்கும் வந்து சேர்ந்தவை. தொண்ணூற்றின் முற்பகுதியிலே இங்கிருந்து ஆயிரக்கணக்கிலை அணிவகுத்துப் போய்த்தான் அவங்களைக் கப்பல் ஏற வைச்சவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்ணூற்று ஐந்தின் பிற்பகுதியிலையும் தொண்ணூற்றாறி-லையும் யாழ் குடா நாட்டுக்கை இருந்து எங்டை சனங்கள் இலட்சக்-கணக்கிலை அநியாயமா அழிஞ்சு போயிடக் கூடாதென்பதற்காக வன்னிக்கு வாங்கோ என்று சொல்லி தங்களோடை பல லட்சம் மக்களை அழைச்சு வந்த போது அத்தனை லட்சம் மக்களுக்கும் தங்குமிடம் கொடுத்து உணவு கொடுத்தவர்கள் வன்னி மக்கள்

"வன்னியை விட்டுக் கலைக்கிறன்"....... அவையளுக்கு கடலிலை விழுந்து சாகிறதைத் தவிர வேறு வழியில்லை" என்று ஸ்ரீலங்காக்-காரங்கள் கும்மாளமிட்ட போது போராளிகளோடும், இடம் பெயர்ந்து வந்த மக்களோடும் வன்னி மக்கள் தாங்களும் ஒன்றிணைந்து மக்கள் கட்டுமானமாக எழுந்து போர்க்களம் புகுந்தபோதுதான் எதிரிகளை எமது தாயக மண்ணிலிருந்து பெருமளவு விரட்டியடிக்க முடிந்தது.

அடுத்தது பாருங்கோ....

நான் பிறந்து வளர்ந்த வல்வை மண்ணிலை ஓரடி நிலம் தானும் எனக்குச் சொந்தமாக இல்லை. இதைச் சொல்லேக்கை தான் எனக்கு ஞாபகம் வருகிது... 'தம்பி' முந்தி எங்கடை வீட்டிலை வந்து புழங்கின நேரங்களிலை என்ரை மனுஷி எங்களுக்குக் காணி சொந்தமா இல்லை என்று சொல்லேக்கை அவர் பகிடியாகச் சொல்லுறவர்...

"அக்கா நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ... நான் வல்லையிலை உங்களுக்குக் காணி தாறன்" என்று சொல்லி. வல்லை மக்கள் குடியிருக்க முடியாத பொட்டல்வெளி என்ற உண்மை கொழும்-புக்காரியான என்ரை மனுசிக்கு அப்ப தெரியாது. இப்ப அந்தப் பொட்-டல்வெளியிலை தன்னும் குடியிருக்கலாமென்று நான் நினைச்சாலும் முடியாது..... அங்கை இப்பவும் அவங்கடை ஆட்சிதான்!

இப்ப சொல்லுங்கோ...

"வன்னி மண்ணையும் மக்களையும் விட்டிட்டு நான் எங்கையும் வரமாட்டன்" என்று சொல்றதிலை நியாயம் இருக்கோ இல்லையோ என்று!

❑ ❑ ❑ ❑ ❑

2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நண்பர் தங்கவேலாயுதத்தின் வாழ்க்கை பன்முக அனுபவங்களை பல தளங்களில் வைத்துப் பார்த்துள்ள ஒன்று. உண்மையில் இங்கு தரப்பட்டுள்ள சிறுகதைகள் எல்லாமே தங்கவேலாயுதத்தின் வாழ்க்கையின் சுவடுப் பதிவுகள்தான். நிஜங்களைப் புனைகதைகளாக்குகிறார்.

தங்கவேலாயுதத்தின் சிறுகதைகளை வாசிக்கும்பொழுது அவரது வாழ்க்கை அனுபவங்களின் முத்திரையே வலுவுடன் விழுந்துள்ளது. இந்தக் கதைகளினூடே ஒரு "மானுடத்தேடல்" மிகுந்த வலுவுடன் வெளிவருகிறது. நண்பர் தங்கவேலாயுதம் வாழ்க்கையை மானுட நிலைகள் வெளிப்படுவதற்கான சூழமைவாகவே காண்கின்றார்.

நண்பர் தங்கவேலாயுதத்தின் பிரதான கலையார்வத்துறை நாடகம்தான்· எனவே அவரது புனைகதைகள் எழுத்துச் சிலுசிலுப்புகள் அற்ற வாழ்க்கையின் "நாடகத்துவ" கணங்களையும் சம்பவங்களையும் காட்டி நிற்கின்றன. அந்த வகையில் இந்தக் கதைகளினூடே ஒரு நாடகத்தன்மை அதாவது பாத்திரங்களின் அசைவியக்கத்தில் ஏற்படும் அதிர்வுகள் துல்லியமாகத் தெரிகின்றன. நண்பர் தங்கவேலாயுதம் அவர்களின் "வாழ்க்கையின் சுவடுகள்" அவரது ஆளுமையின் ஆழ அகலத்தையும், மனித சிரத்தையையும், தேடலையும் நன்கு வெளிக்கொணர்கின்றன. திரு. தங்கவேலாயுதத்தின் அரங்க சாதனைகளுக்கான தளமாக "அவரது வாழ்க்கையின் சுவடுகள்" காட்டும் இந்த அனுபவங்கள் அமையும் என்றே கருதுகின்றேன்.

ஒரு நாடகக்காரனின் இலக்கியப் படைப்பிலும் இந்த மானுடத்தேடலே மேலோங்கி நிற்கின்றது. திரு.ஆ. தங்கவேலாயுதத்திற்கு என் வாழ்த்துக்கள்!

**பேராசிரியர் கா.சிவத்தம்பி**

நடராஜகோட்டம்

வல்வெட்டித்துறை

ISBN 955-99504-0-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org